வெற்றித்திருமகன் எம்.ஜி.ர்.நூல்வரிசை - 7

கலியுகப்போராளி எம்.ஜி.ஆர்



முனைவர் செ. இராஜேஸ்வரி
எம்.ஏ.,எம்.ஃபில்., பிஹெச்.டி

சந்திரோதயம் பதிப்பகம்
3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Ph. : 7010997639





வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 7

கலியுகப்போராளி

எம்.ஜி.ஆர்

முனைவர் செ. இராஜேஸ்வரி
எம்.ஏ.,எம்.ஃபில்., பிஹெச்.டி

பதிப்பகம்

சந்திரோதயம் பதிப்பகம்
3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018
தொலைபேசி எண் : 7010997639

நூல் விவரம்

நூலின் பெயர்	:	*எம்.ஜி.ஆர் ஒரு கலியுகப் போராளி*
நூல் வரிசை	:	*7*
ஆசிரியர்	:	*முனைவர் செ.இராஜேஸ்வரி*
பதிப்பாளர்	:	*சந்திரோதயம் பதிப்பகம்* *3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,* *கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018* *தொலைபேசி எண் : 7010997639*
பதிப்பு	:	*முதல் (ஜனவரி 2019)*
மொழி	:	*தமிழ்*
பக்கங்கள்	:	*128*
விலை	:	*200*

அன்பு காணிக்கை

தெய்வத்தாய்க்கு அன்பு காணிக்கை.





நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழிபெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஒங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டார். 1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles போன்ற பனுவல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணை பதிப்பாசிரியராக [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளிவந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1987 முதல் எபிரேய தமிழ் அகராதி; கிரேக்க தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து பல ஆண்டுகள் தீவிரமாக பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி,

மதுரை அமெரிக்கன் கல்லூரிகளிலும் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராக பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றியபோது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்கு தமிழ் கற்பிக்க ஒரு பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்த பாட நூல் அங்கு பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்கு செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க ஒரு ஆங்கில பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார். தற்போது மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கிறார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்ட்டீஸ் என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக பற்றி நிறைய தெரிந்து வைத்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர் பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். மொழியின் கலையும் பண்பாடும் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலை உருவாக்கியவிதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களை பார்க்க திரையரங்குக்கு அழைத்து சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும்

பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றை தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர் பற்றி நூறு கட்டுரைகளுக்கு தகவல் சேகரித்து வைத்திருக்கும் இவர் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இதழில் எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி என்ற பெயரில் 16 கட்டுரைகளை வெளியிட்டார். அதனை தொடர்ந்து பெண்கள் போற்றும் பெருந்தலைவர் எம்.ஜி.ஆர். என்ற பெயரில் ஒரு கட்டுரை தொடரை அதே இணைய இதழில் எழுதி வருகிறார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார்.

எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுதவேண்டும் என்பது இவர் இலட்சியம். இவர் எம்.ஜி.ஆர் குறித்து மூன்று நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும். 2.எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம், 3.எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகளை விளக்கும் சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா, 4. வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட 5. மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர், 6.எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி, ஏழாவதாக "எம்.ஜி.ஆர் ஒரு கலியுகப்போராளி" என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.

இவர் எழுதிய சிறுகதைகள் இணைய இதழ்களில் வெளிவந்தன. இப்போது நூலாக தொகுக்கப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்

1

எம்.ஜி.ஆர் ஒரு கலியுகப் போராளி

'என் வாழ்க்கையில் நினைவு தெரிந்த நாள் முதல் இன்றுவரை போராட்டமாகவே இருக்கிறது' என்று எம்.ஜி.ஆர். ஒரு கூட்டத்தில் பேசினார். அவர் திரைப்படங்களில் நடிக்க வாய்ப்பு கேட்ட போது அல்லது திரைப்பட வாய்ப்புகள் கிடைத்து கதாநாயகனாக நடிக்க வந்தபோது அல்லது திமுகவில் சேர்ந்து திமுகவின் பிரச்சார பீரங்கியாக இருந்தபோது இவ்வாறு பேசியது கிடையாது. அவர் முதலமைச்சராகி மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்று அவருக்குத் தோல்வி என்பதே கிடையாது என்று உறுதி செய்யப்பட்ட பிறகு ஒருநாள் ஒரு பொதுக்கூட்டத்தில் இவ்வாறு பேசுகிறார். ***'எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் இன்றுவரை போராட்டமாகவே இருக்கிறது'*** *என்கிறார்.*

எம்.ஜி.ஆரின் வாழ்க்கையில் இந்தப் போராட்டம் ஏன்? அவருடைய வாழ்க்கையில் நினைவு தெரிந்த நாள் முதல் போராட்டம் நடந்து கொண்டே இருக்கிறது. இந்த போராட்டம் எதை நோக்கியது. அவரைத் தாக்க வரும் எந்த சக்தியை எதிர்த்து அவர் போராடுகிறார். அவர் பிழைப்புக்காக போராடிய காலம் முடிந்துவிட்டது. புகழுக்காக உழைத்த காலமும் முடிந்து விட்டது. இப்போது புகழின் உச்சியில் இருக்கும் இந்த காலகட்டத்தில் அவர் 'நான் போராடிக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்வதன் காரணத்தை நாம் சற்று ஆழமாகச் சிந்தித்து பார்க்கவேண்டும்.

வறுமையை எதிர்த்து அவர் சிறுவயதில் போராடினார். ஏறத்தாழ 40 வயதில் சினிமாவில் வாய்ப்பு கிடைத்தபோது முதுமையை எதிர்த்து போராடினார். அறுபது வயதில் அரசியலில் புதிய கட்சி தொடங்கியபோது எதிர்க்கட்சியாக தீய சக்தி என்று குறிப்பிட்ட திமுகவை எதிர்த்து போராடினார். எழுபது வயதில் நோயை எதிர்த்து போராடினார். இந்தப் போராட்டங்கள் எல்லாம் மற்றவர்கள் கூட அவர்கள் வாழ்வில் சந்தித்த போராட்டங்கள் தான். மேலும் இந்தப் போராட்டங்களில் அவர் ஒவ்வொரு முறையும் வெற்றி பெற்று தான் இருக்கிறாரே தவிர தோல்வி அடைந்தது கிடையாது. இப்பின்னணியில் ஆராயும்போது அவர் 'நான் போராடிக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்வது மேற்கூறிய வறுமை, முதுமை, நோய், வெற்றி, போன்ற விஷயங்களுக்காக மட்டுமல்ல இவற்றிற்கும் அப்பாற்பட்ட ஒரு நிரந்தரமான விஷயத்துக்காக அவர் தொடர்ந்து போராடி வருவது வெளிப்படுகிறது.

எம்.ஜி.ஆர். படங்களுக்கு என்று ஒரு தனித்தன்மையை அவர் வடிவமைத்திருந்தார். தன்னிகரில்லாத தலைவனை கொண்ட ஒரு காப்பியமாக ஒவ்வொரு படமும் உருவாக்கப்பட்டது. அதில் நல்லவன் வாழ்வான்; கெட்டவன் அழிவான், அல்லது அவன் திருத்தப்பட வேண்டும் என்பது கருப்பொருளாக அமைந்தது. நாடு, நகர், வர்ணனைகள் இடம் பெற்றன. பெண்கள் உயர்வாக மதிக்கப்பட்டனர். உடல் வலிமையும் மனத்துணிவும் அறிவுத்திறனும் வெற்றிக்கு அடிப்படையாகும் என்பது இளைஞர்களுக்கு உணர்த்தப்பட்டது. தன்மானமும் தன்னம்பிக்கையும் அவரது படங்களால் ரசிகர்களுக்கு ஊட்டப்பட்டது.

சிறந்த பண்புகளோடு அவருடைய பெரும்பான்மையான படங்களை அவர் உருவாக்கியதன்

பின்னணி யாது என்றால், ஒன்று, **இந்தப் பண்புகளே மனிதனின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்புகள் ஆகும் என்று எம்.ஜி.ஆர். கருதினார்.** மற்றொன்று, இந்தப் பண்புகளை சாஸ்வதமாக பெறுவதற்கு மனிதன் ஒவ்வொரு நாளும் போராட வேண்டிய அவசியம் இருப்பதால் அந்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அதில் வெற்றி காண வேண்டும் என்பதற்கான தூண்டுதலை [மோட்டிவேஷன்] அவர் தன் படங்களின் மூலமாக அளித்தார். இதுவே கலியுகத்தை எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் ஆகும். அந்த போராட்டத்தில் அவர் வெற்றியும் பெற்றார். தன்னைப் பின்பற்றிய மக்களை அப்புரட்சிப் பாதையில் அழைத்தும் சென்றார்.

மனிதன் தன் வாழ்வில் ஒவ்வொரு நாளும் நல்லவனாகவும், வல்லவனாகவும், வாழ்வதற்காக போராட வேண்டும். போராடாமல் ஒருவன் நல்லவனாக வல்லவனாக வாழ இயலாதா? எனக் கேட்டால் இயலாது என்பதுதான் இந்து சமய புராணங்கள் கூறுகின்ற ஒட்டுமொத்த கருத்தாகும். இப்போது நடப்பது கலியுகம் என்பதால் இந்தக் கலியுகத்தில் நல்லவர்கள் வாழ கூடிய காலகட்டம் இல்லை கெட்டவர்களுக்கு தான் இது காலமாக இருக்கிறது. எம்.ஜி.ஆர். முதன் முதலாக விக் வைத்து நடித்த சமூகப்படம் 'திருடாதே'. அப்படத்துக்கு பெயர் சூட்டும் போது அந்த கதை வசனத்தை எழுதிக் கொடுத்தவர் 'நல்லதுக்கு காலமில்லை' என்று தலைப்பு சூட்டியிருந்தார். எம்.ஜி.ஆர். அந்த தலைப்பை வைக்க கூடாது என்று சொல்லிவிட்டு வேறு நல்ல தலைப்பு சொல்லும்படி சுற்றி இருந்தவர்களிடம் தெரிவித்தார். பிறகு திருடாதே என்ற தலைப்பு தெரிவிக்கப்பட்டதும் அத்தலைப்பை தெரிவித்த நபருக்கு பரிசு அளித்து சிறப்பு செய்தார்.

'நல்லதுக்கு காலமில்லை' என்று எம்.ஜி.ஆரே சொல்லி விட்டார் என மக்கள் நன்மையின் மீது நம்பிக்கை வைக்க தயங்குவார்கள் என்று எம்.ஜி.ஆர். காரணம் தெரிவித்தார். அந்த காலகட்டத்திலேயே எம்.ஜி.ஆரின் வார்த்தைக்கு மக்கள் மிகுந்த மதிப்பு அளித்தனர். வாத்யார் என்று சும்மா உதட்டளவில் சொல்லவில்லை. உள்ளத்தால் வாழ்வியல் வழிகாட்டியாக ஆன்மீக குருவாகப் போற்றினர். இதனை எம்.ஜி.ஆர். நன்கு உணர்ந்திருந்ததால் அந்த தலைப்புக்கு சம்மதிக்க மறுத்துவிட்டார். நல்ல பாதையில் மக்களை வழி நடத்தி செல்லும் தலைவராக இருந்தார். எம்.ஜி.ஆரை ஒரு முன்மாதிரியாக கொண்டு வாழ வேண்டும் என்று மக்கள் விரும்பினர். அவர் எது செய்தாலும் நல்லதே செய்வார். எனவே, அவரை பின்பற்றினால் நாமும் நல்லவர்களாக இருக்கலாம் என்று நம்பிய ரசிகர்கள் எம்.ஜி.ஆரை நல்லவர் வல்லவர் என்று முழுக்க முழுக்க நம்பினர்.

இந்த கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனும் தான் நல்லவனாக வாழ ஒவ்வொரு கணமும் போராட வேண்டும். நல்லவனாக வாழ்வதற்கு நல்லவன் என்று பெயர் எடுப்பதற்கு மனிதர்கள் போராடவேண்டிய காலகட்டமே கலியுகம் ஆகும். **இந்தக் கலியுகம் அவருக்கு வாரிவழங்கிய தீய வாய்ப்புகளை உதறித்தள்ள எம்.ஜி.ஆர். போராடினார். தீய வாய்ப்புகளை புறந்தள்ளிவிட்டு நல் வாய்ப்புகளைத் தனக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படுத்தித் தருவதற்காக எம்.ஜி.ஆர். போராடினார்.** இந்தப் போராட்டத்தில் தான் அவர் முழுமையாக வெற்றி பெற்றதனால் அவர் வாழ்ந்த காலத்திலும் வாழ்ந்து மறைந்து கால் நூற்றாண்டுக்கு மேல் ஆன பிறகும் கூட தமிழகத்தின் தனிப்பெரும் தலைவராக விளங்கி வருகிறார்.

வறுமையின் போது அவர் தாய் தன் பிள்ளைகள் நல்லவர்களாக வளர வேண்டும் என்று கருதியதால்

அவர்களை பாய்ஸ் கம்பெனிக்கு நடிக்க அனுப்பினார்கள். எம்.ஜி.ஆரும் அவரது அண்ணனும் நல்லவனாக வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் தான் சிறு வயதில் பெற்ற தாயை பிரிந்து அடியும் உதையும் வாங்கி, தூக்கத்தை இழந்து நாடகம் இருக்கும் நாட்களில் மட்டும் உணவு, உடை, கொடுக்கப்பட்டு, சாப்பாட்டு பந்தியில் உட்கார்ந்த பிறகும் கூட விரட்டப்பட்டு பல அவமானங்களுக்கு உள்ளாகி போராட்டமான வாழ்க்கையை சிறுவயதிலேயே எதிர்கொண்டனர். இவர்கள் கலியுகதேவனுக்கு கட்டுப்பட்டு தீய செயல்களில் ஈடுபட்டிருந்தால் இவ்வளவு சிரமமும் அவமானமும் ஏற்படாமல் கூட இருந்திருக்கலாம்.

ஒளி விளக்கு படத்தில் **'நான் ஐந்து வயதில் பசிக்காக திருடினேன்'** என்று எம்.ஜி.ஆர். பேசும் ஒரு வசனம், அவர் வாழ்க்கையில் நடந்திருக்க வாய்ப்பு இல்லாமல் போனதற்கு காரணம் கலியை எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் ஆகும். கலியுகத்தில் தீமைக்கான வாய்ப்புகள் ஏராளமாக கண்ணுக்கு எதிரே தெரிவது இயல்பு. ஆனால் அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு நன்மையை நோக்கி போராடி முன்னேறுவது மிகக் கடினமான சவால். அதிலும்



சிறுவர்களுக்கு மிக மிகக் கடினம். ஒரு சமயம் தன் அண்ணன் தூங்கும்போது அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா, அவரிடமிருந்து மூச்சு வெளிப்படுகிறதா, இறந்துவிடுவாரோ, நமக்கிருக்கும் ஒரே ஆதரவையும் நாம் இழந்து விடுவோமோ, என்றெல்லாம் மனதிற்குள் கலங்கி தவித்து எம்.ஜி.ஆர். அவர் அருகே சென்று உட்கார்ந்து அண்ணன் மூச்சுவிடுவதை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தாராம். இச்சம்பவத்தை அவர் தன் வரலாற்று நூலில் எடுத்துரைக்கிறார்

தீமையை எதிர்த்து கலியுக தேவனை எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் எளிதானதன்று; நல்லவராக வாழ விரும்பும் எல்லோரும் இந்த போராட்டத்தை எதிர்கொள்ளத்தான் வேண்டும். இது அனைவருக்கும் தெரிந்ததுதான். இதற்கும் எம்.ஜி.ஆர். நடத்திய போராட்டத்திற்கும் என்ன வித்தியாசம் என்றால் மற்றவர்களெல்லாம் தான் நல்லவனாக வாழ வேண்டும் என்று கருதி தனக்காக மட்டுமே அல்லது தன் குடும்பம் சுற்றம் நட்பு வட்டாரத்திற்கு மட்டுமே போராடினர். ஆனால் எம்.ஜி.ஆர். ஒருவர் மட்டும் மனிதகுலத்துக்காக ஜாதி மத இன பேதமின்றி அனைத்து மனிதர்களும் நல்லவராக வாழ வேண்டும் என்று போராடினார்.

எம்.ஜி.ஆர். தன்னை சந்தித்தவர்கள் தன் படங்களை பார்ப்பவர்கள் தன்னுடன் பேசுகின்றவர்கள் தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பவர்கள் என்று மட்டும் கருதாமல் தன்னைப்பற்றி அறியாதவர்களும் நலமாக வாழ வேண்டும்; அவர்களுக்கும் நாம் உரிய மரியாதையை அளித்து அவர்களுக்கு சிறப்பு செய்ய வேண்டும் என்று எம்.ஜி.ஆர். தன் வாழ்நாள் முழுக்க கலியை எதிர்த்து நன்மையை நோக்கி நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார். திரைப்படக் கலையை கருவியாகக்

கொண்டு இந்த கலியுகப் போராட்டத்தை எதிர்கொண்டார். அதில் வெற்றியும் பெற்றார்.

'உலகம் சுற்றும் வாலிபன்' படப்பிடிப்பிற்காக ஏராளமான பொருட்செலவில் 25 பேர் கொண்ட ஒரு பெரும் குழுவை அழைத்து கொண்டு சிங்கப்பூர், ஜப்பான், ஹாங்காங், பாங்காக் என்று சுற்றிவந்து படப்பிடிப்பை நடத்திய எம்.ஜி.ஆர். எந்த இடத்திலும் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மனிதர்களைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டு அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மனிதநேயம் போற்றும் மாண்புடையவராக இருந்து வந்தார். **அதிக செலவில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது அந்த நாட்டின் நடிகர் ஒருவர் இறந்து விட்டதாக அவருக்கு தகவல் கிடைத்தது.** உடனே தன் படப்பிடிப்பை நிறுத்தி விட்டு அந்த ஹாங்காங் நடிகரின் உடல் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு சென்று தன் குழுவினருடன் அவர் இறுதி மரியாதை செலுத்தினார். ஹாங்காங் திரையுலகம் அதிர்ந்துவிட்டது,

இறந்துபோன நடிகருக்கும் அங்கு இருந்த மற்றவர்களுக்கும் அதுவரை எம்.ஜி.ஆர். யார் என்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அங்கு எம்.ஜி.ஆரின் படப்பிடிப்பு குழுவினர் சென்ற பிறகுதான் இங்கு ஒரு தமிழ்ப் படத்தின் படப்பிடிப்பு நடக்கிறது. அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள் என்பது தெரியும். எம்.ஜி.ஆர். போய் அந்த இறுதி மரியாதை செலுத்துவதால் அவருக்கு பெரியதாக எந்த சிறப்பும் கிடைத்துவிடப் போவதில்லை. ஆனால் தன்னைப் போன்ற ஒரு சக நடிகன் இறந்துவிட்டான் அதை பொருட்படுத்தாமல் அவனுக்கு இறுதி மரியாதை செய்யாமல் அவரவர் அவரவர் பாட்டுக்கு தத்தம் வேலைகளைச் செய்து கொண்டிருந்தால் அது நடிப்பு என்ற தொழிலுக்கே அவமானம் என்று அவர் கருதினார்.

ஒருவர் செய்யும் தொழிலே தெய்வம் என்று கருதி, சக தொழிலாளிக்கு மதிப்பளிக்க வேண்டும். தொழிலுக்கு வழங்கும் மதிப்பு தொழிலாளிக்கும் கிடைக்கும் என்பதால் எம்.ஜி.ஆர். அந்த நடிகருக்கு இறுதி மரியாதை செலுத்த தான் மட்டும் செல்லாமல் திரையுலகம் சார்ந்த தன் குழுவினர் 25 பேருடன் சென்று சிறப்பான மரியாதை செலுத்தினார். வேறொருவராக இருந்திருந்தால் அந்த செய்தியை காதில் வாங்கிக் கொண்டதை பொருட்படுத்தாமல் தன் வேலையை தொடர்ந்து செய்து கொண்டிருப்பார் அல்லது ஒருவரை மட்டும் பேரளவுக்கு போய் மரியாதை செலுத்திவிட்டு வரும்படி செய்திருக்கலாம், அல்லது தன் குழுவைச் சேர்ந்த யாரோ ஒருவரை அனுப்பி விட்டு மீதி பேர் அன்று ஓய்வெடுத்துக்கொண்டு அல்லது ஷாப்பிங் பண்ணிக்கொண்டு இருந்திருக்கலாம். எம்.ஜி.ஆர். உடன் சென்ற அந்த 25 பேரில் ஒருவருக்காவது மேற்கூறிய யோசனைகள் தோன்றியிருக்கும். எதற்கு இவர் நம் அனைவரையும் சேர்த்து அழைத்துக் கொண்டு போகிறார்; இவரோ அல்லது வேறு ஒருவரோ போயிருக்கக் கூடாதா; நம்மை அவர்களுக்கு தெரியவா போகிறது; இது வெட்டி வேலை தானே; வந்த வேலையை விட்டுவிட்டு இந்த வேலை நமக்கு அவசியமா; என்று நினைத்திருக்கலாம் இதுதான் சராசரியாக ஒரு மனிதனுக்கு தோன்றக்கூடிய எண்ணம். ஆனால் எம்.ஜி.ஆர். சராசரி மனிதர் அல்ல. அவர் இத்தகைய எண்ணங்களை எதிர்த்து போராடி வந்த ஒரு கலியுக போராளி.

கலியுகத்தில் தன் சுகம், தன் நலம் ஆகியவைதான் முக்கியத்துவம் பெறும். பொதுநலம் பொது சேவை போன்றவை தூற்றப்படும்; அல்லது பிழைக்கத் தெரியாதவன் என்று எள்ளி நகையாடப்படும். இந்தப் பொதுக் கருத்தை எதிர்த்து எம்.ஜி.ஆர். ஒவ்வொரு நாளும் போராடினார். எப்படியும் வாழலாம் என்று நினைக்கும்

கலியுகத்தில் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து வழிகாட்டினார்.

கண்ணன் இறந்ததும் கலியுகம் தொடங்குகிறது. ஆரியபட்டர் கி.மு-3102 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் பதினெட்டாம் நாள் கலியுகம் தோன்றியதாக தெரிவிக்கிறார். வராகமிகிரர் கி.மு 2449 ஆம் ஆண்டு கலியுகம் தோன்றியது என்று கூறுகிறார்.

கலியுகத்தின் தன்மை என்னவென்றால் ஒரே மனிதனுக்குள் அசுர தன்மையும் தெய்வத்தன்மையும் இணைந்திருக்கும் ஆக அவன் தனக்குள் இருக்கும் அசுர தன்மையை விலக்கி அல்லது ஒதுக்கி அடக்கி வைத்துவிட்டு தெய்வத்தன்மையை அதிகரிக்க வேண்டும். இதை முழுமையாகச் செய்தவர் எம்.ஜி.ஆர்., மனிதனுக்குரிய வயோதிகம், நோய், பலவீனம் ஆகியவை அவருக்கும் இருந்திருக்கும். புகழ் போதை ஆரம்பத்தில் அவரிடமும் தலைகாட்டியது. ஆனால் அதை அவர் நல்லவர்களின் துணையால் நல்லவர்களின் வழிகாட்டுதலால் அடக்கி வைத்து விட்டார்.

ஒரு சமயம் அவர் கதாநாயகனாக அறிமுகமாகி புகழ்பெற்று பிரபலமாகி வந்த காலகட்டத்தில், தன் கால்



செருப்பின் வார் அறுந்து போனதால் உதறி எறிந்துவிட்டு வந்துவிடுகிறார். அவரைத் தொடர்ந்து வந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அந்த செருப்பை கொண்டு வந்து இவருக்கு தெரியாமல் தைத்து வாங்கி வைக்கிறார். மறுநாள் எம்.ஜி.ஆர். **கலைவாணரிடம் 'அண்ணன் கடைக்குப் போய் ஒரு செருப்பு வாங்கிட்டு வருவோம், வாங்க'** என்று சொல்லும்போது கலைவாணர் அந்த செருப்பை கொண்டு வந்து கொடுத்து 'ஏன் இது உன் செருப்பு தான்; இந்த செருப்பு என்ன ஆயிற்று; நன்றாகத்தானே இருக்கிறது' என்று கேட்கவும் எம்.ஜி.ஆர். தலை குனிகிறார். 'அண்ணே நீங்க ஏன்னே இதெல்லாம்' என்று கேட்கிறார். 'தம்பி இன்னைக்கு நீ கதாநாயகன் ஆகிவிட்டாய் என்பதற்காக நீ அனாவசியமாக பணத்தை செலவு செய்யக்கூடாது; பணத்தின் மதிப்பு உனக்கு தெரியும்; பணத்தேவை உள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டுமே தவிர நாம் தேவையற்ற செலவுகளை செய்து வீணடிக்கக் கூடாது' என்று எம்.ஜி.ஆரிடம் எடுத்துச் சொல்கிறார். அதை புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர். 'இனி படாடோபம் தனக்கு தேவை இல்லை அது கூடாது' என்று முடிவு செய்கிறார். நான் ஏன் பிறந்தேன் நூலில் ஆரம்பத்தில் தனக்கிருந்த அந்த புகழ் போதை அல்லது தான் ஒரு பிரபலம் என்ற நினைப்பு அவர் மனதுக்குள் அவ்வப்போது எட்டிப் பார்த்து அவரிடம் செய்த குறும்புகளை பற்றி அவர் எழுதியிருக்கிறார்

கலியுகம் மனிதனுக்குள் புதைத்து வைத்திருக்கும் அசுரப் பண்பான இந்த மாயையை, போதையை மயக்கத்தை மனிதன் கட்டுப்படுத்த வேண்டும். எம்.ஜி.ஆர். தானும் கட்டுப்படுத்தி பிறருக்கும் அதன் அவசியத்தை எடுத்துச் சொல்கிறார். ஆயிரத்தில் ஒருவன் படத்தில் "மனதை அதன் போக்குக்கு விட்டுவிட்டால் அதற்கு ஆயிரம் யானை பலம் வந்துவிடும், அதை நாம் கட்டுப்படுத்தி வைத்தால் அது நாம் சொன்னதை கேட்கும் வேலைக்காரன் ஆகிவிடும்" என்று எம்.ஜி.ஆர். பேசும் ஒரு

வசனம் உண்டு. இந்த வசனம் ஆர் கே சண்முகம் எழுதியது. எம்.ஜி.ஆர். மணிமாறன் என்ற கதாபாத்திரத்திற்காக பேசினாலும் இது இப்படத்தைப் பார்க்கும் அனைத்து மனிதருக்கும் பொதுவானது; அறிவினை ஊட்டக்கூடியது.

எம்.ஜி.ஆர். தன் படத்திற்கு எழுதப்பட்ட வசனங்களை வாசித்துப் பார்த்து அவருக்கு சரி என பட்டதை மட்டுமே அவர் சினிமாவில் பேசினார். எனவே அவர் பேசும் ஒவ்வொரு வசனமும் அவருடைய சொந்தக் கருத்தாகவே கொள்ளப்படும். மக்கள் அப்படித்தான் கருதினர்; அவரும் அதை நினைவில் வைத்து தான் தனது வசனங்களைச் சரி செய்தார். அறிவுக்குப் பொருந்தாத வசனங்களையும் பாடல் வரிகளையும் அவர் நீக்கிவிடுவார். அவர் தீமையை எதிர்த்துப் போராடும் போராட்டத்தில் மனிதர்களுக்கு நன்மையை அளிக்கக்கூடிய துணிவை வழங்கக்கூடிய நல்ல வசனங்களையும் பாடல்களையும் மட்டுமே தன் படத்தில் திறமையாளர்களை கொண்டு எழுதச்செய்து சேர்க்கிறார். இவருடைய கலியுகப் போராட்டத்தில் பங்கு கொண்டவர் எல்லாம் இன்றைக்கு புகழ் புத்தகத்தின் பக்கங்களை நிரப்புகிறார்கள். அதில் நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளார்கள். கலியை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் இவர் ஒருநாளும் சமரசத்துக்கு இடம் கொடுத்ததில்லை. அரசியலுக்கு வந்த பிறகும் தீவிரமாகவே இப்போராட்டத்தில் ஈடுபட்டார்.

சதுர்யுகம் எனப்படும் நான்கு யுகங்களில் முதல் யுகமான கிருத யுகத்தில் 17 லட்சத்து 18 ஆயிரம் ஆண்டுகள் அப்போது தேவர்களும், மனிதர்களும், அசுரர்களும் தனித்தனி உலகங்களில் வாழ்ந்தனர். தேவர்கள் தேவலோகத்திலும் மனிதர்கள் பூலோகத்திலும் வாழ்ந்ததாக கதை உண்டு. அடுத்ததாக ராமர் பிறந்து வளர்ந்த திரேதாயுகத்தில் 12 லட்சத்து 90 ஆயிரம் ஆண்டுகள்; அக்காலகட்டத்தில் அசுரரும்

தேவரும் வெவ்வேறு இனங்களாகப் பிரிந்திருந்தனர். உலகின் வெவ்வேறு பகுதியில் வசித்தனர். அதன்பின்பு கிருஷ்ணர் பிறந்த துவாபரயுகத்தில் 8 லட்சத்து 64 ஆயிரம் ஆண்டுகள் இருந்தன. அப்போது அசுரரும் தேவரும் ஒரே குடும்பத்தில் வசித்தனர். கௌரவரும், பாண்டவரும் ஒரே குடும்பத்தினர் தானே. கலியுகத்தில் அசுர தன்மையும் தெய்வத்தன்மையும் ஒரே மனிதனுக்குள் நெருங்கி வந்து விட்டன.

முதல் காலகட்டத்தில் நல்லவர்களும் கெட்டவர்களும் தனித்தனி இடங்களில் வாழ்ந்தனர்; இரண்டாவது காலகட்டத்தில் நெருங்கி வந்து தனித்தனி இனங்களாக வசித்தனர்; மூன்றாவது காலகட்டத்தில் ஒரே குடும்பத்துக்குள் ஒரே குலத்துக்குள் தனித்தனி குடும்பங்களாக வசித்தனர். மாயாண்டி குடும்பத்தார் போல கௌரவர், பாண்டவர் குடும்பங்கள் இருந்தன. இப்போது நாம் வாழும் நான்காவது காலகட்டத்தில் இரண்டு தன்மைகளும் நன்மை, தீமை ஆகிய இரண்டு பண்புகளும் மென்மை, வலிமை ஆகிய இரண்டு இயல்புகளும் ஒரே மனிதனுக்குள் மிக நெருங்கி வந்து விட்டன. இதனை அறிந்தோ அறியாமலோ எம்.ஜி.ஆர். படத்தில் வரும் கெட்டவர்களைக் கூட அதாவது வில்லனை கூட அவர் படத்தின் முடிவில் சிறந்தவனாக தன் உள்ளத்தில் இருந்த தீய எண்ணங்களை கண்டு தெரிந்து அகற்றியவனாக நன்மை மற்றும் நல்ல பண்புகளை ஏற்றுக் கொண்டவனாக தன் குடும்பத்தில் ஒருவராக தன்னுடைய நட்பாக தனக்கு வேண்டியவராக ஒப்புக் கொண்டவனாக காட்டுவார்.

வில்லன் திருந்தி வருவான் என்பதில் மற்றவருக்கும் எம்.ஜி.ஆருக்கும் இருக்கின்ற வேறுபாடு என்னவென்றால் மற்றவர்கள் சில நேரங்களில் இலக்கியவாதிகளாக இருந்திருந்தால் சில படைப்புகளில் இவ்வாறான விஷயங்களை காட்டுவதுண்டு. ஆனால் தன்னுடைய

அனைத்துப் படைப்புகளிலும் நல்லவன் வாழ்வான் தீயவன் திருந்த வேண்டும் என்ற கருத்தை முன்னிறுத்தி மற்றவர்களுக்கு அதனை படிப்பினையாக எடுத்துரைக்கும் தத்துவ ஞானியாக விளங்கியவர் எம்.ஜி.ஆர். ஒருவர் மட்டுமே.

எதிரியை ஒழிக என்று உடனிருப்போர் கோஷம் போடும் போது **'எம்.ஜி.ஆர். யாரையும் ஒழிக்க வேண்டும் என்பது நம் நோக்கமல்ல அவர்கள் திருந்த வேண்டும் என்று சொல்லுங்கள்'** என்பார். அவர்கள் மனம் மாற வேண்டும் என்று எம்.ஜி.ஆர். விரும்புவார். இதனால் அவர் தன்னை பற்றி கேவலமாக எழுதி வந்த எதிரணியை சேர்ந்த எழுத்தாளர்களுக்கும் கூட இரக்கம் காட்டி உதவியிருக்கிறார். ஆக மனிதனுக்குள் இருக்கும் மிருகத் தன்மையை அசுர குணத்தை நீக்கி அவர்கள் மனிதர்களாக நல்லவர்களாக மாற வேண்டும். அனைவரிடமும் அன்பு பாராட்டுகின்றவர்களாக திருந்த வேண்டும் என்பதுதான் எம்.ஜி.ஆரின் போராட்டங்களின் சாராம்சமாக இருந்தது.

கலியுகத்தை எதிர்த்து எம்.ஜி.ஆர். இந்தப் போராட்டத்தை தன் வாழ்வில் தொடர்ந்து நடத்தினார். மற்றவர்களும் இந்த போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வெற்றி பெற அவர் உறுதுணையாக தூண்டுகோலாக இருந்து உற்சாகமூட்டி வந்தார். கலியுகத்தில் நல்லது நடக்காது; நல்லவர்கள் வாழ முடியாது; தீயவர்களே வாழ்வார்கள்; அவர்களை சிறப்படைவார்கள் என்று பல செய்திகள் நமக்கு தெரிந்திருந்தாலும் மனிதன் நினைத்தால் தீமையை வெல்லலாம் நன்மையை அடையலாம் என்று ஓர் உன்னதமான கருத்தை வலியுறுத்தி அத்தகைய தன்னம்பிக்கையை தன் ரசிகனுக்கு ஊட்டியவர் எம்.ஜி.ஆர் ஒருவரே. அவருடைய படங்களில் அவர் எதிரிகளை வென்று விடுவார் ஒருவராக இருந்தாலும் பத்து பேராக இருந்தாலும் இவரால் வெற்றி கொள்ள முடியும். இது

அவருடைய ரசிகருக்கு மிகப் பெரிய உத்வேகத்தை அளித்தது. இது உடலுக்கு மட்டுமல்ல மனதிற்கும் சேர்த்துதான் இந்த உத்வேகமும் உற்சாகமும் வழங்கப்படுகிறது.

தீமையான செயல்கள் எண்ணங்களை ஆசைகளை அழிக்க நினைக்கும் மனிதன் அந்த ஆசையும் எண்ணமும் ஒன்றாக இருந்தாலும் பலவாக இருந்தாலும் மானுட சக்தியால் அவற்றை எதிர்கொள்ள முடியும். ஏனென்றால் கலியுகத்தின் அத்தனை தீய அம்சங்களும் இருந்துவந்த திரையுலகில் அவர் ஒரு தனி நட்சத்திரமாக ஜொலித்து தன்னுடைய வெற்றியை நிலைநிறுத்தினார். எம்.ஜி.ஆர். கலியுகப் புரட்சியாளராக மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார். கலியுகத்திலும் நன்மையைப் பெற தீமையை வெற்றி கொள்ள முடியும் என்பதை உணர்த்துவதற்காகப் போராடினார். இந்த கலியுகப் போராளி மத இன பேதமின்றி அனைத்து மனிதர்களுக்கும் இவர் படத்தை பார்த்து இவர் வாழ்க்கையைப் படித்து இவரை புரிந்து கொள்ளக் கூடியவர் எவராக இருந்தாலும் அவர்களுக்கு தனிப்பெரும் தலைவராக வெற்றித் திருமகனாக காவிய நாயகனாக திகழ்ந்தார்.

கலியுகத்தின் இயல்புகள்


கலியுகத்தில் அரசர் கொடுங்கோல் செலுத்துவர்; வரி அதிகமாக வசூலிப்பர்; மக்கள் இதனால் வேறு இடங்களைத் தேடிச் செல்வர்; தாய்மொழி தாய்நாடு மீதான பற்று குறையும்; மனிதர்களிடையே பொறாமையும் வெறுப்பும் உருவாகும்; கொலை செய்ய எவரும் அஞ்சமாட்டார்; ஒழுக்கமின்மை பரத்தமை ஆகியவை குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தாது. இவை சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். ஆசிரியர்களுக்கு மதிப்பு குறையும்; திருமணங்கள் பெரியவர்களின் பெயரால் நடைபெறாமல்

அவரவர் விருப்பத்திற்கேற்ப அவ்வப்போது நடைபெற்று அதன் பிறகு முறித்து கொள்ளப்படும்.

கலியுகத்தின் இயல்புகள் இன்றைக்கு நாம் அதிகாலையில் பத்திரிகையை நாளிதழை புரட்டும்போது நமக்கு வரிசையாக படிக்கக்கூடிய செய்திகளாக அமைந்துள்ளன. மேற்கூறிய அத்தனையும் நம் வாழ்வின் அன்றாட நிகழ்வுகளாக அறிந்துகொண்டு வருகிறோம். இத்தனை பிரச்சனைகளையும் எதிர்கொண்டு தான் இந்த கலியை ஜெயிக்க முடியும் என்று நிரூபித்தவர் எம்.ஜி.ஆர். எனவே எம்.ஜி.ஆரை பின்பற்றுகிறவர்கள் கலியை வெல்லக்கூடிய ஆற்றல் படைத்தவர்களாக இருப்பது உறுதி.

ஆன்மிக குரு

இன்றைக்கும் எம்.ஜி.ஆர். ரசிகர்களில் பலர் அவர்களை பேட்டி எடுக்கும்போது பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் விஷயம் என்னவென்றால் ‘நான் பீடி சிகரெட் குடிக்க மாட்டேன்; மது அருந்த மாட்டேன்; என் தாயாரை தெய்வம் போல மதித்து என் வீட்டில் வைத்து பாதுகாத்து வருகிறேன்’ இந்த கருத்துக்களை சொல்லும் நிறைய பேர் ‘நான் எம்.ஜி.ஆர். ரசிகன் என்பதால் இப்பண்புகளை பின்பற்றுகிறேன்’ என்று சொல்வார்கள். நல்ல பண்புகளை கற்றுத்தரும் ஒருவர் பெற்றோர் ஆக இருக்கலாம்; பள்ளி கல்லூரி ஆசிரியராக இருக்கலாம்



அல்லது ஒரு குடும்ப பெரியவராக இருக்கலாம். சமயப் பெரியவராக இருக்கலாம். நடிகராக இருந்து பார்த்ததுண்டா. இந்த எந்த வரிசையிலும் இதுவரை மக்கள் எம்.ஜி.ஆரை சேர்க்கவில்லை. ஆனால் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் அவரை தன் வாத்தியாராக கொண்டு தன் ஆன்மீக குருவாக வாழ்வியல் வழிகாட்டியாகக் கொண்டு வாழ்ந்துவந்தனர் வருகின்றனர்.


எம்.ஜி.ஆருக்கு சென்னை அருகே திருநின்ற ஊரில் கோயில் கட்டி தேரும் திருவிழாவும் நடத்தி பூஜைகள் செய்து இருமுடி கட்டி பாத யாத்திரை நடத்தி விரதமிருந்து உற்சவர் திருஉலா கொண்டு வந்து சகல வழிபாடும் செய்து வருகின்றனர். அவருடைய அருள் ஆசி இருந்தால் நமக்கு வாழ்வில் வெற்றி கிடைக்கும் என்று பலரும் அவரை தெய்வமாக நம்புகின்ற போக்கு வளர்ந்து விட்டது. குடும்ப தெய்வம், குலதெய்வம், ஊர் தெய்வம், பழனி, மதுரை, திருப்பதி போன்ற திருத்தலங்களில் எழுந்தருளி இருக்கும் பொது தெய்வம் என பல தெய்வங்கள் இருந்தாலும் இவை எல்லாவற்றையும் கடந்து எம்.ஜி.ஆரும் இந்த தெய்வங்களுக்குள் ஒரு தெய்வமாக நிலை பெற்று விட்டார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்ற வள்ளுவரின் வாக்கை மெய்ப்பித்தவர் எம்.ஜி.ஆர். வாழ்வாங்கு வாழ்தல் என்றால் வாழும் முறைப்படி வாழ்வதாகும். வாழும் முறை என்ன என்பதை எம்.ஜி.ஆர். வாழ்ந்து காட்டி மறைந்தார். அவர் வாயால் மட்டும் சொல்லி காட்டவில்லை; உண்மையில் வாழ்ந்து காட்டினார். ஆன்மீக குருக்கள் தன் வாழ்க்கையில் பல உண்மைகளை சொல்லிச் சென்றனர். அவர்கள் துறவிகளாக இருந்தனர். இறைவனை நினைந்து ஒரு பொழுது உண்டு மனதை அடக்கி இறைவனோடு இறைவனாக

கலந்துவிட்டனர். ஆனால் எம்.ஜி.ஆர். அப்படியல்ல 16 வகை காய்கறிகள் சாப்பிட்டு தன் வீட்டில் இருக்கும் வேலைக்காரன் முதல் செட்டில் இருக்கும் லைட் பாய் வரை அனைவருக்கும் ஒரே மாதிரியான உணவளித்து அவரவர் செய்த வேலைக்கு உரிய சம்பளத்தை அவர்களுக்குக் கிடைக்கச் செய்து ஏராளமான பெண்களோடு சேர்ந்து நடித்து ஆடிப்பாடி படம் எடுத்து அந்தப் படங்களின் மூலம் நல்ல விஷயங்களை உலகுக்குச் சொல்லி படம் பார்க்கும் ரசிகர்களின் மனங்களில் நல்ல கருத்துக்களை விதைத்து ஏராளமான பாலியல் தூண்டுதல், வன்முறை கலாச்சாரம், வரி ஏய்ப்பு, கருப்பு பணம் போன்ற கலியுக சமாச்சாரங்களோடு போராடி ஜெயித்து வெற்றி பெற்றவர்; புகழ் பெற்றவர்

ஒரு தூண்டுதலும் இல்லாத இடத்தில் தனி அறையில் அல்லது மனித நடமாட்டமற்ற காட்டுக்குள் இருக்கும்



ஒருவன் துறவியாக வாழ முடியும் வாழ்ந்துதான் ஆகவேண்டும். ஆனால் அதிகபட்சமான தூண்டுதல்கள் இருக்கும் இடத்தில் மிகக் குறைந்த பட்சமான தூண்டுதலுக்கு மட்டுமே ஆளாகி ஏராளமான இடையூறுகளை சந்தித்து அவற்றுடன் போராடி அவற்றை புறந்தள்ளிவிட்டு நல்லவனாக வாழ முனைந்து அந்த உழைப்பில் முன்னேறி வெற்றி பெறுவது எம்.ஜி.ஆர். மட்டுமே செய்ய முடிந்த போராட்டச் செயலாகும்.

கலியுகத்தில் கலி புருஷனை எதிர்த்து எம்.ஜி.ஆர். நடத்தி வெற்றி கண்ட போராட்டத்தை மிகச்சரியாக புரிந்துகொள்ள வேண்டும் என்றால் உலக பொதுமறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரை தான் துணை கொள்ள வேண்டும்

குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்

மிகைநாடி மிக்க கொளல்

என்ற வள்ளுவர் வாக்கின் படி ஆராய்ந்தால் எம்.ஜி.ஆரின் குற்றங்கள் கண்ணுக்கு புலனாகாமல் மறைந்துபோய் அவருடைய குணங்கள் நம் கண்முன் விஸ்வரூபம் எடுக்கும்.

ஒரு மனிதன் தனக்குள் இருக்கும் அசுரத்தன்மை மற்றும் தெய்வத்தன்மையுடன் ஒவ்வொரு சுவாசத்திலும் போராடிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் அவர் தன்னுடைய போராட்டத்தில் தான் மட்டும் வெற்றி பெற்றதோடு நின்றுவிடாமல் தன் கலைத்திறன் என்ற வலிமை மிகுந்த கருவியைக்கொண்டு சிறப்பான கலை படைப்புகளை உருவாக்கி அவற்றை காணும் மனிதர்கள் அனைவரும் கலியை எதிர்த்து போராடுவதற்கான சக்தியை வழங்கி அவர்களையும் முன்னேற்றினார்.

கலியுக முடிவு

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட லிங்க புராணம் என்ற நூல் கலியுக முடிவில் இந்த உலகமும் மனிதர்களும் இருக்கும் நிலை பற்றி விளக்குகின்றது. கலியுகம் முடிய இன்னும் 4 லட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகள் இருந்தாலும் கூட இந்த நூல் விளக்கியிருக்கும் அல்லது தெரிவித்திருக்கும் பட்டியல் இப்போதே கலியுகம் முடிய போகிறதோ என்ற ஐயத்தை தருகின்றது.

கலியுக முடிவில் திருடர்களே மன்னர்களாவர்; இப்போது அமைச்சர்களாக இருக்கும் பலர் ஊர் சொத்தை கொள்ளை அடித்தவர்கள் என்று நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை காண்கிறோம். மன்னர்கள் திருடர்களாவர் என்ற கருத்து இதற்கு முன்பு திருட்டு தொழிலில் ஈடுபடாமல் அதிகாரத்திற்கு வந்துவிட்ட பிறகு பிறர் பணத்தை கொள்ளையடிக்கும் தொழிலை தொடங்கியவர்களைக் குறிக்கிறது.

சிலர் அரசாங்கத்தில் பொறுப்புக்கு வரும் வரை நல்லவர்களாக கடமை உணர்ச்சி மிக்கவர்களாக பிறருக்கு உதவி செய்பவர்களாக இருந்திருக்கக்கூடும். ஆனால் அரசாங்க பொறுப்புக்கு வந்த பிறகு சுற்றி இருக்கும் மனிதர்களின் தூண்டுதலாலும் சொகுசு வாழ்க்கைக்கான தேடுதல் காரணமாகவும் அதிகாரத்தில் உள்ளவர்கள் லஞ்சம் ஊழல் போன்றவற்றில் ஆர்வம் காட்டத் தொடங்கி விடுவர். இதுவும் கலியுக முடிவில் நடைபெறும் ஒரு செயலாகும். ஆனால் நமக்கு இப்போதே இது நடந்து கொண்டுதான் இருக்கிறது. இது போன்ற ஒரு நிலை எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட போது அவர் என் பெயரைச் சொல்லி என் மனைவி அல்லது உறவினர் அல்லது தெரிந்தவர் என்று எவர் வந்தாலும் அரசாங்க காரியங்களில் அவர்களுக்கு எந்த சலுகையும் செய்து தர வேண்டாம் என்று ஓர் அறிக்கை விட்டு தன் பெயரை

பயன்படுத்தி தனக்கு உறவினர்கள் என்று சொல்லிக்கொண்டு சிலர் தமிழக மாநில அரசு அலுவலகங்களில் விசேஷ சலுகை பெறுவதை தடுத்து நிறுத்தினார்.

ஒருவர் மந்திரியாக அதிகாரத்திற்கு அதிகாரப் பதவிக்கு வந்த பிறகு அவரை திருடர் ஆக்குவதற்கான சகல காரியங்களும் இந்த கலியுகத்தில் நடக்கும். அப்போது அந்த அதிகாரி மிகக் கவனமாக இருந்து எனக்கு எதுவும் தெரியாது; நான் அதைச் செய்யவில்லை என்றெல்லாம் சொல்லி தட்டிக் கழிக்காமல் தன் பெயரை தவறாக பயன்படுத்துபவர்களை கண்டிக்கவும் தண்டிக்கவும் முன்வரவேண்டும். இதுவும் ஒரு கலியுக போராட்டம்தான். இந்தப் போராட்டத்தையும் எம்.ஜி.ஆர். சந்தித்தார், வென்றார்.

கலியுக முடிவில் மக்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து தீய வழிகளில் செலவு செய்வார்கள் என்பது இலிங்க புராணம் சொல்லும் இரண்டாவது கருத்தாகும். அரசாங்கம் சில பொதுப் பணிகளுக்காக மக்களின் நிலத்தை வீட்டை கைப்பற்றுவது இயல்பு. சாலைகள் அமைக்கவும் பாலங்கள் கட்டவும் இதுபோன்ற கையகப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடக்கும். இப்போது எட்டு வழி சாலை அமைப்பதற்காக பல விளை நிலங்களை அரசு கையகப்படுத்திய போது பெரும் போராட்டங்கள் வெடித்ததை நாம் அறிவோம்.

மன்னர் அல்லது மந்திரி தீய வழிகளில் செலவு செய்வது என்பது அரசாங்கம் பொது காரியங்களுக்காக தனியாரின் நிலங்களையும் வீடுகளையும் கையகப்படுத்தி அவற்றை தனி முதலாளிகளின் நன்மைக்காக வழங்குவதாகும். பொது நிலத்தை அல்லது ஏழைகளின் நிலத்தை அபகரித்து தீயவழிகளில் பயன்படுத்துவதற்காக வழங்கி விடக் கூடாது அவ்வாறு வழங்குவதாக தான் இப்போது 8 வழிச்சாலை பிரச்சனை பூதாகரமாகி

இருக்கின்றது. தனிநபரின் ஏற்றுமதிக்காக சாலை விரிவாக்கப் பணிகளுக்காக விளைநிலங்கள் பறிக்கப்படுவதாக மக்கள் நம்பியதால் பிரச்சனை பெரிதாகி விட்டது. நீதிமன்றம் வரை போய் தடை ஆணை பெற்று வந்துவிட்டனர்.

எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் உண்டாகிறது. சென்னைக்கு வந்து விட்டு ஒரு விழாவில் எம்.ஜி.ஆரின் குழந்தை வளர்ப்பு முறைகள் பற்றிய சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா என்ற புத்தகத்தை வெளியிட்டு விட்டு மதுரைக்கு திரும்பிக்கொண்டிருந்த போது என்னுடன் பயணித்த ஒரு ஜவுளிக்கடை முதலாளி எம்.ஜி.ஆர். பற்றி பகிர்ந்து கொண்ட ஒரு தகவலை இங்கு குறிப்பிடுவது அவசியம். அவரது தாத்தா சிம்பு லால் சவுகார் என்பவர் மயிலாப்பூரில் பஜார் தெருவில் குடியிருந்தார். அவர் வாங்கிய சில நிலங்களை எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அரசு எடுத்துக்கொண்டது அந்த இடங்களுக்கு தாசில்தார் மூலமாக வழிகாட்டி மதிப்பு நிர்ணயிக்கப்பட்டு இடத்தின் உரிமையாளருக்கு பணம் வழங்கப்பட்டது. குடும்பத்தினர் மகிழ்ச்சியாகப் பெற்றுக்கொண்டனர்.

வெகு காலம் கழித்து ஒருமுறை சிம்புலால் குடும்பத்தினர் ஏதோ ஒரு காரியத்திற்காக நிலப்பதிவு அலுவலகத்திற்கு சென்ற போது தாசில்தார் இவர்களிடம் "நீங்கள் சீம்புலால் குடும்பமா, உங்களுக்கு கூடுதலாக பணம் தரவேண்டும்; உங்களுடைய தாத்தா மிக நல்லவர்; அந்த காலத்தில் அவர் தன் வீட்டு வாசலில் மோர் வைத்து ஏழை எளியவர்களுக்கு தானம் செய்தார்; அவருக்கு நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்; அவருடைய பிள்ளைகள் செழிப்பாக சிறப்பாக வளர வேண்டும்; அவர் நல்ல தர்ம சிந்தனை உள்ளவர்" என்று எம்.ஜி.ஆர். உங்கள்

தாத்தாவை பற்றி என்னிடம் ஒருமுறை கூறினார் என்று இந்த தாசில்தார் தெரிவித்தாராம்.

தாசில்தார் எம்.ஜி.ஆரை பற்றி கூறும் வரை அக்குடும்பத்தினருக்கு எம்.ஜி.ஆர். பற்றி எந்தவித அபிப்ராயமும் கிடையாது; அவருடைய படங்களை பார்த்து ரசித்த மிகப்பெரிய ரசிகர்களும் இல்லை; ஆனால் வாசலில் நீர்மோர் வைத்து ஏழைகளுக்கு குடிக்கப் கொடுத்து அவர்களின் சோர்வை தாத்தா போக்கினார் என்பதை கூட அவர்கள் யாரும் பெரிதாக நினைத்து பெருமை அடைந்ததில்லை. அதை தனது மனதில் வைத்திருந்த எம்.ஜி.ஆர். அந்த தர்ம சிந்தனை உள்ள சிம்புலால் சௌகாரின் இடத்தை அரசு கையகப்படுத்திய போது அவருடைய தர்ம சிந்தனையை பாராட்டி தாசில்தாரிடம் தெரிவித்திருக்கிறார். பொதுமக்களின் சொத்தை ஆட்சியாளர் பறிமுதல் செய்வது கலியுகத்தின் முடிவில் நடைபெறும் செயல் ஆகும். ஆனால் அவ்வாறு பறிமுதல் செய்த சொத்தின் உரிமையாளருக்கு நிலத்துக்கு உரிய பணத்தை குறையாமல் வழங்க வேண்டியது ஆட்சியாளரின் கடமை. அதை முறையாக செய்தவர் எம்.ஜி.ஆர்.

அடிப்படை ஒழுக்கம் இல்லாதவர்கள் சாமியார்களாகத் திரிவர் என்று லிங்கபுராணம் கூறுகிறது. இதுபோலவே கிறிஸ்தவர்களின் வேதாகமத்திலும் இந்த உலகம் அழியப் போகும் நாட்களில் அந்திகிறிஸ்து antichrist எனப்படும் போலிப் போதகர்கள் உருவாகி வருவர் என்று சொல்லப்பட்டுள்ளது. போலிச்சாமியார்கள் அவர்களை நம்பி மக்கள் அவர்களிடம் கூடும் கூட்டம் பற்றிய செய்திகளை நாம் இப்போது அன்றாடம் வாசிக்கிறோம். இதுபோன்ற ஒரு காரியம் நடைபெறும் பொழுது ‘கலி தாண்டவம் ஆடுகிறது’ என்பதை பெரியவர்கள் சொல்வார்கள். ‘உழைக்கும் கரங்கள்’ படத்தில் இது

போன்ற போலிச்சாமியார்கள் இளம் பெண்களின் வாழ்க்கையில் விளையாடுவதை கடுமையாகக் கண்டித்திருப்பார்.

ஆன்மீகப்புரட்சி

அமெரிக்காவில் எம்.ஜி.ஆர். சிகிச்சை பெற்று வந்த காலத்தில் தமிழகத்தில் நடந்த மிகப் பெரிய ஆன்மீகப் புரட்சி, எம்.ஜி.ஆர். நலம் பெற வேண்டும் என்பதற்காக மத பேதமில்லாமல் அனைவரும் அவரவர் ஆண்டவனை மனமுருகி வேண்டிக் கொண்டதாகும். அப்போது கடவுள் இல்லை என்று சொன்ன பெரியாரின் வழிவந்த ‘நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம்; பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டோம்’ என்று சொல்லி தனிக்கட்சியாகத் திமுகவைத் தோற்றுவித்த அண்ணாவின் வழிவந்த அவரது பெயரால் அண்ணா திமுக என்ற கட்சியைத் தொடங்கிய எம்.ஜி.ஆருக்காக காஞ்சி மடத்தில் அவர் விரைவில் சுகம் பெற்று நலமாக தாய்நாடு திரும்ப வேண்டும் என்று ஒரு யாகம் நடைபெற்றது. இது தமிழகத்தில் இந்து சமய மறுமலர்ச்சி தோற்றுவாயாகும்.

எம்.ஜி.ஆர். நலம் பெற்று மீண்டும் முதல்வராக தமிழகம் திரும்பிய பிறகு ஒரு நாள் ஒரே வேளையில் சென்னையில் எம்.ஜி.ஆரும் காஞ்சியில் பெரியவரும் ஒருவர் மற்றவரை சந்திக்க வேண்டும் என்ற விருப்பத்தை அருகில் இருப்பவரிடம் தெரிவித்தனர். அடுத்த அரைமணி நேரத்தில் இரு தரப்பிலும் இருந்து டெலிபோன் மணி அடித்து விருப்பங்கள் பரிமாறப்பட்டன. எம்.ஜி.ஆர். புறப்பட்டு வந்து பெரியவரைப் பார்த்து ஆசி பெற்றுக்கொண்டு மடத்தின் வாசலில் கூடியிருந்த தன்னுடைய தொண்டர் கூட்டத்தைப் பார்த்து, பொதுமக்களைப் பார்த்து வணக்கம் சொல்லி கையசைத்து விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுப் போன இந்த சந்திப்பு எதை நமக்கு உணர்த்துகிறது என்றால் கலியுகத்தில்

அடிப்படை ஒழுக்கம் இல்லாத சாமியார்கள் பலர் இருப்பர். அவர்கள் எல்லாம் போலி சாமியார்கள் என்பதை இனம் காட்டும் வகையில் அவர்களைப் பிரித்துக் காட்டும் வகையில் எம்.ஜி.ஆர். ஒரு உண்மையான துறவியை வந்து சந்தித்து ஆசி பெற்று சென்றார்.

எம்.ஜி.ஆர். காஞ்சி பெரியவரை பார்த்து சென்ற நிகழ்ச்சி போலி சாமியாரை பார்த்து பல நன்மைகள் அடைவதை விட்டுவிட்டு உண்மையான சாமியாரைப் பார்த்து அருளை மட்டும் ஆசியாகப் பெறுவதில் எம்.ஜி.ஆருக்கு விருப்பம் இருந்ததை நமக்கு உணர்த்துகிறது. நெற்றியில் குங்குமம் வைத்துக் கொண்டு வரும் தன் கட்சிக்காரரை பார்த்து ‘உன் நெற்றியில் என்ன ரத்தம் வருகிறதா’ என்று எள்ளி நகையாடிய மு கருணாநிதி பார்வதியின் மாதவிலக்கு குருதிதான் நெற்றியில் வைக்கப்படும் குங்குமம் என்று கேலி பேசிய மு கருணாநிதி தன் வீட்டுக்கு சாய்பாபாவை அழைத்துவந்து அவர் காலில் தன் மனைவியை விழ வைத்து ஆசி பெற்ற வரலாற்றை நாம் அறிவோம். இவ்வாறு முரண்பட்ட மனிதர்கள் தன் சுயநலத்திற்காக வளைந்த நாக்கை வளைத்து வளைத்து பேசி வந்த காலத்தில் எம்.ஜி.ஆர். நல்ல துறவி யார்? என்பதை அடையாளம் காட்டி மக்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடும் ஆர்வமும் வரச்செய்து அவர்கள் துணிச்சலுடன் இறைவனை வணங்க அவரவர் சம்பிரதாயங்களை பின்பற்ற ஊக்கமளித்தார்.

எம்.ஜி.ஆர். நடத்திய ஆன்மீகப் புரட்சியும் ஒரு கலியுக போராட்டம்தான். போலி சாமியாரைப் புறக்கணிப்பதும் நல்லவற்றை இனங்கண்டு கொள்வதும் கூட கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனும் போராடி பெற வேண்டிய ஒரு விஷயமாகத்தான் இருக்கிறது. தீயவர்கள் நல்லவர் என்ற போர்வையில் உலாவி கொண்டிருப்பதால் மடங்களிலும் மதங்களிலும் நல்லவரை இனங்கண்டு

அவர்களைப் பின்பற்றுவதும் ஒரு போராட்டமாகத்தான் விளங்குகிறது.

மக்கள் அகதிகளாக நாடு நாடாக செல்வார்கள் என்பது கலியுகத்தின் முடிவில் நடைபெறும் ஒரு செயலாகும். இதற்கு கலியுக முடிவு வரை நாம் செல்ல வேண்டியதில்லை. இலங்கை போரில் உயிர் தப்பிப் பிழைக்க தமிழ்நாடு வந்த இலங்கை அகதிகளை நாம் அறிவோம். அதற்கு முன்பு அகதிகளாக மக்கள் பர்மாவில் இருந்து கால் நடையாக இந்தியாவுக்குள் வந்து இங்கு தங்க வைக்கப்பட்ட போது அவர்கள் வாழ்ந்த பகுதி பர்மா காலனி ஆயிற்று. பர்மா பொருட்கள் விற்ற இடங்கள் பர்மாபஜார் ஆயிற்று.

இலங்கை அகதிகளுக்கு எம்.ஜி.ஆர். ஆட்சியில் வெவ்வேறு இடங்களில் வீடுகள் கட்டித் தரப்பட்டன. அவர்களுக்கென்று தனியாக ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டன. அவர்கள் பிள்ளைகளும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு தமிழக மாணவர்களுக்கு உரிய அத்தனை சலுகைகளும் அகதிகளின் பிள்ளைகளுக்கும் வழங்கப்பட்டன. இலங்கை போராளிகளுக்கு வேண்டிய பண உதவியை எம்.ஜி.ஆர். வழங்கி அவர்களும் இஸ்ரேல் போராளிகளைப் போல ஆயுதங்களை வாங்கி தான் பிறந்த நாட்டை விட்டு வெளியேற்றிய சிங்களவர்களுடன் தமிழர்கள் எதிர்த்து நிற்க எம்.ஜி.ஆர். உதவினார். தமிழ் மக்களை தமது நாட்டை விட்டு கலியின் கொடுமை விரட்டினாலும் எம்.ஜி.ஆர். அவர்களைத் தமிழ் நாட்டில் தங்க வைத்து சகல வசதிகளும் செய்து கொடுத்து தலைநிமிர்ந்து வாழ செய்தார். எனவே தான் கலியுடன் போராடிய எம்.ஜி.ஆரை கலியுக போராளி என்கிறோம்,

கலியுகத்தில் தாய்மாரின் கர்ப்பத்திலேயே கரு அழிக்கப்படும் என்று லிங்க புராணம் சொல்கிறது. எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தபோது நிறைய இளைஞர்கள்

ஆண்கள் வேலை வாய்ப்பில்லாமல் குடும்பம் நடத்த வழியில்லாமல் சிரமப்பட்டனர். எம்.ஜி.ஆர். காலத்தில் தான் அவரது ஆட்சியின்போது உலகப் பொருளாதார கொள்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டு உலகமயமாக்கல் தனியார்மயமாக்கல் தாராளமயமாக்கல் என்ற கொள்கைகள் நடைமுறைக்கு வந்தது சமயத்தில் எம்.ஜி.ஆர். தனியார் பள்ளிகளும் கல்லூரிகளும் தோன்றுவதற்கு அனுமதி வழங்கினார்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் தொழில்நுட்ப கல்லூரிகள் பொறியியல் கல்லூரிகள். போன்ற கல்வி நிலையங்கள் ஏராளமாக தோன்ற உதவினார். இன்றைக்கு இவற்றில் பல பணம் காய்க்கும் மரங்களாக பணம் பறிக்கும் அமைப்புகளாக மாறி விட்டாலும் கூட அன்றைக்கு அவர் இவற்றை தோற்றுவிக்கும் போது பலருக்கும் கல்வி வாய்ப்பு தொழில் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்க அனுமதி கொடுத்தார் என்பதை உணர வேண்டும். இவற்றில் 25 சதவீதம் மாணவர்கள் இலவசமாக கற்பதற்கும் எம்.ஜி.ஆர். உத்தரவு பிறப்பித்தார். ஒவ்வொரு கல்லூரியிலும் 25% இடங்களில் ஏழை மாணவர்கள் வாய்ப்பு பெற்றனர். பணம் செலுத்தி படிக்கக் கூடியவர்கள் மற்ற 75 சதவீத இடங்களைப் பெற்று படித்துவந்தனர்.

எம்.ஜி.ஆர். தனக்கு கிடைக்காத கல்வி மற்ற குழந்தைகளுக்கும் கிடைக்காமல் போய் விடக் கூடாது என்ற எண்ணத்தில் அரசு பள்ளிகளிலும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் சத்துணவு வழங்கி பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தார். பசியோடு இருக்கும் மாணவனுக்கு படிப்பு ஏறாது அவன் வயிறு நிறைந்து விட்டால் ஆசிரியர் சொல்வது அவன் மனதில் பதியும். பாடம் அவன் காதுகளில் இறங்கி அவன் மூளையில் பதியும். தன் பிள்ளை பசியாறி படித்துக்

கொண்டிருக்கிறான் என்பதை அறியும் தாயும் நிம்மதியாக தான் செய்யும் வேலையில் ஈடுபட முடியும்.

தாய்மாரின் கர்ப்பத்திலேயே கரு அழிக்கப்படும் கலிகாலத்தில் இளம் பெண்கள் குழந்தையைப் பெற்று வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் எம்.ஜி.ஆர். ஒரு தனித் திட்டத்தை தொடங்கினார் இதுவும் கலிக்கு எதிரான போராட்டம் தான். வளர்க்க வசதி இல்லாமல் கருவில் குழந்தையை அழிக்க நினைக்கும் பெண்களுக்கு எதிராக அந்தக் குழந்தையைப் பெற்று வளர்க்க என்னால் முடியும் என்று எம்.ஜி.ஆர். சவால்விட்டு இத்திட்டத்தை நடத்திக்காட்டினார்.

ஒரு பெண் கருவுற்று குழந்தை பெற்று மூன்று மாதங்கள் வரை அவள் தாய்ப்பாலூட்டி அந்த குழந்தையை காப்பாற்றி விட்டால் நான்காவது மாதத்திலிருந்து அவள் மதிய நேர வேளையில் அங்குள்ள சத்துணவு திட்ட மையத்திற்கு வந்து நியூட்ரிஷன் பால்ஸ் [nutrition balls] எனப்படும் சத்துணவு உருண்டையை, சத்து மாவு உருண்டையைப் பெற்று கொண்டு போய் தன் வீட்டில்



வைத்து தன் குழந்தைக்கு ஊட்டி விடலாம். சகல சத்துகளுடன் கூடிய ஒரு கையளவு இனிப்பான இந்த மாவுருண்டை குழந்தைக்கு ஒரு நாளைக்கான உணவாக அமைந்துவிடும். இதுபோக அந்த தாய் அவ்வப்போது அந்த குழந்தைக்கு சிறிது நேரம் தாய்ப்பால் ஊட்டினாலே போதும். குழந்தையை மாமியாரிடம் தாயாரிடம் என யார் பொறுப்பிலாவது விட்டு விட்டு வேலைக்கு போகலாம். காய்கறி விற்க, வீட்டுவேலை பார்க்க போகும் பெண்கள் குழந்தையை விட்டுவிட்டு முன்று நான்கு மணி நேரம் வெளியே போய் வரலாம். சத்துணவு மையத்தில் இருந்து சத்து உருண்டையை யாராவது வாங்கி வந்து குழந்தைக்கு ஊட்டிவிடலாம். பின்பு குழந்தை இரண்டு முன்று மணி நேரம் தூங்கிவிடும். மாலை நான்கு மணிக்கு தாய் திரும்பி வந்து குழந்தையை எடுத்து கொள்ளலாம். இவ்வாறு பலன் பெற்றவர்கள் அன்று ஏராளம்.

பால்குடி மறந்த குழந்தைகள் நடக்க தெரிந்து பாத்ரூம் போகணும் என்று சொன்னால் அந்த குழந்தையை சத்துணவு மையத்தில் விட்டுவிடலாம். காலையில் ஆயா வந்து குழந்தைகளை அழைத்து கொண்டுபோவார். மாலையில் கொண்டு வந்து விட்டுவிடுவார். இளம் தாய்மார்கள் காலை ஒன்பது மணி முதல் மாலை நான்கு மணி வரை ஏதேனும் வேலை நிம்மதியாக செய்யலாம். காலையில் சத்துணவு ஆயா வீட்டுக்கே வந்து இந்த இளம் குழந்தையை இடுப்பில் தூக்கிக் கொண்டு அல்லது நடக்கக்கூடிய குழந்தையாக இருந்தால் விரல் பிடித்து நடக்க வைத்த அழைத்துக்கொண்டு சத்துணவு மையத்திற்கு கூட்டிச் செல்வார். தெருவாக வந்து அனைத்து குழந்தைகளையும் அழைத்து கொண்டு அவை ஒன்றின் கையை ஒன்று பிடித்து கொண்டு ஆயாவுடன் சேர்ந்து செல்லும் அழகே தனி.

சிறு நடை பயின்று சத்துணவு மையத்துக்கு செல்வார்கள். அங்கு அந்த குழந்தைகளுக்கு மதியம் சத்துணவு வழங்குவதோடு காலையில் அவர்களுக்கு தேவையான பாடங்களும் நடத்தப்படும் பாட்டுகள் சொல்லித்தரப்படும். மாலை நான்கு மணி ஆனதும் அவர்களுக்கு முகம் கழுவி தலை சீவி முகத்துக்கு பவுடர் போட்டு மீண்டும் அழகாக அனைத்து குழந்தைகளையும் ஒருவரோடு ஒருவர் கைப்பிடித்தபடி சத்துணவு ஆயா ஒவ்வொரு வீடாக வந்து அந்த குழந்தையை ஒப்படைத்து விட்டு செல்வார். என்ன அழகான காட்சி தெரியுமா.

ஒரு தெருவில் இருக்கும் அனைத்து குழந்தைகளும் ஒன்றாக போய் அந்த சத்துணவு மையத்தில் பாட்டு படித்து படித்து விலங்குகளின் பெயர் பழங்களின் பெயர் என்பனவற்றை எல்லாம் தெரிந்துகொண்டு மதிய வேளையில் உறங்கி மாலையில் எழுந்து அனைவரும் கூடி விளையாடி விட்டு பின்பு ஒன்றாக வீடு திரும்பும் காட்சி சமூகத்தின் பொறுப்புணர்ச்சி அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சியை நமக்கு வெளிப்படுத்தும் அழகான காட்சி ஆகும்.

கருவை அழிக்க கலியுகதேவன் திட்டமிட்டாலும் அந்தக் கருவை ஆரோக்கியமாக வளர்க்க போராடியவர் எம்.ஜி.ஆர்.. சத்துணவு மையம் சென்று வரும் குழந்தை நான்கு வயதுக்கு பிறகு பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படும். பள்ளிக்கூடத்திலும் அதற்கு சீருடை, புத்தகம், உணவு ஆகியன வழங்கப்படும். மத்தியானத்தில் சுடச்சுட சத்துணவு சாப்பிட்ட குழந்தைகளில் என்னுடைய குழந்தைகளும் உண்டு. அப்போது நான் முதுகலை படிக்க கல்லூரிக்கு போனேன். முனைவர் பட்டம் பெறும் வரை சுமார் பத்தாண்டுகள் பிள்ளைகள் கவலையின்றி நான் படித்து முடித்தேன். முதுகலை படிப்பின் போது சத்துணவு திட்டம் பற்றிய இலக்கியப் போட்டியை தமிழக அரசு நடத்தியது அதில் கலந்து கொண்டு சத்துணவு நாடகம்



எழுதி அனுப்பு மாநிலத்தில் முதல் பரிசும் வெள்ளி பதக்கமும் பெற்றேன்.

என் தோழி ஒருவர் சத்துணவு மையத்தில் ஆயாவாக இருந்தார், அவரிடம் கேட்டும் சத்துணவு திட்டம் செயல்படும் விதம் குறித்து அனைத்து தகவல்களையும் திரட்டி பத்து காட்சிகளுடன் நாடகம் ஒன்றை எழுதி அனுப்பி முதல் பரிசைப் பெற்றேன். எனவே நேரடி அனுபவம் உள்ள ஆய்வாளர், மற்றும் தாய் என்ற உரிமையில் இந்த சத்துணவு திட்டம் குழந்தைகளுக்கும் தாய்மாருக்கும் அதிக அளவில் உதவியாக இருந்ததை ஊக்கமளித்ததை என்னால் துணிவாக எடுத்துரைக்க முடியும்.

தாய் சேய் நலம்

தமிழகத்தில் தாய் சேய் நல விடுதிகள் மிகச் சிறப்பாக செயல்படுவதால் இந்தியாவிலேயே தாய் சேய் நலம் முதலிடத்தில் நம் மாநிலம் உள்ளது. மற்ற மாநிலங்களில் முயற்சிகளும் திட்டங்களும் இருந்தாலும் நமது தமிழகத்தில் இருப்பது போல சிற்றப்பாக செயல்படவில்லை என்பதை நமக்கு கிடைத்திருக்கும் முதலிடம் உறுதி செய்கிறது. கலி கருவை அழிக்க

முற்பட்டாலும் அந்தக் கருவை உடனிருந்து வளர்க்க தாய் சேய் நல மையத்தின் மருத்துவ உதவியாளர்கள் இளம் தாயை அடிக்கடி சந்தித்து அவர்கள் வீடுகளுக்கே போய் அவர்களுக்குரிய தடுப்பூசிகளை வழங்கி பரிசோதனைகளைச் செய்து தம்முடைய தாய் சேய் நல மையத்திற்கு வரவழைத்து குழந்தை பெற வைத்து ஆரோக்கியமாக அவர்களை வீட்டிற்கு அனுப்பி வைத்து மீண்டும் அந்த குழந்தைகளுக்குரிய தடுப்பூசிகளை எல்லாம் வழங்கி போலியோ சொட்டு மருந்து வழங்கி வீடுவீடாகப் போய் அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறதா என்பதை கண்காணித்து தாயும் சேயும் நலமாக வாழ வாழ்ந்துவரும் நாடு தமிழ்நாடு மட்டுமே.

ஜெயலலிதா ஆட்சியில் கருவுற்ற பெண்களுக்கு தாய் சேய் நல மையத்தில் வளைகாப்பு நடத்தும் திட்டமும் தொடங்கப்பட்டது. உடல் நலம் மட்டுமல்ல மன மகிழ்ச்சியும் தேவை என்பதை உணர்ந்து இத்திட்டம் தொடங்கப்பட்டது. பெண் குழந்தை நலத் திட்டங்களை ஜெயலலிதா அறிமுகம் செய்தார். இதற்கு வித்திட்டவர் எம்.ஜி.ஆர். என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமே இல்லை.

கலியுகத்தில் பரஸ்பர நம்பிக்கை குறையும் ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொள்வது அதிகரிக்கும் என்று லிங்கபுராணம் எடுத்துரைக்கிறது. நல்லவர் என்பதை நம்புவதற்கு இயலாத பலர் அவரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் ஆன பல குற்றங்களை அவர் மீது சுமத்தி பத்திரிகைகளில் எழுதினர். மேடைகளில் கூட்டம் போட்டு பேசி வந்தனர். அப்போது எம்.ஜி.ஆர். நாடோடி மன்னன் படத்தில் தான் பேசிய என்னை நம்பி கெட்டவர் எவருமில்லை நம்பாமல் கெட்டவர்கள் இருக்கலாம் என்ற வசனத்தை மேடைகளில் மீண்டும் எடுத்துச் சொல்லி தன்னை நம்பாமல் தன் மீது குற்றம் சுமத்தியவர்களைப்

புறந்தள்ளினார். மக்களுக்கு அவர் மீது ஏராளமான நம்பிக்கை இருந்ததால் மக்கள் சிறப்பாக வாழ்வதற்கான அனைத்து காரியங்களையும் அவர் செய்து வந்தார்

இன்றும் மக்கள் எம்.ஜி.ஆரை நல்லவர் என்று நம்புகின்றனர். அவர் செய்தவை அனைத்தும் மக்களுக்கு நன்மை செய்யப்பட்டவை என்று உறுதியாக நம்புகின்றனர். அவரோடு இருப்பவர்கள் எல்லோரும் நல்லவரே. அவர் மக்களுக்கு நன்மை அல்லாத எந்த செயலையும் செய்ய மாட்டார் என்ற ஒரு ஆழமான நம்பிக்கை எம்.ஜி.ஆர். மீது அடித்தள மக்களுக்கு இருக்கின்றது. தமிழக மக்களை தன் ரசிகர்களை முழுமையாக நம்பினார். இந்த பரஸ்பர நம்பிக்கை தலைவருக்கும் தொண்டருக்கும் இருப்பது போல் அல்லாமல் குடும்பத்தில் ஒரு தாய்க்கும் பிள்ளைக்கும் இடையிலான நம்பிக்கையை போல அமைந்திருந்தது.

பரஸ்பர நம்பிக்கையின் விளைவு இன்றும் பல வழிகளில் உருவெடுத்துள்ளது. அவர் மறைந்து முப்பது நாற்பது ஆண்டுகள் கழித்தும் என்றும் அவரை நினைவுகூரும் விதமாக அவரது ரசிகர்களும் தொண்டர்களும் அவருக்காக விழா நடத்தி அவர் படங்களின் ஐம்பதாவது ஆண்டு விழா அறுபதாவது ஆண்டு விழா போன்றவற்றை நடத்தி அன்னதானம், நோட்டுப் புத்தகம் வழங்குதல், பள்ளிக்கூட பை வழங்குதல், தையல் எந்திரம் வழங்குதல் எனப் பல நலத்திட்ட உதவிகளையும் செய்து மக்கள் நலப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கலியுகத்தில் பசியும் பிணியும் பெருகும் என்றனர். எம்.ஜி.ஆர். காலத்திலும் பசி இருந்தது. அந்த பசிக்கு எதிர்த்து ஒவ்வொருவரும் சிறு குழந்தை முதல் பெரியவர் வரை போராடி வந்தனர். அப்போது வேலையில்லாத் திண்டாட்டம் மிகக் கடுமையாக தமிழகத்தை

பாதித்தி(ருந்தது. எனினும் அவர் அரிசி விலையையும் வெங்காயம் மண்ணெண்ணெய் விலையை உயர்த்தாமல் ஏழைகளுக்(கு அவை எளிதாக கிடைக்கும் வகையில் பார்த்துக் கொண்டார்.

அரிசி ரேஷன் கடைகளில் இல்லை என்ற நிலை வந்த பொது மத்திய அரசிடம் கூ(டுதல் அரிசி வழங்(கும்படி கேட்(டு உண்ணாவிரதம் இ(ருநதார். எம்.ஜி.ஆரை ஏன் பிடிக்(கும்? எதற்காக அவரை இன்னும் நினைத்து கொண்டி(ருக்கிறீர்கள் என ரசிகர்களிட(மும் அண்ணா தி(முக தொண்டர்களிட(மும் கேட்ட போது அவர்களில் பலர் அரிசி விலை கட்டுப்பாட்டில் இருந்தது என்ற பதிலை முன் வைத்தனர்.

நினைத்ததை முடித்த போராளி எம்.ஜி.ஆர்.

(குழந்தைகளை பசிக் கொ(டுமையில் இ(ருந்து வி(டுவிக்க சத்துணவுத்திட்டம் தொடங்கினார். இத்த்திட்டத்துக்(கு அரசு நிதி ஒதுக்க இயலாது என்று அதிகாரிகள் மறுத்த போது எம்.ஜி.ஆர். சத்துணவு நிதி என்ற ஒரு திட்டத்தைத்



தொடங்கினார். பலரும் முன் வந்து நிதி வழங்கினர். தடைகளுக்கு அஞ்சி பின்வாங்காத எம்.ஜி.ஆர். நினைத்ததை சாதித்தார். இது தான் அவரை போராளி என்பதற்கான உதாரணம்.

பள்ளி குழந்தைகளுக்கு சீருடை வழங்க வேண்டும் என்று முடிவு செய்து டில்லிக்கு போய் மத்திய அரசிடம் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த பொது நிதி உதவி கேட்டார். மத்திய அரசு மறுத்துவிட்டது. உடனே எம்.ஜி.ஆர். சரி வாருங்கள் போகலாம். வீட்டுக்கு ஒரு ரூபாய் வசூலித்து சீருடை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்றார். எம்.ஜி.ஆரின் கோபத்தை பார்த்த மத்திய அரசு பின் நிதி வழங்க ஒப்பு கொண்டது. இன்று வரை சீருடைகள் வழங்கப்படுகின்றன. அரசு சீருடை வழங்கத் தொடங்கிய பிறகு தான் பல ஏழைக் குழந்தைகள் தீபாவளிக்கு வண்ண உடைகள் அணிகின்றன. இல்லையென்றால் தீபாவளிக்கு ஒரு செட் சீருடை தான் பெற்றோர்கள் வாங்கி தருவார்கள்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் படித்த மாணவர்கள் இன்று பெரியவரானதும் இதை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் நினைவு கூர்கின்றனர். இலவசக் காலணி வழங்கவும் எம்.ஜி.ஆர். திட்டமிட்டார் ஆனால் அது அவரது மனைவி ஜானகி அம்மையார் முதல்வராக இருந்த போது நடைமுறைக்கு வந்தது. குழந்தைகள் குழந்தைமையை (childhood) அனுபவிக்கவும் நன்கு படித்து முன்னேறவும் எம்.ஜி.ஆர். ஒரு தகப்பனை போல தாயை போல ஆவன செய்தார். நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆர். மன்னன் ஆனதும் வரும் வசனம் “பள்ளி படிப்பு முடிந்து வேலைக்கு போகும் வரை மாணவர்களின் பொறுப்பை அரசாங்கம் ஏற்று கொள்கிறது”. அந்த வசனம் அவர் ஆட்சியில் உண்மையாயிற்று. அத்துடன்

ஆரோக்கியமான உணவு கிடைக்க வேண்டும் என்பதற்காக சத்துணவுத் திட்டம் தொடங்கினார்.

எம்.ஜி.ஆர். ஓர் யுக புருஷன்

கலியுகத்தில் காலம் தவறி மழை பெய்யும்; புயல் வெள்ளத்தால் சேதம் உண்டாகும்; கடைக்காரர் கொள்ளை இலாபம் ஈட்டுவர்; கேலி மற்றும் வசைச் சொற்கள் அதிகமாக புழங்கும்; பிச்சைக்காரரும் தொழில் இல்லாதோரும் ஏமாற்றுக்காரர்களும் அதிகமாவர்; பணம் ஈட்டுவதே வாழ்வின் லட்சியமாக மாறிவிடும்; தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்; சமைத்து உண்பதை விட தயாரிக்கப்பட்ட உணவுகளை மக்கள் அதிகம் விரும்புவர்; தீபம் கீழ்நோக்கி எரியும் என்று இன்னும் பல தகவல்கள் லிங்க புராணத்தில் தரப்பட்டுள்ளன

எம்.ஜி.ஆர். முதன் முதலில் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சரான போது இந்த வெற்றிக்கு என்ன காரணம் என்று கேள்வி மேல் கேள்வி கேட்கப்பட்டது. ஆனந்த விகடன் ஆசிரியர் தன தலையங்கத்தில் “உண்மையில் யுகப் புரட்சியை உண்டாக்கிய பல தலைவர்களைப் போல அடித்தள மக்களை வசப்படுத்தி வைத்திருந்தது எம்.ஜி.ஆரின் மாபெரும் வெற்றி ரகசியம். உலக சரித்திரத்தில் இன்னொரு எம்.ஜி.ஆர். தோன்ற முடியாது” என்று குறிப்பிட்டிருந்தார். எம்.ஜி.ஆர். ஒரு யுக புருஷர். அவர் கலியின் கொடுமைகளை வென்று காட்டினார். எவ்வித மதச்ச சார்பும் இல்லாமல் நல்லவனாகவும் வல்லவனாகவும் கடும் உழைப்பாளியுமாக இருந்தாலே போதும் கலியை வெல்லலாம் என்று சொல்லியும் செய்தும் காட்டினார். இவ்வாறு எம்.ஜி.ஆர். ஒரு யுகப் புரட்சியை நடத்திய மாவீரர் என்பதை பத்திரிகை ஒப்புக்கொண்டுள்ளது. மக்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

Ananda Vikatan July 10, 1977

தமிழக முதல்வரின் சிறப்புச் செய்தி...



என்னை வாழவைக்கும் தெய்வங்களே!

அமரர் அண்ணாவின் சீரிய கொள்கைகளான ஊழலற்ற, லஞ்சக் கொடுமைகளற்ற, "எல்லோரும் ஓர் குலம்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்", "எல்லோரும் ஓர் நிலை, எல்லோரும் ஓர் விலை" என்ற அறவழியில் நல்லாட்சி அமைய உங்கள் ஆசியுடன் தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பினை ஏற்கின்றேன். உயர்திரு ஓமந்தூரார், மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா போன்ற மேதைகள் இருந்து ஆட்சி செய்த இடத்தில் உங்களை மட்டும் நம்பியே அமருகிறேன்.

அமரர் அண்ணாவின் கொள்கைகளைக் கடைப்பிடித்து வரும் என்னை இதுவரை ஆதரித்துத் துணைநின்றது போல் இந்த மாபெரும் பொறுப்பினை நிறைவேற்றும் போதும் எனக்குத் துணை நிற்க வேண்டுமாய் தமிழகத்து மக்களாகிய உங்களைக் கைகூப்பி வேண்டுகிறேன்.

அன்பன்,

30-6-77

(எம்.ஜி. ராமச்சந்திரன்)


படத்தலைப்புகள் தந்த நன்னம்பிக்கை

கலியுகத்தில் தீமை தான் வெல்லும்; தீயசக்திகள் ஆற்றல் ஓங்கும்; அவற்றின் வலிமை பெருகும்; நல்லவர்கள் பல சவால்களை சந்தித்து நல்லவர்களாக வாழ வேண்டியிருக்கும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாய் இருந்தாலும் அதற்கு எடுத்துக்காட்டாக திகழ்பவர் எம்.ஜி.ஆர்.. அவர்கள் கலியுகத்தில் தீமையை எதிர்த்து போராடினால் நன்மை வெல்லும் என்பதை எடுத்துக்காட்டும் விதமாக தன படங்களுக்கு தர்மம் தலைகாக்கும், நல்லவன் வாழ்வான் என்ற பெயர்களை சூட்டி மக்கள் மனதில் நன்னம்பிக்கை *[good faith]* ஆழமாக பதியும் படி தன்னுடைய ரசிகர்களிடமும் தன்னை முதலமைச்சராகிய மக்களிடமும் கலியுகத்தை எதிர்த்து போராட முடியும் என்ற வலுவான எண்ணத்தை உருவாக்கியவர் எம்.ஜி.ஆர்.

காலம் கெட்டு விட்டது; அதனால் உலகில் இப்படித்தான் நடக்கும்; தீமைகள்தான் பெருகும் அவற்றை எதிர்த்து நாம் எதுவும் செய்ய இயலாது; தீயவர்களுக்கு தான் நல்ல வாழ்க்கை அமையும்; நல்லவர்கள் எல்லாம் தோற்றுப் போவார் என்று தன்னம்பிக்கை குறைந்து நம்பிக்கை வறட்சியுடன் மக்கள் புலம்புவதை கேட்டிருக்கிறோம். ஆனால் அவ்வாறு புலம்ப தேவையில்லை; நல்லவன் வாழ்வதும் கலியுகத்தில் நடக்கக்கூடியதுதான் என்று மாபெரும் புரட்சியை நடத்திக் காட்டியவர் எம்.ஜி.ஆர். இதற்கு அவர் தன் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதம் சினிமா என்பதாகும். சினிமா ஒரு பொழுதுபோக்கு அம்சம் என்று இன்றைக்கு மக்கள் கருதும் விஷயத்தை அவர் ஒரு வலி மையான கூர்மையான அறிவுக்கூர்மை மிகுந்த கருவியாக எடுத்துக் கொண்டு மக்களிடையே மாபெரும் புரட்சியை நடத்தினார். அவர் செய்ததை அவரது சினிமா விளக்கியது. தன வாழ்வை படம் பிடித்தார். படம் பிடித்தபடி வாழ்ந்தும் காட்டினார்.

ஈகை பாடம் கற்றுக்கொடுத்த எம்.ஜி.ஆர்

தீமையே வெல்லும் என்ற கருத்தை எதிர்த்து புரட்சி செய்து கலியுகத்தை கலியுகத்தின் தத்துவத்தை



தோற்கடித்தவர் எம்.ஜி.ஆர். புயல் வெள்ளச் சேதங்களுக்கு இன்றைக்கும் மற்ற மாநிலங்களை விட அதிகளவில் சினிமாக்காரர்களும் தொழிலதிபர்களும் தமிழகத்தில் இருந்து உதவுகிறார்கள் என்றால் அதற்கு மூல காரணம் எம்.ஜி.ஆர். கற்றுக் கொடுத்த ஈகை பாடம் என்று உறுதியாகக் கூறலாம். அந்தப் புரட்சியை தொடர்ந்து எடுத்துச் செல்ல அதற்கு பின் வந்தவர்களால் இயலவில்லை; காரணம் அதற்கு சில தனிப்பட்ட சந்தோஷங்களை தியாகம் செய்ய வேண்டும் அதற்கு இன்றுள்ளவர்கள் தயாராக இல்லை. இன்னொன்று வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடும் இரக்க சுபாவம் வேண்டும் அதுவும் இன்று பலரிடம் இல்லை.

எம்.ஜி.ஆரை பின்பற்றிய ராமராஜன்

எம்.ஜி.ஆருடைய வழியை பின்பற்றிய சிலரில் ராமராஜனின் பெயரை இங்கு குறிப்பிட்டுச் சொல்வது அவசியமாகிறது. ராமராஜன் நடிகராக இருந்த போதும் எம்.ஜி.ஆரைப் பின்பற்றி படங்களில் எவ்வித கெட்ட பழக்கமும் இல்லாதவராக வாழ்ந்தும் வந்தார்; நடித்ததும் வந்தார். அவருடைய படங்கள் பெரிய வெற்றியை பெற்றன. ராமராஜனை ஆங்கில பத்திரிகை ஒன்று கிராம ராஜன் என்று வாழ்த்தியது. தன்னுடைய வாழ்க்கையிலும் அவர் ஒரு ரசிகன் என்ற அளவில் எம்.ஜி.ஆரை பின்பற்றி ஒழுக்கமான கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். விஜயகாந்த் தன்னை நாடி வந்தவர்களுக்கு எம்.ஜி.ஆரை போல உதவி செய்து வந்தார். நடிகர் சங்க தலைவராக இருந்து பஞ்சாயத்துகளை தீர்த்து வைத்தார். கட்சியும் தொடங்கினார் ஏழு சதவித வாக்கு வங்கியும் கிடைத்தது. ஆனால் அதை தொடர்ந்து செய்ய அவர் குடும்பச் சூழ்நிலை இடமளிக்கவில்லை.

எம்.ஜி.ஆர். மட்டுமே மக்களை வழிநடத்திச் செல்லும் ஒரு மாமனிதராக மக்கள் தலைவராக புரட்சி

வீரராக மோசேக்கு ஆண்டவர் காட்டிய பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்தை தன்னுடைய ரசிகர்களுக்கும் நம்பிக்கை உள்ள ஒரு நல்ல வாழ்க்கை காத்திருக்கிறது என்று காட்டிய ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அவர் காட்டிய வழியில் பயணித்த ஏழை வசதியானவன் என அனைவருக்கும் நல்ல வாழ்க்கை அமைந்தது. அவரை நம்பிய மக்களுக்கும் ரசிகர்களுக்கும் அடுத்த தலைமுறையில் இளைஞர்கள் எல்லாம் படித்து தனியார் தொழில் மயமாக்கப்பட்ட போது அந்த தொழிற்சாலைகளில் தொழில் கூடங்களில் நல்ல வேலை கிடைத்து நல்ல சம்பளம் கிடைத்தது. திரையுலகிலும் எம்.ஜி.ஆரது பள்ளிக் கூடம் திரையுலகினரின் பிள்ளைகளுக்கு நல்ல வாழ்வை அமைத்தது. அவரிடம் ஸ்டண்ட் வேலை பார்த்து வந்தவரின் மகன் அமெரிக்காவில் டாக்டர் ஆகும் நிலைக்கு உயர்ந்தார். பல திரைக் கலைஞர்களின் பிள்ளைகள் நன்கு படித்து முன்னேறினர். திரைக் கலைஞர்களின் வாழ்க்கை தரம் முதிய வயதில் உயர்ந்தது.

எம்.ஜி.ஆர். வித்திட்ட தனியார் கல்வி கூடங்களால் வேலை வாய்ப்பும் தனிநபர் வருமானமும் அதிகரித்தன. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது அவர் காட்டிய வழியில் வழியாக இருந்ததால் அவருடைய புரட்சியின் கனி நேர்மையான விலை தந்ததால் மக்கள் நல்ல வழியில் படித்து வேலை பார்த்து வீடு கட்டி சொந்தமாக தொழில் செய்து வாழ்க்கை தரத்தை உயர்த்தி ஆன்மீகப் பாதையில் பயணித்து நிம்மதியாகவும் நேர்மையாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

எம்.ஜி.ஆர். வழியில் பயணிக்காமல் அவரை நம்பாமல் தீய சக்தியின் பால் ஈர்க்கப்பட்டு பயணித்தவர்கள் பொறாமைக்கும் பேராசைக்கும் ஆளாகி நிம்மதியின்றி சிரமப்படுவது பார்க்கிறோம். அவர்கள் தேர்ந்தெடுத்த வழி தவறான வழி என்பதால் இனி

அவர்களை திருத்த எவரும் வரப் போவதில்லை. என் வழி தனி வழி என்று கூறிய எம்.ஜி.ஆர். தனக்கொரு பாதை தனக்கு ஒரு தலைவன் என்ற கொள்கையில் நல்வழியில் நடந்து தன் பின்னால் தன்னை தொடர்ந்து வந்த தொண்டர்களையும் ரசிகர்களையும் ஆதரவாளர்களையும் நல் வழியில் பயணிக்க வைத்தார். ஒரு நல்ல தலைவனுக்கு அழகு ஆட்டு மந்தையை மேய்ப்பது போல மேய்த்து கொண்டு செல்வதல்ல. தன ஆட்களுக்கு ஒரு நல்ல வழியை காட்டுவதாகும்.

நன்மை செய்வதே என் கடமை ஆகும்

நன்றி சொல்வதே என் கண்ணியமாகும்

நட்பை வளர்ப்பதே என் இலட்சியமாகும். என்று அரச கட்டளை படத்தில் பாடிய படி நன்மை நன்றி நட்பு ஆகிய மூன்று வழிகளையும் தன வாழ்வில் பின்பற்றினார். இதனால் அவர் ஆரம்பித்த கலியுகப் புரட்சி இன்றைக்கு மாபெரும் வெற்றியை தந்து இருப்பதை நாம் மறுக்க இயலாது. அவருடைய கட்சியிலும் ஊழல் மலிந்து வந்த போதிலும் மக்கள் மனதில் நன்மை வெல்லும் என்ற நம்பிக்கை ஆழமாக வேரூன்றி இருக்கிறது. உலகளவில் தலைவர்களும் அரசியல்வாதிகளும் பணக்காரர்களும் கலியின்பிடியில் சிக்கி உள்ளனர். எனினும் தமிழ்நாடு பல துறைகளிலும் முதலிடத்தில் உள்ளதற்கு காரணம் அறம் வெல்லும் என்ற கோட்பாட்டில் இன்னும் அவர்களுக்கு இருக்கும் ஆழமான நம்பிக்கையே ஆகும் இந்த நம்பிக்கை ஆழமாக பதிய காரணமாக இருந்தவர் எம்.ஜி.ஆர். என்பதில் ஐயமில்லை.

மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பதுபோல எம்.ஜி.ஆர். நேர்மையானவராக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்ததனால் அவர் காலத்தில் தனியார் நிறுவனங்களும் ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி

அளித்தன. அவருக்கு பிறகு தலைவர்களாக மாறி ஆட்சி செய்தபோது நிறுவனங்களும் பேராசைக்காரர்களாக மாறி இலவசக்கல்வியை காசுக்கு விற்கும் கல்வியாக மாற்றிவிட்டன. மற்ற மாநிலங்களில் இருந்தும் நாடுகளில் இருந்தும் இங்குள்ள பல்கலைக்கழகங்களில் வந்து கல்வி பெறுகின்றனர் என்றால் அதற்கு மாணவர்களின் பணக்காரத்தனம் மட்டுமல்ல; இங்குள்ள கல்வித்தரமும் ஒரு காரணம் ஆகும்.

எம்.ஜி.ஆர். இருந்தவரை அவருடைய யுகப்புரட்சி அவருடைய கலியுக போராட்டம் சிறப்பாக நடைபெற்றது அவரும் வெற்றி பெற்றார் அவருடைய மக்களையும் நேர்வழியில் நடத்திச் சென்றார் கலியுகத்தில் மக்கள் தவறான முடிவுகளுக்கு ஜெ போடுவர் ஆதரவளிப்பர்; நல்ல முடிவுகளைப் புறக்கணிப்பர் என்பது ஒரு கருத்து. இவ்வாறு மக்கள் தவறான முடிவை ஆதரித்த போது கலி சிரித்தது; தன் வெற்றியை நினைத்து ஆனந்தம் கொண்டாடியது. ஆனால் எம்.ஜி.ஆர். அந்த கலியுடன் நடத்திய போராட்டத்தில் கலி தோற்றது; எம்.ஜி.ஆர். ஜெயித்தார்.



2

காவிய நாயகன் எம்.ஜி.ஆர்

காலத்தை வென்றவன் நீ

காவியமானவன் நீ

வேதனை தீர்த்தவன்

விழிகளில் நிறைந்தவன்

வெற்றி திருமகன் நீ நீ நீ

என்று இரண்டு இளம்பெண்கள் எம்.ஜி.ஆரை புகழ்ந்து பாடுவதாக அடிமைப்பெண் படத்தில் ஒரு சிறப்பான பாடல் அமைந்திருக்கும்காவியமானவன் என்றால் காவிய . நாயகன் அல்ல அவனே ஒரு காவியமாக ஒரு காவியத்தின் அனைத்து இயல்புகளையும் கொண்டவன் என்பது அதில் இடம்பெறும் ஒரு ;ஒரு திரைப்பட பாட்டு .பொருள் சொல்லுக்கு விரிவான ஆராய்ச்சி தேவை இல்லை என்று கருதுபவர்கள் கூட எம்.ஜி.ஆரை ஒரு காப்பிய நாயகன் என்று கொள்வதற்கு தடை கூற மாட்டார்கள்.

தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணப்படி எம்.ஜி.ஆருடைய பல படங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்அந்தப் படங்களில் அவர் ஒரு முழுமையான . காப்பிய நாயகனாக இருப்பதால் மக்கள் அவரை ஒரு தன்னேரில்லாத் தலைவன் ஆகவே சினிமாவிலும் அரசியலிலும் கண்டும் கேட்டும் உணர்ந்தும் புகழ்ந்தும் பின்பற்றியும் வந்தனர்.

காப்பியம் என்றால் ஒரு நீண்ட கதை அழகான வருணனையுடன் உறுதியான கருப்பொருளுடன் எடுத்து சொல்லப்படுவதாகும்அது ஒரு . வாய்மொழிக் கதையாக இருக்கலாம்; எழுதப்பட்ட கதையாக இருக்கலாம்; ஏதேனும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியை எடுத்துரைக்கலாம் அல்லது முற்றிலும் கற்பனையான ஒரு கதையாகவும் இந்த வகைகளில் ஏதேனும் ஒன்றை விரிவாக .இருக்கலாம் இலக்கிய நயத்துடன் ஏதேனும் ஒரு செய்யுள் வடிவில் இயற்றப்படும் பொழுது அது காப்பியம் என்ற பெயரைப் பெறுகின்றதுதிரைப்படம் என்பது இந்த நான்கு . வகைகளில் ஏதேனும் ஒரு கதையை நடித்துக்காட்டும் ஒரு உயர்ந்த செவ்வியல் படைப்பாக அமையும்போது அதுவும் இந்த இருபதாம் மற்றும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் காப்பியத் தகுதியை அடைகின்றதுதிரைப்படம் . ப்படைப்பு என்பதால் சாமான்யரும் ரசிக்கப்படும் கலை அதனை பழகுதமிழ் நடையில் மட்டுமே உருவாக்க .முடியும் ஆரம்ப காலத்தில் புராணக் கதைகளும் மன்னர் கதைகளும் செந்தமிழ் நடையில் உருவாயினபின்னர் . குடிமக்கள் கதைகள் வந்த போது பழகுதமிழ் நடை பழக்கத்திற்கு வந்தது.

காலத்துக்கேற்ற மொழிநடை காப்பியத்தின் தகுதியை உறுதி செய்கிறதுஇவ்வகையில் பல . எம்.ஜி.ஆர் படங்கள் காப்பியங்களாக உருவாக்கப்பட்டு காப்பியத்தின் மொழி தகுதியை பெற்று சிறப்பு நிலை பெறுகின்றன

நாட்டுப்புறக் காவியங்கள்

எம்.ஜி.ஆர் நடித்த மதுரை வீரன்ராஜா தேசிங்கு , நாட்டுப்புற மரபில் ஆகிய கதைகள் அல்லது படங்கள் .இருந்து எடுக்கப்பட்ட உண்மை வரலாற்று கதைகள் ஆகும் பஞ்சகல்யாணிக் குதிரையை அடக்கி தன் தந்தையோடு சிறையில் அடைபட்டிருக்கும் அனைத்து மன்னர்களையும் விடுவித்தவன் மாவீரன் தேசிங்குராஜன்அவனுடைய .

கதையை நாட்டுப்புற பாடல்களாக்கி எழுதி வாய்மொழி .க அதனை பாடி வருகின்றனர்மரபா தேஜஸ் சிங் என்ற மன்னனை கிராமத்து மக்களின் மொழி மரபில் தேசிங்கு என்று பெயர் மாறி புகழ்பெற்று அவன் நிலைத்து இருந்தான்.தெ மீயின் .போ . அண்ணன் தெ.போ . கிருஷ்ணசாமி பாவலர ் இந்தக் கதையை எழுதி நாடகமாக நடித்து வந்தார்வாங்கி திரைப்படமாக அந்த நாடகத்தை , இதில் கடைசியில் இர .மேகலா பிக்சர்ஸ் எடுத்தனர்ண்டு எம்.ஜி.ஆர்களும் இறந்து போவது ரசிகர்களுக்கு மிகுந்த வேதனையை கொடுத்தது .





மதுரை வீரன் கதை

சக்கிலியனான வீரன் மன்னர் மகளை சிறையெடுத்த வீரவரலாற்றை விளக்கிய மதுரை வீரன் படம் 1951இல் வெளியாகி தமிழகத்தில் அதிக திரையரங்குகளில் ஒரே நாளில் வெளியானதுமுதன் முதலாக ஒரு கோடி ரூபாய் . வசூல் செய்த படம் என்ற பெருமையை மதுரைவீரன் மதுரை வீரன் படம் .பெற்றதுஎம்.ஜி.ஆரை உச்சநடிகர் என்ற தகுதிக்கு கொண்டு சென்றதுஇதற்கு முன்பு . வெளிவந்த மர்மயோகி படத்தில்எம்.ஜி.ஆர் பிரபலமாகி

இருந்தாலும் மதுரை வீரனே அவரை நாட்டுப்புற மக்களின் மனம் கவர்ந்த காதல் நாயகனாக காப்பிய நாயகனாக தகுதி உயர்த்தியது.

தாழ்ந்த குலத்தில் பிறந்ததாக நம்பப்பட்ட வீரன் உயர் குலத்தைச் சேர்ந்த நாட்டை ஆட்சி செய்த மன்னனின் மகளை கவர்ந்து வந்து திருமணம் முடித்த கதை மதுரைவீரன் சாமி பாடல் என்ற பெயரில் கிராமப்புறங்களில் பாடப்பட்டு வந்த ஒரு உண்மை கதை பாடலாகும்அந்த வரலாற்று கதையில் ஏற் .கனவே ஒரு படம் தமிழில் வந்திருந்தாலும் கூட அதுவும் வெற்றிப்படமாக இருந்ததனால் அதே படத்தை சில பல மாற்றங்களுடன் எடுத்தனர் .

திராவிட இயக்கத்தைச் சேர்ந்த எம்.ஜி.ஆர் மதுரை வீரனாக நடிப்பதால் அதற்கேற்ப சில மாற்றங்களைச் செய்து மீண்டும் எடுத்தபோது இந்தப் படமும் மாபெரும் வெற்றியை பெற்று எம்.ஜி.ஆரை திரையுலகின் உச்சிக்கு கொண்டு சென்றது.



காப்பிய தலைவனின் பண்புகள்

ஒரு காப்பிய தலைவனின் உயர் பண்புகளாக சிலவற்றை நம்முடைய பழந்தமிழ் இலக்கணம் பட்டியலிடுகின்றது இந்த இலக்கண நூலின் பட்டியலை . எம்.ஜி.ஆரின் படங்களில் அவருடைய கதாபாத்திரத்தின் பண்பு அந்தப் பட்டியலோடு இணைத்துப் பார்த்தால் இரண்டும் இம்மி பிசகாமல் ஒன்றுபோலவே அமைந்துள்ளன.

காப்பியத் தலைவனின் பண்புகளாகப் பேராண்மை,

எல்லோரையும் தன்வயப்படுத்தும் தகுதி,

உயர்பண்பு,

விழுமிய கல்வியறிவு,

அனைவரையும் ஈர்க்கும் தோற்றப்பொலிவு

அனைவராலும் விரும்பப்படும் இயல்பு,

வாழும் காலத்திலேயே வரலாறு தோன்றக் காரணமாயிருக்கும் நிலை என்று சில பண்புகள் விளக்கப்படுகின்றனஇவற்றை தமிழ் திரைப்படத்தில் . கதாநாயகனாக நடித்து வெற்றிபெற்றஎம்.ஜி.ஆரின் பண்புகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிகச் சரியாக பொருந்தி இருப்பதை உணரலாம்.

பேராண்மை

பேராண்மை என்பதற்கு வள்ளுவர் விளக்கம் கூறுமிடத்து "பிறன் மனை நோக்கா பேராண்மை" என்கிறார். எம்.ஜி.ஆர் படங்களில் அவருடைய கதாபாத்திரம் பேராண்மை உடையதாக படைக்கப்பட்டிருக்கும்.மற்ற பெண்கள் அவரை காதலித்தாலும் அவர் தான் காதலிக்கும் பெண்ணை தவிர வேறு யாரையும் நிமிர்ந்து பார்ப்பதில்லை. அவரை காதலிக்கும் பெண்கள் அவருடைய உயர் குணத்தையும்

பேரழகையும் கண்டு வியந்து தன்வயமிழந்து காதலித்து கனவில் கற்பனையில் அவரோடு ஆடிப்பாடி மகிழ்வர். பாடல் காட்சிகள் இடம் பெற்றாலும் கூட கனவுக்காட்சி அல்லாத நிலையில் அப்படத்தில் எம்.ஜி.ஆருக்கும் அந்த இரண்டாம் கதாநாயகிகளுக்கும் எவ்வித தவறான பழக்க வழக்கமும் இருப்பதில்லை. ஆக பிறன்மனை நயவாமை என்ற பண்பினை அவருடைய கதாபாத்திரத்தில் அவர் முக்கியப் பண்பாக கொண்டிருந்தார்.

வரலாற்றுப் படமாக அவர் நடித்த மதுரை வீரன் கதையை மாற்ற இயலாது என்ற காரணத்தினால் அது உண்மை வரலாறாக இருந்ததனால் அப்படத்தில் அவருக்கு பொம்மியும் வெள்ளையம்மாளும் மனைவியாக இருந்தனர். சமூகப் படங்களில் அவர் இரண்டு மனைவி என்பதை ஏற்றுக் கொள்வதே கிடையாது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த கொள்கையை பிறன்மனை நோக்காப் பேராண்மையை அவர் பின்பற்றியதை அடுத்து உயர் பண்புடையவனாக காப்பியத் தலைவனாக உயர்ந்தார்.

தொல்காப்பியம் காட்டும் தலைவனின் பண்புகள்

ஒரு காவிய நாயகனாக ஒருவன் உயர்வதற்கு அவனுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியப் பண்புகளை சங்க இலக்கிய நூலான தொல்காப்பியம் தலைவனின் பண்புகள் எனப் பட்டியலிடும் அப் பண்புகளோடு . எம்.ஜி.ஆர் படத்தின் கதாநாயகனின் பண்புகளை அவருடைய கதாபாத்திரச் சிறப்பை ஒப்பிட்டு அறியலாம்.

உயர்வு என்பது தாய் தந்தையரை மதித்தல், மூத்தோர் சொல் அமிர்தம் ,பெரியோர் சொல்லை மதித்தல் வாய்மை ஆகிய ,அறம் ,உண்மை அன்பு ,என்று கருதுதல் பெண்களையும் குழந்தைகளையும் ,வழிகளில் நடத்தல் மனிதர்கள் சாதி மத இன பாகுபாடு இன்றி ,மதித்தல் றப்பொக்கும் எல்லா உயிர்க்குமபி◌் என்ற அடிப்படையில்

அனைவருக்கும் சம மரியாதை வழங்குதல்என பல உயர் , பண்புகளைஎம்.ஜி.ஆர் படத்திலும் தன்னுடைய நிஜவாழ்விலும் பெற்றிருந்தார்.

மனிதர்களை மதித்தல்

எம்.ஜி.ஆர். காலத்தில் வாழ்ந்த முன்னணி நடிகர்கள் படித்த புத்திசாலித்தனம் மிக்க காமெடி நடிகரை ஆனால் .என்று அழைத்ததுண்டு’குரங்கு‘ எம்.ஜி.ஆர் ஒருபோதும் ஒருவரையும் என்று ’டேய்‘ அவரது வீட்டில் .சொல்லிக் கூட அழைத்தது கிடையாது இருப்பவர்களும் தம் வீட்டில் வேலை பார்க்கும் பெண்களையும் கார் ஓட்டுநர்உதவியாளர் , போன்றவர்களையும் வெறுமனே பெயர் சொல்லி பணியாளர் .அழைப்பதை அவர் ஆதரித்ததும் கிடையாது அனைவரையும் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் சமையலர் முதற்கொண்டு ,செல்லும் ரிக்ஷாக்காரர் அக்கா என்றுதான் ,அனைவரையும் அண்ணேஎம்.ஜி.ஆர் வீட்டினர் அழைக்க வேண்டுமே தவிர பெயர் சொல்லி அழைப்பதோ பெயரை குறிப்பிட்டு பேசுவதோ கூடாது என்பது எம்.ஜி.ஆர் மிகத்தீவிரமாக பின்பற்றி வந்த ஒரு நடைமுறையாகும்தானும் தன்னை சார்ந்தவர்களும் தன் . குடும்பத்தினரும் மனிதத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதில் மிக கவனமாக இருந்துவந்தவர் எம்.ஜி.ஆர். .இதுவே அவரிடம் இருந்த மிக உயர்ந்த பண்புகளில் ஒன்று

கல்வி நலன்

அடுத்ததாக நாயகனுக்கு கல்வி இன்றியமையாததாகும் இங்கு கல்வி என்பதை ஏட்டுக்கல்வி என ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லைதன் தொழில் சார்ந்த அறிவை கல்வி எனக் . ஏனெனில் முன .கொள்ளலாம்்பு தொழில் சார்ந்த பிரிவுகள் இருந்தபோது குறிப்பிட்ட தொழில் சார்ந்த

குடும்பத்தினர் அனைவருமே தாம் செய்து வந்த தொழிலில் கைதேர்ந்தவர்களாக தேர்ச்சி பெற்றவர்களாக அனுபவம் மிக்கவர்களாக நுட்பமும் ஒட்பமும் உடையவர்களாக இருந்து வந்ததை அறிவோம்,அத்தகைய தொழில் தேர்ச்சி . தொழில்நுட்பம் இருந்ததனால்மட்டுமே உலகத்தின் முதல் தமிழனாக எம்.ஜி.ஆர் விளங்கமுடிந்தது.

கீழடியில் நாலாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தங்க நகைகளை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டு அதன் அடிப்படையில் ஆராய்ந்தால் உலகில் முதன்முதலாக பொற்கொல்லர் ஆக இருந்தவன் தமிழன் என்பதை உணர முடியும் இந்த தொழிலறிவு தொழில்நுட்பம் . எம்.ஜி.ஆரிடமும் சிறப்பாக இருந்ததுச ,நாடகம் . ிினிமா தொடர்பான பல்வேறு துறைகளில் அவர் ஆழமான அறிவும் பரந்த அனுபவமும் பெற்றிருந்தார்அந்த சினிமா . துறையின் வலிமையை நன்கு உணர்ந்திருந்ததால் மட்டுமே கொண்டு மாபெரும் அவரால் அதனை ஒரு ஆயுதமாக மக்கள் புரட்சியை நடத்தி மக்களின் மனங்களில் சிம்மாசனம் இட்டு அமர முடிந்தது.

ஒரு காப்பியம் தலைவனுக்குரிய மிக முக்கியமான தகுதிகளாகக் குறிப்பிடும் அனைவராலும் விரும்பப்படும் இயல்பு ,அனைவரையும் ஈர்க்கும் தோற்றப்பொலிவு ; வாழும் காலத்திலேயே வரலாறு படைக்கும் இயல்பு ஆகிய இந்த மூன்றையும் ஒருங்கே பெற்றவர் எம்.ஜி.ஆர். அவருடைய தோற்றப்பொலிவுக்கு தமிழகத்திலும் சரி பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் கோடிக்கணக்கானோர் ரசிகராக இருக்கின்றனர். அவருடைய விருந்தோம்பலும் இனிமையாக பழகும் விதமும் அன்பான சொற்களும் எதிரியைக் கூட தன்வயப்படுத்தும் நேர்மையும் அனைவராலும் விரும்பப்படுவனவாக இருந்தன.

வாழும் காலத்திலேயே வரலாற்று நாயகனாக மாறியவர் எம்.ஜி.ஆர்தொடர்ந்து மூன்று தேர்தல்களில் .

வெற்றி பெற்று தன் வாழ்நாள் முழுக்க முதலமைச்சராக இது .ஏற்று நடத்திய ஒப்பற்ற தலைவர் இருந்து தலைமை ஒரு வரலாற்றுச் சாதனை என்பதனால் அவரை வரலாற்று நாயகன் என்று குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

தண்டியலங்காரத்தின் காப்பிய இலக்கணம்

தண்டியலங்காரம் காப்பிய நாயகன் இடம்பெறும் பெருங்காப்பியம் பற்றிக்கூறும்போது எம்.ஜி.ஆர் படத்தின் காட்சிகளை விவரிப்பது போல வரிசைப்படுத்தியுள்ளது.

பெருங்காப்பிய நிலை பேசும் காலை

வாழ்த்து வணக்கம் வருபொருள் உரைத்தல்

ஏற்புடைத் தாகி முன்வர இயன்று

நாற்பொருள் பயப்பதாய்

தன்னிகர் இல்லா தலைவனை உடைத்தாய்

மலை கடல் நாடு வளநகர் பருவம்

இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து

நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்

பூம்பொழில் நுகர்தல் நீர் விளையாடல்

தேம்பிழி களி சிறுவரைப் பெறுதல்

புலவியால் புலத்தல் கலவியில் கலத்தல் என்று

இன்னன புனைந்த நன்னடைத் தாகி

மந்திரம் தூது செலவு இகல் வென்றி

பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி

நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்

கற்றோர் புனையும் பெற்றிய தென்ப'.

மேலே

கூறிய உறுப்பில் சில குறைந்திடும் எனினும்'

வேறுபாடு அன்று என விளம்பினர் புலவர்'

இது தண்டியலங்காரம் நூற்பா ஒன்பதாகும்.

தண்டியலங்காரம் ஒரு காப்பியத்தை தொடங்குவதற்கு முன்பு இறை வாழ்த்து வணக்கம்இந்தக் காப்பியத்தில் , சொல்லப்படும் முக்கிய பொருள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று இடம் பெற வேண்டும் என்கிறது. பெரும்பான்மையானஎம்.ஜி.ஆர் படங்களில் முதல் காட்சியில் கடவுள் வாழ்த்து இடம்பெறுவதுண்டு. ஒரு கதாபாத்திரம் கடவுள் படத்தின் முன்பு நின்று ஏதேனும் கடவுளை வணங்கும் காட்சி அல்லது ஊர் மக்களோ குடும்பத்தினரும் பெரியவருக்கு வணக்கம் சொல்லி கதையை தொடங்கும் நிலை அல்லது அந்தக் கதையின் மைய பிரச்சனை என்ன என்பதை காட்டி இனி இவர்களின் இந்த பிரச்சினையை எவ்வாறு தீர்க்கப்படுகிறதுஎன்ற , .ஆர்வத்தை உருவாக்கும் நிலைமை இருப்பதை காணலாம்

காப்பியத்தில் உறுதி பொருள்களான நாற்பொருள் என்று கூறப்படுவது அறம் பொருள் இன்பம் வீடு என்பனவாகும்/. எம்.ஜி.ஆர் படங்கள் அனைத்தும் இந்த இலக்கண அம்சங்களுக்கு போருந்தியனவாகவே உள்ளனஅறத்தின் . வழியே பொருள் ஈட்டி அனைவருக்கும் உதவி ஈத்துவக்கும் இன்பம் பெற்று வாழ்வது வீடு பேற்று வாழ்வை விட இனிமையானது என்பதைஎம்.ஜி.ஆரின் படங்கள் விளக்கின . வள்ளலாக வாழ்வதை விட வாழும் சுவர்க்கம் வேறுண்டோ என வாழ்ந்த காப்பிய நாயகன்எம்.ஜி.ஆர்.

காப்பிய இலக்கண விதிகளுடன் எம்.ஜி.ஆர் படங்களைப் பொருத்தி ஆய்வு செய்து இன்னும் விரிவான கட்டுரை வெளிவரும்.

3

புராண நாயகர் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரிடம் ஒருமுறை நிருபர்கள் நீங்கள் ஏன் பக்தி படங்களில் நடிப்பதில்லை என்று கேட்டனர். அதற்கு அவர் அளித்த பதில் அவர் ஒரு புராண நாயகர் என்பதற்கு ஆதாரமாக அமையும்.

'பக்தி என்பது என்ன, நல்லொழுக்கம் தானே. தாயிடத்தில் அன்பு, தந்தையிடத்தில் மரியாதை; ஆசான் இடத்தில் பயபக்தி; ஏழைகளிடத்தில் இரக்கம். இந்தப் பண்புகள் தானே. நல்லொழுக்கமும் பக்தியும் மனத்தூய்மையும் தானே பக்தி. அந்தத் தூய்மையை ஏற்படுத்த நான் பக்தி படத்தில் நடித்து கடவுள் வேடம் அணிய வேண்டியதில்லை. ஆனால் இவைகளை என் படங்கள் வலியுறுத்துவதை நீங்கள் மறுக்கவே முடியாது. அதனால் நான் நடித்த அனைத்துப் படங்களும் பக்தி படங்கள் தான்' என்றார். இதைத்தான் வள்ளுவர் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்றார்.



ஒரு சமுதாயத்தில் மதம் என்பது மக்கள் அனைவரும் ஒன்று கூடி வாழவும் ஒருவருக்கொருவர் இணக்கமாக இருக்கவும் நன்மையாக நடக்கவும் வழிவகைகளை செய்து தருகிறது. இந்த மதம் ஒரு கடவுளை அல்லது பல கடவுளரை முதன்மைப்படுத்தி அவருக்குப் பயந்து, என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும்; என்னென்ன செய்யக்கூடாது என்று ஒரு விதிமுறை பட்டியலைத் தருகின்றது. இந்த விதிமுறை பட்டியலைப் பார்த்தால் மதம் கூறும் விதிமுறைகள் அனைத்தும் அந்த சமுதாயத்திற்கு சமுதாய ஒற்றுமைக்கு தேவையான விதிமுறைகளாகவே இருப்பதை அறியலாம். சமுதாயத்திற்குத் தேவையற்ற எந்த ஒரு விதிமுறையையும் ஒரு மதம் எடுத்துரைப்பதில்லை. எனவே மதம் சார்ந்த கடவுள் சார்ந்த பக்தி சார்ந்த விஷயங்கள் அனைத்தும் அந்த மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதற்கு உரியனவாகவே சமயப் பெரியவர்கள் எனப்படும் சமூக பெரியவர்களால் உருவாக்கப்பட்டன. இதனால் தான் இவற்றில் சில ஆணாதிக்கம் சார்ந்தவையாகவும் இருந்து விடுகின்றன.

[சமயச் சொல் அகராதி தயாரிப்புப் பணியில் நான் ஈடுபட்டிருந்த போது அனைத்து சமயங்களைப் பற்றியும் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. பின்பு சமயம் மற்றும் மெய்யியல் முதுகலைப் படிப்பும் ஓராண்டு படித்து அறிந்தேன். இவற்றில் இருந்து நான் பெற்ற தெளிவைத் தான் மேலே குறிப்பிட்டிருக்கிறேன்]

எம்.ஜி.ஆர் பக்தி என்பது நல்லொழுக்கம் சார்ந்தது என்று ஒரு விளக்கம் தருகிறார். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்று அண்ணா கூறிய தாரக மந்திரங்கள் எம்.ஜி.ஆர் வாழ்வில் அன்றாடம் கடைப்பிடிக்கப்பட்டன. அவற்றையே அவர் தன்னுடைய படங்களிலும் வலியுறுத்தினார். தன்னுடைய வாழ்க்கையிலும் பின்பற்றினார். 1967இல் தேர்தல் முடிவுகள் வெளியான

போது நிருபர்கள் அண்ணாவிடம் வந்து உங்கள் ஆட்சியின் கொள்கை என்ன என்றனர். அதற்கு அண்ணா 'நாடோடி மன்னனில் எம்.ஜி.ஆர் சொல்லியிருப்பது தான் எங்கள் ஆட்சியின் கொள்கை' என்றார். திமுக என்றால் எம்.ஜி.ஆர். என்ற எண்ணம் அந்தக் காலத்தில் மக்களிடமும் திமுக தலைவர் அண்ணாவிடமும் ஏற்பட்டுவிட்டது. ஆட்சிக்கு வந்த பிறகு இந்து அற நிலையத் துறையில் திமுகவினர் இடம் பெற வேண்டும் என்று அண்ணாவிடம் சொல்லியபோது, அவர் 'நாங்கள் கோயிலுக்குள் வருவது சரி அல்ல, அந்த கணக்கு வழக்குகளை கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் பார்ப்பதே சரி' என்றார். திமுகவினர் இந்து அற நிலையத் துறையில் இடம் பெறுவதை அண்ணா தவிர்த்து விட்டார்.

திமுகவினரும் எம்.ஜி.ஆரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் போல காட்டிக்கொண்டாலும் நிஜத்திலும் படத்திலும் எம்.ஜி.ஆர் கடவுளர்களை விமர்சித்தது கிடையாது. பொதுமக்களில் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் தங்களுடைய கடவுளர்கள் செய்த சாதனைகள் அல்லது தங்களுடைய புராண இதிகாசங்களில் கூறப்படும் அசகாய சூரத்தனங்கள் போன்றவற்றால் மகிழ்ச்சி அடைந்தனர். புராண இதிகாச சாகச வீரர்கள் செய்தவற்றை எல்லாம் எம்.ஜி.ஆர் செய்யும்போது எம்.ஜி.ஆரை ஒரு புராண நாயகனாக , ஒரு சாகச வீரனாக ஏற்றுக்கொண்டனர். அவரால் முடியாதது எதுவும் இல்லை என்று ஒரு ஆழமான நம்பிக்கை அவர்கள் மனதில் பதிந்து விட்டது.

சாகச நாயகன் ஆகிய எம்.ஜி.ஆர் படங்களில் மட்டுமல்ல நிஜத்திலும் பல இடங்களில் தன்னுடைய வீரதீர பராக்கிரமத்தை வெளிப்படுத்தி இருப்பதற்கு நிறைய ஆதாரங்கள் உண்டு படங்களில் அவரை கண்ட மக்கள் அவருடைய தர்ம சிந்தனையை கண்டு கர்ணனாகவும்

அண்ணனுக்கு அடிபணியும் தம்பியாக இருப்பதில் நிஜத்திலும் திரையிலும் இலட்சுமணனாகவும் பல வீரர்களை எதிர்த்து ஒருவராக நின்று போராடி ஜெயிப்பதில் அபிமன்யுவாகவும் அடங்காத அல்லி ராணியையும் அடக்கி ஆள்வதில் தன்னை பல பெண்கள் விரும்பும் போது அவர்களை மறுத்து விடுவதில் அர்ஜுனனாகவும் அவரும் அவர் மனைவியும் பெயர் பொருத்தத்திலும் நிஜ வாழ்க்கையிலும் இணைந்து ஆதர்ச தம்பதிகளாக இருந்ததில் ஜானகி ராமச்சந்திரன் ஆகவும் மக்கள் அவரை ஏற்றுக்கொண்டனர். பொதுமக்களின் மனங்கவர்ந்த அனைத்து புராண நாயகரைப் போல அவர்கள் மனதில் எம்.ஜி.ஆர் வாழ்ந்திருக்கிறார். எனவே தான் அவருக்கு திமுகவினால் அவமானம் ஏற்பட்ட பொது மக்கள் அவரை தனி கட்சி ஆரம்பிக்கும்படி வலியுறுத்தி அக்டோபர் புரட்சி நடத்தி மக்கள் தலைவராக உருவாக்கினர்.

ஒரு புராணத்தில் ஒரு நாயகன் சிறப்பிடம் பெற்றது போல் அல்லாமல் பல புராணங்களின் பல நாயகர்களும் சேர்ந்து ஒரே நாயகனாக உருவெடுத்தது போல் எம்.ஜி.ஆர் அவர்கள் கண்களுக்கு தோற்றமளித்தார் இராமச்சந்திரனின் ஏகபத்தினி தன்மை, அர்ஜுனனின் காதல் லீலை, அபிமன்யுவின் அஞ்சா நெஞ்சம், கர்ணனின் தர்ம குணம், மாயக் கண்ணனின் காரியசித்தி, பரதனின் புகழ் ஆகிய பல பாரத புத்திரர்களின் சிறப்பியல்புகளை ஒருங்கே பெற்றவராக எம்.ஜி.ஆர் திரையிலும் நிஜத்திலும் திகழ்ந்தார்.

ஜானகி ராமச்சந்திரன்

எம்.ஜி.ஆர் தான் நடிக்கும் படங்களில் மதுரை வீரன். விக்கிரமாதித்தன் போன்ற வரலாற்று கதைகள் தவிர மற்றவற்றில் அவர் ‘ஒரு சொல் ஒரு வில் ஒரு இல்’ என்ற அடிப்படையில் தான் நடித்து வந்தார். எந்த படத்திலும் அவர் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வதோ

இன்னொரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளாமல் அவருடன் சேர்ந்து வாழ்வதோ கிடையாது. அவரை வேறு பெண்கள் ஒருதலையாக காதலித்தாலும் அந்தப் பெண்ணுக்கு புத்தி சொல்லி அந்தப் பெண்ணை வெறுக்காமல் ஒதுக்காமல் தன்னுடைய சகோதரியாக ஏற்றுக் கொண்டு அவள் மீது பாசத்தை பொழிவார். தன்னுடைய காதலியை அல்லது மனைவியை அவர் மிகவும் கௌரவமாக படத்திலும் நிஜத்திலும் நடத்தினார். இதனால் இத்தகைய காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் அறிந்தபெண்கள் இளைஞர்கள் பொதுமக்கள் என அனைவரும் எம்.ஜி.ஆரை அவர் பெயருக்கேற்ற ஜானகி ராமச்சந்திரனாகவே கருதினர். இடையிடையே சில வதந்திகளும் அவதூறுகளும் வந்தாலும்கூட அவையெல்லாம் காலப்போக்கில் காணாமல் போய்விட்டன. இதுவும் அவருக்கு இன்றுவரை அவருடைய பெயர் கெட்டு விடாமல் பாதுகாப்பாக அமைந்திருக்கின்றது.

அர்ஜுனன்

நாட்டுப்புற மக்களின் ஃபேவரிட் ஹீரோ என்றால் அது அர்ஜுனனாக தான் இருக்கும் அவன் வீர தீர சாகசங்கள் கெட்டிக்காரன் எனவே அவனை திருமணம் செய்து கொள்ள பல பெண்கள் ஆசைப்பட்டனர் அவன் அஞ்ஞாதவாசம் இருந்தபோதும்கூட பெண் வேடம் போட்டு இளவரசிக்கு நாட்டியம் கற்று கொடுத்தபோது அவன் அர்ஜுனன் என்று அறிந்ததும் அந்தப் பெண்ணை திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறார். அப்போது மாணவி தன் மகளுக்கு சமம் என்று சொல்லி அந்த பெண்ணை திருமணம் செய்து கொள்ள அர்ஜுனன் மறுத்துவிடுகிறான். அந்த வகையில் அர்ஜுனன் தர்ம நியாயங்களுக்கு கட்டுப்பட்டவன் ஆவான்.

அர்ஜுனன் நாகவள்ளியையும் பவளக்கொடியையும் பின்பு அல்லியையும் திருமணம் செய்ததாக நாட்டுப்புறக் கதை பாடல்கள் இருக்கின்றன அல்லி அடங்காத ராணியாக இருக்கும்போது அவளை அடக்குவதற்காக அர்ஜுனன் அவள் தூங்கும் போது அவள் கழுத்தில் தாலி கட்டி விடுகிறான். இதை ஒரு பெரிய சாகசமாக நினைத்து கிராமத்து மக்கள் அல்லியின் கொட்டத்தை அடக்கிய அர்ஜுனன் என்று பாராட்டிக் கொண்டே இருந்தனர். ஆனால் எம்.ஜி.ஆர் படத்தில் அவ்வாறாக ஒரு பெண் தூங்கும் போது அவளுக்கு தெரியாமல் திருட்டுத்தனமாக தாலி கட்டாமல் நேரடியாகவே அவளிடம் பேசி அவளுடைய ஆணவத்தையும் கொட்டத்தையும் அடக்கி அவளை சாத்வீகமான முறையில் மாற்றி பல உண்மைகளை அவளுக்கு உணர்த்தி அவள் விருப்பத்தின் பேரில் அவளை மணந்து கொள்வதாக வரும் காட்சிகளே படத்தில் இடம்பெறும். இந்தப் போக்கு சாதாரண மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. தூங்கும் போது தாலி கட்டினவனுடன் வேறுவழியில்லாமல் குடும்பம் நடத்துவதை எந்தப் பெண்ணும் விரும்ப மாட்டாள். அதே நிலைதான் அன்று அல்லிக்கும் ஏற்பட்டது. அதனால் பெண்கள் விரும்பும் வகையில் அவர்களிடம் இருக்கும் ஆணவத்திற்கு காரணமான விஷயங்களை எடுத்துரைத்து அவர்கள் அவமானப்படுத்தியதால் தனக்கு ஒன்றும் பாதிப்பில்லை; அதனால் பாதிக்கப்படுபவர்கள் அந்த அடங்காப்பிடாரியான பெண்கள் தான் என்பதை எம்.ஜி.ஆர் தன படங்களில் உணர்த்துவார்.

குலேபகாவலி, கணவன், குமரிக்கோட்டம் ஆகிய படங்களின் கதை அமைப்பு அகம்பாவம் பிடித்த பெண்ணை அடக்கி திருமணம் செய்வதாக அமைந்திருக்கும். அந்தப் பெண்ணை காதலிக்கும் படியான சூழ்நிலைகள் ஏற்படும்போது அந்தப் பெண்ணின்

விருப்பத்தின் பேரில் அவளை ஏற்றுக் கொள்வதாக எம்.ஜி.ஆர் படங்களில் காண்பிப்பது எல்லா பெண்ணுக்குமே உகந்த ஒரு முடிவாக இருக்கும். எனவே இந்தப் படங்களை பெண்களும் ரசித்து வெற்றி படங்கள் ஆக்கினர். தான் விரும்பாத எவனையும் திருமணம் செய்து கொள்ள எந்தப் பெண்ணும் விரும்ப மாட்டாள். அவள் விரும்பிய பிறகு ஒரு ஆண் அவளை ஏற்றுக் கொள்வதை சிறந்த முறையாக இருக்கும். இத்தகைய சிறந்த முறையை எம்.ஜி.ஆர் மேற்கூறிய மூன்று படங்களிலும் எடுத்துக் காட்டி இருப்பார்.

குலேபகாவலியில் வீரப்போட்டி அறிவுப் போட்டி ஆகியன முடிந்ததும் புலி போட்டிக்கு எம்.ஜி.ஆரை அனுப்ப பகாவலி ராணிக்கு மனம் வராது. அவரது



வீரத்தையும் அறிவையும் கண்டு ராணி காதலிக்க தொடங்கிவிடுவார்.

மயக்கும் மாலை பொழுதே நீ போ போ
இனிக்கும் இன்ப இரவே நீ வா வா
இன்னலை தீர்க்க வா

என்று எம்.ஜி.ஆர் இருக்கும் இடத்தின் அருகே வந்து பாடத் தொடங்கிவிடுவார். எம்.ஜி.ஆரும் பாடிக் காதலிப்பார். இப்போது படம் பார்ப்பவருக்கு எம்.ஜி.ஆர் மறு நாள் புலியுடன் மோதி வெற்றி பெற்றால் மட்டுமே ராணியை திருமணம் செய்ய முடியும். இல்லை என்றால் ராணியின் காதல் வெற்றி பெறாது என்ற சிக்கல் தோன்றிவிட்டது. எம்.ஜி.ஆர் புலியுடன் மோதி வெற்றி பெறுவார்.

புலிச் சண்டை படப்பிடிப்பு நடந்த போது திடீரென்று புலி ஆறடி பள்ளத்தில் இருந்து மேலே குதித்து விட்டது. கேமரா கிரேனுடன் மேலே போய்விட்டது. எம்.ஜி.ஆர் தனது ராஜ உடைக்குள் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து புலியை குறி பார்த்த படி கேமராவின் அருகே நின்று கொண்டார். அருகில் இருந்த இருவர் அங்கிருந்த ஒரு இடத்தின் கூரை மீதேறி விட்டனர். கேமராமேனும் இயக்குனரும் மேலே கிரேனில் உட்கார்ந்திருக்கின்றனர். புலி இருக்கும் இடத்தில் எம்.ஜி.ஆர் மட்டுமே நின்றுகொண்டிருந்தார். புலி மெதுவாக செட்டுக்குள் போய்விட்டது. புலி பயிற்சியாளர் பள்ளத்துக்குள் இருந்துகொண்டு மேலே வர முடியாமல் கத்துகிறார். அங்கிருந்த நீண்ட கயிறை எடுத்து எம்.ஜி.ஆர் பள்ளத்துக்குள் எறிந்தார். புலி பயிற்சியாளர் மேலே வர எம்.ஜி.ஆர் அவருக்கு உதவினர். வெளியே வந்த அவர் ஐயோ என் புலி என் புலி என்று புலியின் பின்னாலேயே ஓடி போனார்.

எம்.ஜி.ஆர் உடல் பலமும் மனத்துணிவும் மிக்கவர். புலி சண்டை என்றால் புலியினால் சில எதிர்பாராத இன்னல்கள் ஏற்படக் கூடும் என்பதை எதிர்பார்த்து தன் கைத்துப்பாக்கியை கொண்டு வந்திருந்தார். பதறி ஓடாமல் அங்கேயே நின்றுவிட்டார். துப்பாக்கி கையில் இருக்கிறதென்று சுட்டுவிடவும் இல்லை. நிலைமையை அறிந்துகொண்டு பயன்படுத்தலாம் என்று சூழ்நிலையைக் கவனித்துக்கொண்டே இருந்தார். பயிற்சியாளரையும் காப்பாற்றினார். வீர தீர பராக்கிரமத்தில் எம்.ஜி.ஆரை ஒரு அர்ஜுனனாகவே மக்கள் நோக்கினர்.

குமரிக்கோட்டம் படத்தில் பெரும் பணக்காரரான ஜெயலலிதா தன் ஸ்கூட்டருக்கு குறுக்கே வந்து விழுந்த குழந்தையை திட்டுவதும் ரிக்ஷாக்காரர் அடிக்க போவதுமாக அடங்காப்பிடாரியாக வளர்ந்து இருப்பார். அவர் வீட்டில் ஒரு தோட்டக்காரனாக வேலைக்கு சேர்ந்து தெருவிளக்கில் படித்து முன்னேறி நல்லவனாக வரும் எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவின் பணத்திமிரை மெல்ல மெல்லக் குறைத்து பின்பு அவருடைய ஆணவத்தை அடங்க செய்து தன் தந்தை ஏற்கனவே பேசி வைத்திருந்தபடி அந்த பெண்ணை திருமணம் செய்து கொள்வார்.

தொழிலாளி படத்தில் முதலாளியின் மகளான கே.ஆர்.விஜயா எம்.ஜி.ஆர் தன்னை காதலிக்கவில்லை என்பதற்காகவும் தன்னை விட்டுவிட்டு ஒரு ஏழை டீச்சரை காதலித்தார் என்பதற்காக தங்கள் பஸ் கம்பெனியின் மேனேஜராக இருக்கும் அவரை வேலையை விட்டு நீக்கும்படி தன் தந்தையிடம் 'வத்தி' வைப்பார். இதனால் ஒரு உண்மையான ஊழியரை இழந்த அந்த பஸ் கம்பெனி சரியான நிர்வாகம் இல்லாததால் சம்பளம் கொடுக்க முடியாமல் கடன்பட்டு வீட்டை அடமானம் வைத்து கடைசியில் சத்திரத்தில் வந்து தங்கும் நிலை ஏற்படும்.

அந்த நிலையிலும் எம்.ஜி.ஆர் அந்த பெண் மேல் கோபப்படாமல் முதலாளியையும் அவர்களையும் காப்பாற்றி அவர்களைத் தங்களுடைய கூட்டுறவு பஸ் கம்பெனிக்கு மேனேஜராக வைத்து அந்தப் பெண்ணை ஒரு சகோதரி போல ஏற்றுக்கொண்டு அவர்களிடம் அன்பும் பாசமும் செலுத்துவார். அல்லி ராணி போல ஆடிய கே ஆர் விஜயா எம்.ஜி.ஆரின் உண்மையான பண்புகளை அறிந்து பின்பு அண்ணா என்று அழைப்பார்.

கர்ணன்

கிராமப்புறங்களில் கர்ண மகாராஜா என்று சொன்னாலே அந்த நபர் மிகப்பெரிய தர்மப்பிரபு என்று பொருளாகும். ''இருப்பதை கொடுப்பதில் தகப்பனின் பெயர் எடுப்பான்'' என்று எம்.ஜி.ஆரின் குழந்தையை பார்த்து தாய் பாடுவதாக அமைந்த பாடல் வரி, எம்.ஜி.ஆரை தர்மப் பிரபுவாக மக்கள் மனதில் நிலை நிறுத்தியது. எம்.ஜி.ஆர் தன்னிடம் வந்து கேட்டவர்களுக்கு மட்டுமல்ல கேட்காதவர்களுக்கும் உதவி செய்வதில் விருப்பமுடையவர். தேடிப்போய் உதவி செய்வார். மேலும் உதவி செய்யும் பொழுது கணக்கு பார்க்க மாட்டார். இவருக்கு இவ்வளவு போதும் அல்லது இந்த நிகழ்ச்சிக்கு இவ்வளவு தான் செலவாகும் என்று கணக்குப் பார்த்து அவர் எப்போதும் உதவி செய்வது கிடையாது. தெரிந்தவருக்கு செய்வது தர்மம்; தெரியாதவருக்கு செய்வது தானம் என்பர். அவர் தானதர்மம் இரண்டிலும் தாராளமானவர்.

ஒரு முறை கிருஷ்ணரிடம் கர்ணன் மட்டும் என்ன பெரிய தர்மவான் மக்கள் அனைவரும் கர்ணனை பாராட்டுகிறார்கள். உலகத்தில் எல்லோரும் தான் தங்களால் இயன்ற அளவுக்கு தர்மம் செய்கிறார்கள். என்று கேட்டபோது கிருஷ்ணர் கர்ணனையும் அர்ஜுனனையும் அழைத்துக் கொண்டு போய் இரண்டு மலைகளை காட்டி இன்று மாலைக்குள் இந்த இரண்டு மலைகளையும் நீங்கள்

தர்மம் செய்து விடுங்கள் என்றார். உடனே அர்ஜுனன் ஒரு ஆளை வரச் செய்து அந்த மலையை கொஞ்சம் கொஞ்சமாக வெட்டி மக்களை வரிசையில் நிறுத்தி வைத்து தர்மம் கொடுத்துக்கொண்டிருந்தான்.

கர்ணன் மலையை பார்த்தான். அங்கிருந்த ஒரு வேதியரை பார்த்து இந்த மலையை நீ எடுத்துக்கொள் என்று சொல்லிவிட்டு அரண்மனைக்கு திரும்பி விட்டான். மாலைப்பொழுது வந்து பார்த்த கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனன் தான் கொடுத்த மலையில் பாதியை கூட இன்னும் தர்மம் செய்யாததைக் கண்டு ‘என்ன அர்ஜுனா’ என்று கேட்டார். அதற்கு அர்ஜுனன் ‘எவ்வளவு கொடுத்தும் இன்னும் தீரவில்லையே இன்னும் மலை இருக்கிறதே.’ எப்போது இதை கொடுத்து முடிப்பது’’ என்று கவலையோடு கேட்டான். ‘கர்ணன் கொடுத்து விட்டான்’’ என்றார். கிருஷ்ண பரமாத்மா. ‘’எப்படி இவ்வளவு பெரிய மலையை அவனால் வெட்டிக் கொடுக்க முடிந்தது’’ என்று

தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு

புரட்சி நடிகர் அளித்த 10800 உதவிநிதி!

பாதிக்கப்பட்டோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது

சென்னை, மே. 1—

சென்னை 89-வது வட்ட நாராயணசாமி நாய்க்கர் தோட்டத் தீவிபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ நூறு இன்று காலை வழங்கப்பட்டது. புரட்சி நடிகர் எம், ஜி. ஆர். சார்பாக மேயர் மைனர் மோசஸ் அவர்கள் இத்தொகையைப் பிரித்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இராம. அரங்கண்ணல், வட்ட மாநகராட்சி உறுப்பினரும் முன்னாள் மத்தியக்குழுத் தலைவருமான டி.கே கபாலி ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.



முதலில் இத்தீவிபத்தை ஒட்டி ரூ 9500தான் எம். ஜி. ஆர், நிதி தந்திருந்தார். ஆனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 108 என்றறிந்ததும், உதவித் தொகையை ரூ 10,800 ஆக உயர்த்தினார். அதன்படி இன்று குடும்பத்துக்கு ரூ 100 வீதம்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

கேட்டான் அர்ஜுனன்.'அவன் ஏன் வெட்டி கொடுக்கப் போகிறான். அவன் அப்படியே அள்ளிக் கொடுத்து விட்டான்' என்றார் கி(ருஷ்ணன். கிள்ளி கொடுப்பவர்கள் தான் மக்கள் அள்ளி கொடுப்பவர் தான் வள்ளல் அவர எம்.ஜி.ஆர். இதுதான் எம்.ஜி.ஆருக்கும் கர்ணனுக்கும் உள்ள ஒரு பொதுத்தன்மை.

எம்.ஜி.ஆர் (முதலமைச்சராக இ(ருந்தபோது ஒ(ரு(முறை சேலம் அ(ருகே உள்ள ஒ(ரு கிராமத்தைச் சேர்ந்த 30, 40 பேர் அறுவடைக்காக சென்னைக்(கு பக்கத்திலுள்ள ஒ(ரு நிலத்துக்(கு அழைக்கப்பட்டி(ருந்தனர். அங்(கு அறுவடை (முடிந்ததும் அவ(ருக்(கு கூலியாகக் கிடைத்த சில நெல் ௴ட்டைகளை லாரியில் ஏற்றிகொண்(டு தங்கள் சொந்த ஊ(ருக்(கு புறப்பட்(டு போய்க்கொண்டி(ருந்தனர். அப்போது செக்போஸ்டில் அரிசி ௴ட்டை ஏற்றிய லாரியை அனுப்ப அதிகாரிகள் மறுத்து விட்டனர். இந்த கிராமத்து மக்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அதிகாரிகள் அதை நம்பவில்லை. உடனே அவர்கள் அனைவ(ரும் லாரியை விட்(டு இறங்கியவர்கள் இறங்கி சென்னைக்(கு போய் ராமாவரம் தோட்டத்தில் எம்.ஜி.ஆரை பார்ப்பதற்காக நின்றுவிட்டனர். எம்.ஜி.ஆர் போ(கும்போது இவர்களை பார்த்து கையசைத்து வணங்கி விடைபெற்றுச் சென்றுவிட்டார். மறுநாள் அலுவலகத்திற்(கு போ(கும் போது இந்த கூட்டம் அங்கேயே நின்று கொண்டி(ருக்கிறது. பொதுவாக அவ(ருடைய வீட்(டு வாசலில் நிறைய மக்கள் வந்து நின்று எம்.ஜி.ஆரை பார்ப்பதும் கையசைப்பதும் வழக்கம்தான் என்றாலும் அவர் மறுநாளும் காலையில் அலுவலகத்திற்(கு போனவர் மதியம் சாப்பிட வ(ரும் பொ(ழுது பார்க்கிறார். அதே ஜனத்திரள் நின்று கொண்டி(ருக்கின்றது. பார்த்ததும் அவ(ருக்(கு இவர்கள் நம்மிடம் ஏதோ உதவியை எதிர்பார்த்து நிற்கிறார்கள் என்பது தெரிந்துவிட்டது. உடனே தன் உதவியாளர்களைக் கேட்கிறார் . 'அவர்கள் ஏன் இரண்டு நாட்களாக

நிற்கிறார்கள்' என்று கேட்கும்போது 'உங்களை பார்க்க வேண்டும் என்று நிற்கிறார்கள்' என்றனர். 'அப்படியா, அவர்கள் அனைவரையும் உள்ளே வரச்சொல்' என்றார். அவர்களிடம் 'நீங்கள் சாப்பிட்டீர்களா' என்று கேட்கிறார் அதற்கு அவர்கள் "இல்லையா இரண்டு நாட்களாக நாங்கள் குழாய் தண்ணீரை குடித்து கொண்டு தான் இருக்கிறோம். நாங்கள் அறுவடைக்காக இங்கு வந்தோம். எங்கள் சொந்த ஊர் சேலம் பக்கத்தில் ஒரு கிராமம். இங்கு எங்களுக்கு அறுவடைக் கூலி நெல்மூட்டையை கொண்டு போக அனுமதி இல்லை" என்றனர் 'செக்போஸ்டில் எங்கள் லாரியையும் நெல் மூட்டைகளையும் நிறுத்தி வைத்து விட்டார்கள்' என்று சொல்லவும் 'சரி அது என்னவென்று நான் பார்க்கிறேன்; நீங்கள் எல்லோரும் மோர் சாப்பிடுங்கள்' என்றார். உடனே அனைவருக்கும் பெரிய டம்ளரில் இஞ்சி கொத்தமல்லி போட்டு மோர் முதலில் வழங்கப்படுகிறது. அனைவரும் தாகம் தீர மோரைப் பருகுகின்றனர். பிறகு 'கை,கால், முகம் கழுவி விட்டு சாப்பிட வாருங்கள்' என்றார் எம்.ஜி.ஆர். அவர்கள் அங்கிருந்த குழாயில் உடம்பை கழுவி கொண்டு கைகளை கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தார்கள். பந்தியில் மிக சுவையான பல வகையான உணவுகள் பரிமாறப்படுகின்றன. அந்த சாப்பாட்டை சாப்பிட்ட அவர்கள் எம்.ஜி.ஆர் சாப்பிடும் அதே சாப்பாடு நமக்கும் பரிமாறப்பட்டது என்பதை அறிந்ததும் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். இந்த சம்பவத்தை சொன்ன மருதமுத்து என்ற பெரியவர் அந்த கிராமத்தைச் சேர்ந்தவர். அந்த மக்களோடு ஒருவராக இருந்தவர். இவர் அண்மையில் காலமானார். அந்த கிராம மக்கள் எம்.ஜி.ஆரின் தர்மத்துக்கு நற்சான்றாக விளங்குகின்றனர். அவர்களின் வார்த்தைகளே அவர்களின் புகழுரையே அவருக்கு வாய்மொழி விளம்பரமாக இருந்துகொண்டிருக்கிறது.

இன்றைக்கும் அந்த ஊரைச் சேர்ந்தவர்களும் அவர்கள் சொல்லி இந்த சம்பவத்தை கேட்டவர்களும் எல்லோரிடமும் இச்சம்பவத்தை விளக்கி புகழ்ந்து சொல்லிக் கொண்டுதான் இருக்கின்றனர். பின்பு எம்.ஜி.ஆர் அந்த செக்போஸ்ட்டுக்கு உத்தரவு பிறப்பிக்கிறார். கூலி நெல்லை நிறுத்தி வைக்க வேண்டாம். கூலி நெல் கொண்டு வரும் மக்களுக்கும் கடத்தல் செய்பவருக்கும் உங்களுக்கு வித்தியாசம் தெரிய வேண்டாமா என்று அந்த அதிகாரிகளை கண்டிக்கின்றார்.

கிராமத்தினர் சாப்பிட்டு விட்டு வந்ததும் அவரிடம் உங்களுக்கு ஆதரவாக சார்பாக உத்தரவு பிறப்பித்து விட்டேன். இனி எங்கேயும் கூலிக்காரர்கள் நெல் மூட்டைகளை நிறுத்தி வைக்க மாட்டார்கள் என்று சொல்லிவிட்டு உங்களுக்கு ஊருக்கு போக பஸ் காசு இருக்கின்றதா என்று கேட்டுவிட்டு அனைவருக்கும் 500, 1000 என்று பணத்தை கொடுத்து அவர்களிடம் நீங்கள் ‘லாரியில் போக வேண்டாம்; லாரி பத்திரமாக உங்கள் ஊர் வந்து சேரும். நீங்கள் பஸ்ஸில் ஏறி போங்கள்’ என்று சொல்லி அவர்கள் அனைவரையும் பஸ்ஸ்டாண்டுக்கு அழைத்துக்கொண்டு போய் பஸ்ஸில் ஏற்றி விடும்படி தன ஆட்களிடம் சொல்கிறார். எம்.ஜி.ஆருடைய உதவியாளர்கள் பஸ்ஸ்டாண்டில் அவர்களை பஸ் ஏற்றி விட்டு வருகிறார்கள். இந்த சம்பவம் எம்.ஜி.ஆர் உடைய விருந்தோம்பலுக்கும் தர்ம சிந்தைக்கும் எடுத்துக்காட்டாக இன்றைக்கும் இப்பகுதியில் வாய்மொழி கதையாக விளங்குகிறது. இச்சம்பவத்தை நான் என் நூலில் எழுத வேண்டுமென்று இந்த கிராமத்து மக்களில் ஒருவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். இச்சம்பவம் இதுவரை எந்த நூலிலும் வெளிவரவில்லை.. இதுபோல் ஏராளமான சம்பவங்கள் அவருடைய கர்ண குணத்தை எடுத்துக்காட்டும் வகையில் உள்ளன.

எம்.ஜி.ஆர் வீட்டுக்கு பின்புறம் காய்கறி தோட்டம் கீரைப்பாத்தி ஆடு மாடுகளுக்கான மேய்ச்சல் நிலம் ஆகியவை உண்டு. அவருடைய வீடு 6 ஏக்கர் நிலத்தில் அமைந்திருந்தது. அப்போது கீரை பாத்திக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருந்த ஒரு இளைஞனின் கால் சட்டை கிழிந்து இருந்ததை எம்.ஜி.ஆர் பார்த்துவிட்டார். தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்த அவர் உடனே தன் வளர்ப்பு மகன் அப்புவை அழைத்து அவர் காதில் ஏதோ சொன்னார் அப்பு காரை எடுத்துக்கொண்டு கடைக்குப் போய் அந்த இளைஞர் அளவு சரியாக இருக்கும் வகையில் ஆறு செட் உடைகள் வாங்கிக் கொண்டு வந்தார் எம்.ஜி.ஆர் அந்த கீரைப்பாத்தி தண்ணீர் விட்டுக் கொண்டிருந்த தோட்டக்கார இளைஞரை அழைத்து 'இனி நீ கிழிந்த உடை போட வேண்டாம்; இந்த நல்ல உடைகளை உடுத்திக் கொள்; வயிற்றுப்பாட்டுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் தங்க இடமும் தானே மக்களுக்கு அடிப்படை தேவை . இதற்கு தானே நாம் இரவு பகலாக பாடுபடுகிறோம்' என்று சொல்லி அவர் கையில் ஆறு சட்டைகளையும் ஆறு பேண்ட்டுகளையும் வழங்கினார்.



எம்.ஜி.ஆரின் இந்த செயல் கிட்டத்தட்ட சிலிர்த்துக் கொண்டிருந்த மயிலுக்கு கடையேழு வள்ளல்களில் ஒருவனான பேகன் தன் வண்ணப் பட்டாடை போர்த்தி விட சம்பவத்தை நினைவு படுத்துகின்றது. மழைக்காலத்தில் மயில் தன் தோகையை விரித்து சிலிர்ப்பது இயற்கைதான். ஆனால் அதனுடைய சிலிர்ப்பை அதே மண்ணில் பிறந்து வளர்ந்த அந்த மண்ணின் மணத்தையும் அங்கு வாழும் விலங்குகள் பறவைகளின் இயல்பையும் நன்கு அறிந்து அறிந்திருந்த பேகன் அது குளிரால் நடுங்குகிறது என்று கொடைமடம் கொண்டு தன் வண்ண சால்வையை அதன் மீது போர்த்திவிட்டான். அது அந்த சாலவையோடு ஓடிவிட்டது. 'கொடைமடம் படுதல் அல்லது படைமடம் படான்' என்ற புறநானூற்று வரிகளுக்கு இசைய, சங்ககால வள்ளல்கள் மானோ, மயிலோ, மனிதரோ துன்பப்படுபவர் எவராக இருந்தாலும் உடனே தன் வள்ளல் குணத்தால் உதவிக்கரம் நீட்டினார். அதுபோலத்தான் எம்.ஜி.ஆரும் ஒரு தோட்டக்கார இளைஞனின் சட்டை கிழிந்து இருந்தது என்று அவருக்கு ஆறு நாளுக்கும் மாற்றி மாற்றி அணிவதற்கு ஆறு செட் உடைகளை வாங்கி கொடுத்தார். இத்தகைய சம்பவங்கள் நிகழ்ச்சிகள் எம்.ஜி.ஆர் தானதர்மம் செய்வதில் கர்ணனையும் விஞ்சியவர் என்பதை ஆணித்தரமாக விளக்குகின்றன.

மாயக்கண்ணன் எம்.ஜி.ஆர்

படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் கண்ணன் என்றாலே ஒரு மயக்கம் ஒரு சிலிர்ப்பு தோன்றுவது இயற்கை. ஏனென்றால் பல நேரங்களில் இந்த மாயக் கண்ணன் சில மாயாஜாலங்களை செய்து எதற்காக இதைச் செய்கிறான் என்று புரிந்து கொள்ள முடியாத வகையில் ஒரு காரியத்தைச் செய்து பின் சுப விளைவுகளை உண்டாக்குவான். அதுபோல சில வேளைகளில் வேகமாக

நடந்து கொண்டு பெரிய பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து வைத்திருக்கிறார் காவிரியின் கடைமடை பகுதிக்கு தண்ணீர் வராத காரணத்தால் அங்கு பயிர்கள் கருகி கொண்டிருந்தன இதை தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் எம்.ஜி.ஆரிடம் சொல்லவும் எம்.ஜி.ஆர் அதிகாரிகளைக் கூப்பிட்டு ஆலோசித்ததில் அவர்கள் நமக்குத் தர வேண்டிய தண்ணீரை கொடுத்து விட்டனர். இனி அவர்களிடமும் கொடுப்பதற்கு தண்ணீர் இல்லை என்று சொல்லிவிட்டார். எப்போதுமே அதிகாரிகள் ஒரு உருப்படியான தீர்வு சொன்னதே கிடையாது. இது முடியாது அது நடக்காது என்று தான் அவர்கள் வேகமாக சொல்வார்கள். அதை எப்படி முடிப்பது, எப்படி நடத்துவது என்பது ஒரு சில அதிகாரிகள் மட்டுமே சொல்லக்கூடிய ஆலோசனைகளாக இருக்கும். எம்.ஜி.ஆர் காலத்தில் அதிகாரிகள் பலர் இப்படித்தான் விட்டேற்றியாக நடந்துகொண்டனர். ஆனால் அதிகாரிகளின் சொல்லைக்கேட்டு எம்.ஜி.ஆர் தான் நினைத்த காரியங்களை செய்யாமல் நிறுத்தி விட்டது கிடையாது. நினைத்ததை நடத்தும் திறமை கொண்ட எம்.ஜி.ஆர் எப்படியும் கடைமடை பகுதிக்கு காவிரி தண்ணீரை கொண்டு செல்ல வேண்டும். அங்கு நெல் நல்லபடியாக வளர்ந்து விளைச்சல் பெருகி மக்களுக்கு அரிசி நிறைய கிடைக்கவேண்டும். உணவு பஞ்சம் வரக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார். மக்கள் அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்றால் தேவையான அரிசி கிடைக்க வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர் தன்னுடைய ஆட்சிக் காலம் முழுக்க மிக மிக கவனமாக இருந்தார். அரிசியின் விலை உயராமல் பார்த்துக் கொண்டார். இப்போது காவிரி தண்ணீர் வேண்டும் என்ன செய்வது என்று யோசித்தார். தன் மனைவி அதிகாரிகளை அழைத்துக்கொண்டு கர்நாடக முதலமைச்சரிடம் தான் மறுநாள் காலை அவரோடு காலை உணவு சாப்பிட வருவதாகத். தெரிவித்தார். கர்நாடக முதலமைச்சருக்கு ஒரே

இன்ப அதிர்ச்சி என்ன ஏது என்று தெரியாமல் திடீரென்று எம்.ஜி.ஆர் வருவதாக சொல்கிறார் என்பதை அறிந்து உடனே தடபுடலாக காலை உணவுக்கு ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார். முதலமைச்சரின் அம்மா எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகை. எனவே, முதலமைச்சரின் அம்மா கூட இருந்து அனைத்து ஏற்பாடுகளையும் கவனித்தார். காலையில் தன் படை பரிவாரங்களோடு போய் இறங்கினார். அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது காலை உணவு பரிமாறப்பட்டது; எம்.ஜி.ஆர் சாப்பிட்டுக் கொண்டே இருந்தார், கர்நாடக முதலமைச்சரின் தாயார் எம்.ஜி.ஆர் அருகில் வந்து நின்று கொண்டு கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள். தண்ணீர் குடித்து விட்டு சாப்பிடுங்கள் என்று சொன்னார். உடனே எம்.ஜி.ஆர். சிரித்தபடி கர்நாடக முதலமைச்சரை பார்த்து உங்கள் மகன் தான் தண்ணீர் தர மறுக்கின்றாரே என்று சொன்னார். கர்நாடக முதலமைச்சருக்கு ஒரே அதிர்ச்சி நாம் எப்போது தண்ணீர் தர மாட்டேன் என்று சொன்னோம். இங்குதான் நிறைய தண்ணீர் குவளைகள் இருக்கின்றனவே என்று நினைத்தவர் சட்டென்று அவருக்கு புத்தியில் உறைத்தது. ஓஹோ எம்.ஜி.ஆர் கர்நாடக காவிரி தண்ணீரை பற்றி பேசுகிறார். அதனால் தான் நம்மை பார்த்து சிரித்தபடி சொல்கிறார் என்று என்பதை புரிந்துகொண்டு 'அண்ணே உங்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேணாலும் தரேன்னே' என்று சொல்லிவிட்டார். எம்.ஜி.ஆர் சிரித்தபடி தன் முன்னால் இருந்த குவளையிலிருந்து தண்ணீரை குடித்து விட்டு அம்மாவை பார்த்து நன்றி அம்மா என்று சொல்லிவிட்டு உணவு சாப்பிடத் தொடங்கினார். அவர்கள் பேசிவிட்டு காரில் புறப்பட்டு சென்னை வந்துவிட்டார்கள். தண்ணீரும் திறக்கப்பட்டு காவிரி கடைமடை பகுதிக்கு வந்து விட்டது. அம்மா தண்ணீர் குடியுங்கள் என்று சொன்னதற்கு அவருக்கு நன்றியும் தண்ணீர் தர மாட்டேன் என்கிறார் உங்கள் மகன் என்று மகனைப் பார்த்து

சொன்னதற்கு அவர் தண்ணீரும் கொடுத்து விட்டார். அம்மாவின் மனமும் குளிர்ந்தது. எம்.ஜி.ஆருடைய வேண்டுகோளும் நிறைவேறியது. இவ்வாறாக மாயக்கண்ணனை போல சில மந்திர வேலைகளையும் செய்து முடிப்பவர் எம்.ஜி.ஆர். இவ்வாறு சில விஷயங்களை நான் விவேகமாக செய்து முடிக்காமல் வேகமாக நீதிமன்றத்திற்கு போய் வழக்குகளைப் போட்டு கடைசியில் கெஜட்டில் இடம் பெற்றாலும் கூட நிஜத்தில் தண்ணீர் கிடைப்பதில் மிகுந்த பிரச்சனைகளை உண்டாக்கியவர் ஜெயலலிதா என்பதையும் நாம் மறந்து விட முடியாது.

தெலுங்கு கங்கை திட்டம்

சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு கடுமையாக இருந்த காலத்தில் சென்னைக்கு குடிநீர் கொண்டு வர என்ன செய்வது என்று அதிகாரிகளோடு எம்.ஜி.ஆர் பேசினார் கலந்துரையாடினார். அப்போது சென்னைக்கு அருகில்



உள்ள கி(ருஷ்ணா நதியில் இ(ருந்து சென்னைக்(கு கால்வாய் மூலமாக தண்ணீர் கொண்(டு வரலாம் என்று ஒ(ரு திட்டம் (முன்மொழியப்பட்டது. அது செலவு (குறைந்த திட்டமாகவும் இ(ருந்தது. உடனே எம்.ஜி.ஆர் தன்னோ(டு இணைந்து நடித்து புகழ் பெற்று பின்பு அரசியலிலும் தன்னை போலவே தன்னுடைய வழியை பின்பற்றி (முதலமைச்சரான என்.டி. ராமராவ் நேரில் போய் சந்தித்தார். ஒ(ரு காலத்தில் இ(ருவ(ரும் திரையுலகில் நடித்துக் கொண்டி(ருந்தபோது ராமாராவை ஆந்திரப்பிரதேசத்தில் ஆந்திர எம்.ஜி.ஆர் என்று தெலுங்(கு எம்.ஜி.ஆர் என்று அழைப்பார்கள். அவ(ருடைய படங்கள் எல்லாம் தமிழில் மொழிமாற்றம் செய்யப்ப(டும் பொ(ழுது அந்தப் படங்களில் பெ(ரும்பாலும் எம்.ஜி.ஆர் தான் நடிப்பார். எம்.ஜி.ஆ(ரும் ராமாராவும் ஏறத்தாழ ஒரே பாணியிலான படங்களில் நடித்து வந்தனர்.



4

தெய்வாம்சம் உடையவர் எம்.ஜி.ஆர்

சீத்தலை சாத்தனார் என்னும் புலவர் மணிமேகலை என்னும் காப்பியத்தில் பசிக்கு உணவு கொடுத்தவரை பற்றி பாராட்டி சில அடிகளை எழுதியுள்ளார்

ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்

தேற்றா உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை

மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

உயிர்க்கொடை அருளிய உரவோய்

என்றார். பசியால் செத்துப் போகும் முன்பாக அவருக்கு உயிரை தானமாக அளித்த வீரனே என்பது கடைசியடியின் விளக்கம். உணவு கொடுப்பவர் உயிரை கொடுக்கிறார் என்று அதற்கு முந்தைய அடியில் சாத்தனார் தெரிவிக்ககிறார்.

கர்ணன் அனைத்து தானமும் செய்தான் ஆனால் அன்னதானம் மட்டும் செய்யவில்லை அது அவன் வாழ்வில் அவன் செய்ததானத்தில் பெருங்குறையாகி விட்டது. ஆனால் எம்ஜி ஆர் உணவும் வழங்கினார். உணவையே பிரதானமாக வழங்கினார்.

தெய்வத்தின் தெய்வம்

எம்.ஜி.ஆருக்கு திடிரென உடல் நலக் குறைவு ஏற்பட்டு அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவருக்கு மூளையில் ரத்தம்

உறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு சிகிச்சை அளித்தவர் ஜப்பானை சேர்ந்த டாக்டர் காணு ஆவார். இவர் பெயரால் சென்னையில் ஒரு பகுதி வழங்கப்படுகிறது. அங்கு போய் ஏன் இந்த பெயர் வைத்திருக்கிறீர்கள் என்று கெட்ட பொது. டாக்டர் காணு எங்கள் வாத்தியாரை காப்பாற்றியவர் அவர் தெய்வத்தின் தெய்வம் என்றனர். டாக்டர் காணு சென்னை வந்திருந்த போது அவரை சந்தித்து இதைச் சொன்னேன். அவர் நான் எம்.ஜி.ஆருக்கு அமெரிக்காவில் வைத்து சிகிச்சை அளித்த போதும் அவர் ஜப்பானில் என் வீட்டுக்கு வந்த போதும் அவருடைய சிறப்பான குணங்களை அறிந்துகொண்டேன். அவர் பெரியவர் [கிரேட்] என்பது தெரியும் ஆனால் இங்கு வந்து பார்க்கும் போது அவர் மிகப் பெரியவர் [வெரி கிரேட்] என்பதைப் புரிந்துகொண்டேன். என்றார்.

எம்.ஜி.ஆர் புருக்லின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவருக்காக பலர் இறைவனை வேண்டிக்கொண்டு பிரசாதம் அனுப்பினர். அந்த பிரசாதங்களை வைக்க இடமில்லாமல் ஒரு கட்டிடம்


Dr.C.Rajeswwari with Dr. Kaanu

கட்டினர். கேட்க வியப்பாக இருக்கலாம் .இப்போதும் இந்த கட்டிடம் உள்ளது.

அமெரிக்காவுக்கு சுற்றி பார்க்க போவோரை வேனில் அழைத்து செல்லும் வழிகாட்டி அந்தக் கட்டிடத்தைக் காட்டி இந்த தகவலை சொல்வதாக எம் ஆர் ராதாவின் மகன் ராதா ரவி தனது பேட்டியில் தெரிவித்தார். இவர் 'இந்தத் தகவல் உனக்கு எப்படி தெரியும்' என அந்த வழிகாட்டியிடம் கேட்டிருக்கிறார். அதற்கு பதிலளித்த வழிகாட்டி 'எங்களுக்கு அவ்வப்போது தகவல்களை அப்டேட் செய்து தருவார்கள். நாங்கள் அவற்றை சுற்றுலா பயணிகளுக்கு எடுத்து கூறுவோம்.' என்றார். அவர் இதற்காக தனி படிப்பும் படித்திருக்கிறார். அந்த கட்டிடத்தைக் காட்டி இப்போது இது வெளி நோயாளி பிரிவாக செயல்படுகிறது என்றாராம். எம்.ஜி.ஆர் மருத்துவமனையில் இருந்த பொது தனி தொலைபேசி லைன் கொடுத்து எம்.ஜி.ஆரின் உடல் நிலை பற்றி விவரம் கேட்பவர்களுக்கு பதில் சொல்ல ஒருவரை அங்கு


எம். ஜி. ஆர். திரும்பினர்

வரவேற்க 4 லட்சம் பேர் திரண்டனர்
நாளை ஆளுநரைச் சந்திக்கிறார்

சென்னை, பிப். 6— அமெரிக்காவில் உள்ள புரூக்லின் மருத்துவமனையில் மூன்று மாத காலம் தங்கி சிகிச்சை பெற்றுவந்த தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் திங்கட்கிழமை நாடு திரும்பினார். அவருக்கு ஆரவாரமான வரவேற்பு வழங்கப் பட்டது.

நியமித்திருந்தனர். வாஷிங்க்டன் போஸ்ட் தனியாக செய்தி வெளியிட்டுக்கொண்டே இருந்தது.

தெய்வத்தின் அருளால் பிழைத்த தெய்வமாக போற்றப்படும் எம்.ஜி.ஆரை அவரது ரசிகர்கள் தெய்வமாகக் கருதி சென்னை அருகே திரு நின்றவூரில் கோயில் கட்டி கும்பிட்டு வருகின்றனர். அவர் தெய்வாம்சம் பொருந்தியவர் என்பதை அழகில் மன்மதன் கோடையில் கர்ணன் என்று அவர் குணங்களுடன் சில தெய்வங்களை காட்டி சொல்லி மகிழ்கின்றனர். அந்த தெய்வங்களின் வரிசையை இனி காண்போம்.

கிருஷ்ணன்

நட்பு பாராட்டுவதிலும் நண்பர்களை வாழ வைப்பதிலும் எம்.ஜி.ஆரை நவீன கிருஷ்ணர் எனலாம். கிருஷ்ணர் பஞ்ச பாண்டவருக்கும் ஏழை குசேலனுக்கும் குறிப்பாக அர்ஜுனனுக்கும் சிறந்த நண்பராக இருந்தார். பஞ்ச பாண்டவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருந்தார். அதுபோல எம்.ஜி.ஆரும் ஏழைகளின் தோழனாக இருந்தார். தன்னுடைய நண்பர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். நம்பியவர்களுக்கு நல்ல நிலையை ஏற்படுத்தி கொடுத்தார். தமிழக மக்களுக்கு இளைஞர் சமுதாயத்திற்கு நல்ல வழிகாட்டியாக திகழ்ந்தார். எதிரியாக நினைப்பவர்கள் கூட அவரை நேரில் பார்க்கும் பொழுது அவருடைய அன்பையும் அரவணைப்பையும் பரிவையும் கண்டு மனம் மாறி நண்பர்களாகி விடுவர். அத்தகைய அன்புள்ளம் கொண்டவர் எம்.ஜி.ஆர்.

எதிர் அணியை சேர்ந்தவர்கள் ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டாலும் அல்லது ஒரு பணத்தேவை அவர்களுக்கு ஏற்பட்டாலும் நோய், பசி, வழக்கு, வீடு ஜப்தி போன்ற பிரச்சனைகளில் சிக்கி கொண்டிருந்தாலும் அவர் எதிரணியினர் என்று எண்ணி மகிழ்ச்சி அடையாமல்

**இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்**

என்ற வள்ளுவர் வாக்கின்படி அவர்களுக்கு உடனே உதவி செய்வார். நீண்ட கால திமுக பற்றாளர் ஒருவர் திருமணத்துக்கு உதவி கேட்டு கிடைக்காமல் மனம் வருந்திய போது அவரது மைத்துனர் வாங்க மாமா எம்.ஜி.ஆர் கிட்ட போய் கேட்போம் என்று அழைத்து கொண்டு வந்தார். எம்.ஜி.ஆர் உதவினார். எதிர்பார்த்ததை விட அதிகமாக கொடுத்தார். உடனே அவர் எம்.ஜி.ஆர் விசுவாசியாக அண்ணா திமுக அனுதாபியாக மாறிவிடவும் இல்லை. அரசியலில் முன்பு போல திமுகவுக்காக உழைக்காமல் வெறும் அனுதாபியாக இருந்துகொண்டார்.

அண்டை மாநில நட்பு

எம்.ஜி.ஆர் இருந்தவரை அண்டை மாநிலங்களோடு நல்ல நட்புறவு கொண்டிருந்தார். அதனால் நமக்கு காவிரியிலிருந்து தண்ணீர் கிடைப்பதில் எந்த பிரச்சனையும் இல்லை. தேவை ஏற்படும்போது கர்நாடகா முதல்வரை தனிப்பட்ட முறையில் சந்தித்து தன்னுடைய தண்ணீர் தேவையை விவசாய சூழ்நிலையை நாசுக்காக எடுத்துரைத்து தண்ணீர் பெற்று வருவார். தண்ணீர் எங்களுக்கு கொடுக்க வேண்டியது சட்டப்படி நீ செய்ய வேண்டியதை செய் என்று கேட்க மாட்டார். அது எங்கள் உரிமை என்று அண்டை மாநிலத்திற்கு போய் உரிமை குரல் எழுப்ப மாட்டார். பண்போடு கேட்டு அன்போடு வாங்கிவருவார்

ஆந்திராவிலிருந்து தெலுங்கு கங்கை திட்டத்தை தன்னுடைய நெருங்கிய நண்பராகவும் சொந்த சகோதரர் போலும் கருதி வந்த என்டிஆர் இடம் இருந்து பெற்றுக் கொண்டார். இதனால் சென்னை மாநகரின் தண்ணீர் பஞ்சம் தீர்ந்தது.

கர்நாடகாவில் தேவராஜ் அர்ஸ், எம்.ஜி.எம் குண்டுராவ் போன்றோர் முதலமைச்சர்களாக இருக்கும்பொழுது அவர்களிடம் அன்பாக பேசி நட்போடு பழகி காவிரி தண்ணீரை பெற்று வந்தார்

எம்.ஜி.ஆர். மத்திய அரசோடும் இணக்கமான உறவு வைத்திருந்தார். தமிழகம் அண்டை மாநிலங்களோடு மிகவும் நட்போடு இருந்தது. தமிழர்கள் கர்நாடகாவிலும் ஆந்திராவிலும் கேரளாவிலும் அமைதியாக நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். இப்போது கர்நாடகாவில் தமிழர்களுக்கு மிகுந்த எதிர்ப்பு இருக்கின்றது. ஆனால் எம்.ஜி.ஆர் காலத்தில் அவர் நீரும் நெருப்பும் படத்தில் நடித்துக்கொண்டிருந்தபோது அண்ணாவின் நினைவு நாள் வந்ததை அறிந்து அவர் அங்கேயே ஒரு நினைவுநாள் பொதுக்கூட்டத்தை நடத்த விரும்பி தன்னுடைய ரசிகர் மன்றங்களுக்கு சொல்லி ஏற்பாடு செய்தார் உடனடியாக எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றங்களை சேர்ந்த ரசிகர்களும் மற்ற தமிழர்களும் அண்ணா நினைவுநாள் கூட்டத்திற்கு கூடிவிட்டனர். இன்றைக்கு இதையெல்லாம் நினைத்துப் பார்க்கக் கூட இயலாது. எம்.ஜி.ஆர் இருந்தவரை கர்நாடகாவில்



கேரள முதல்வருடன் எம்.ஜி.ஆர்.

தமிழர்கள் கௌரவமாக நிம்மதியாக வாழ்ந்து வந்தனர்.

சிவாஜியும் கருணாநிதியும் எம்.ஜி.ஆருக்கு முறையே திரை உலகிலும் அரசியலிலும் போட்டியாக இருந்தாலும் அவர்கள் இரு துருவங்களாக செயல்பட்டாலும் தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு இடையே நல்ல நட்பு இருந்தது. அவரது குடும்பத்தார் அடுத்தவரை மிகுந்த மரியாதையோடு இன்றைக்கும் குறிப்பிட்டு பேசுகின்ற அளவுக்கு அவர்களிடையே அன்புணர்வு இருந்தன. சிவாஜியின் மகன் பிரபு பெரியப்பா என்றுதான் அன்றும் எம்.ஜி.ஆரை அழைத்தார். இன்றும் அழைக்கிறார். கருணாநிதியின் மகன்கள் முத்து, ஸ்டாலின். அழகிரி போன்றோர் எம்.ஜி.ஆரை என்றும் மிகுந்த மரியாதையோடு குறிப்பிட்டு பேசுவதைக் காணலாம்.

மு. க. முத்து கருணாநிதியின் முதல் மனைவியின் ஒரே மகன். எம்.ஜி.ஆரை அணுகி தன்னை திமுகவில் புறக்கணிப்பதால் தான் அண்ணா திமுகவில் சேரப் போவதாக தெரிவித்தார். ஆனால் எம்.ஜி.ஆர் மறுத்துவிட்டார் “உனக்கு வேறு என்ன உதவி வேண்டும் என்று கேள்; ஆனால் உன் அப்பா ஒரு கட்சி தலைவராக இருக்கும் போது இங்கு நீ வர கூடாது” என்று அறிவுரை கூறி அனுப்பி விட்டார்.

ஒருமுறை எம்.ஜி.ஆட்சியை எதிர்த்து பாதயாத்திரை சென்ற கருணாநிதிக்கு காலில் கொப்பளங்கள் தோன்றி விட்டன என்பதை கேள்வியுற்று உடனே அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு நான் மருத்துவரை அனுப்பி வைக்கட்டுமா, வேறு முறையில் உங்கள் போராட்டத்தை தொடரக்கூடாதா நடந்துதான் ஆக வேண்டுமா என்று அக்கறையோடு எம்.ஜி.ஆர் விசாரித்தார். கருணாநிதி தன்னோடு மருத்துவர் குழு வருவதாகவும் அவர்கள் மருந்து தந்திருப்பதாகவும் சொல்லி ஆறுதல் படுத்திய பிறகே எம்.ஜி.ஆர் மதிய உணவு உண்டார். அப்போது

மணி மூன்று, அவர் தன்னுடைய மதிய உணவை முடித்துவிட்டு கூட விசாரித்திருக்கலாம். ஆனால் நண்பருக்கு உடல்வலி என்றவுடன் தன்னுடைய கொள்கை வேறுபாடுகள் எல்லாம் மறந்து உடனடியாக அவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அப்போது அலைபேசியும் கிடையாது. அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. பல இடங்களுக்கு முயற்சி செய்து பின்னர் அவர் ஒரு விருந்தினர் விடுதிக்கு வந்த பிறகு அங்கிருந்த தொலைபேசியின் மூலம் எம்.ஜி.ஆர் தொடர்பு கொண்டு பேசினார். இதை வெளியே தெரிவிக்க வேண்டாம் என்று அவருடன் இருந்த பத்திரிகையாளர் சோலையிடம் தெரிவித்தார்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எம்.ஜி.ஆர் சிரமத்தில் துன்பப்பட்ட தன் நண்பர்களுக்கெல்லாம் உடனடியாக உதவி செய்து அவர்களை அந்த சிக்கலில் இருந்து மீட்டுக் கொண்டு வந்தார். இதற்கு ஆயிரம் ஆயிரம் உதாரணங்களை காட்டலாம்.

குரு என்ற தட்சணாமூர்த்தி

எம்.ஜி.ஆரை அவரது ரசிகர்கள் வாத்தியார் என்று செல்லமாக அழைப்பதுண்டு. அந்தக்காலத்தில் வாத்தியார் என்றால் குஸ்தி வாத்தியார் சிலம்ப வாத்தியார் விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவர்கள். அந்த விளையாட்டுகளை தங்களுக்கு சொல்லித்தரும் ஆசானை வாத்தியார் என்று சீடர்கள் அழைப்பார்கள். தேகப்பயிற்சி சாலைகள் ஒவ்வொரு ஊரிலும் இருக்கும். அங்கு இளைஞர்களுக்கு வீர விளையாட்டு பயிற்சி அளிப்பவர்கள் வாத்தியார் என்று அழைக்கப்படுவார்.

சண்டைக்காட்சிகளில் வீர விளையாட்டுகளை சிறப்பாக நடத்திக் காட்டிய காரணத்தால் அந்தப் பெயர்

மிகவும் பொருத்தமாக இருந்தது. அது மட்டும் அல்ல அவர் தன்னுடைய படங்களில் உண்மை உழைப்பு உயர்வு பெரியோரை மதித்தல் பெண்களை மதித்தல் போன்ற நல்ல பழக்கவழக்கங்களையும் வாழ்க்கை வழிமுறைகளையும் நடித்து காட்டியதால் அவர் தன் படம் பார்த்த ரசிகர்களுக்கு நல்ல குருவாக விளங்கினார்

களஆய்வின்போது ரசிகர்களிடையே பேட்டி எடுக்கும் வேளைகளில் பல ரசிகர்கள் பள்ளிக்கூடப் படிப்பை கூட முடித்து இருக்க மாட்டார்கள். நான் பள்ளிக்கூடத்துக்கு போனதில்லை எனக்கு நல்லது கெட்டது எல்லாம் சொல்லித் தந்தவர் எம்.ஜி.ஆர்தான். உண்மையிலேயே எனக்கு அவர்தான் வாத்தியார் என்று சொல்பவர்களைக் கேட்டிருக்கிறேன். இவர்கள் பொய் சொல்லாமல் திருடாமல் பிறரை ஏமாற்றாமல் தன் உழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்டு வாழும் ஏழைகளாகவும் இருப்பார்கள். ஆனால் அதற்காக அவர்கள் வருத்தப் பட்டது கிடையாது தான் நல்லவனாக வாழ்கின்றோம் என்ற பெருமிதத்துடன் அவர்கள் பதிலளிப்பார்கள்.

கல்வி தெய்வமான சரஸ்வதியாக எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர் சிறுவயதில் பள்ளிக் கல்வியை கூட முடிக்க முடியாமல் பாதியில் விட்டுவிட்டு வந்த டிராப் அவுட் ஆவார். அவர் ஒன்று இரண்டு மூன்று வகுப்புகள் தான் படித்தார். மூன்றாம் வகுப்பு கூட அவர் முழுமையாக முடிக்கவில்லை. ஏழு வயதில் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் நாடகக் கம்பெனியில் அவர் அன்னையர் சேர்த்துவிட்டார். அப்போது அவர் அண்ணனுக்கு 12 வயது; அவர் எட்டாம் வகுப்பு வரை படித்திருந்ததால் அவருக்கு ஆங்கிலமும் தமிழும் நன்றாக தெரியும். அன்றைய தேதியில் எம்.ஜி.ஆருக்கு தமிழ் ஓரளவுக்கு வாசிக்கத் தெரியும். அதற்கு மேல் அவருக்கு எந்த படிப்பும் கிடையாது.

நாடக கம்பெனியில் படித்தவர்களின் பேச்சை கேட்டு கேள்வி அறிவை வளர்த்து கொண்டார். பத்திரிகைகள் வாசித்து படிப்பறிவை வளர்த்து கொண்டார். பின்னர் புத்ததகங்கள் வாசித்து தமிழ் நாட்டின் வரலாறு கலை இலக்கியம் பண்பாடு போன்றவற்றில் தன அறிவைப் பெருக்கி கொண்டார். அவர் தனியாக ஒரு ஆசிரியரை கொண்டு ஆங்கிலம் பேசவும் ஓரளவுக்கு எழுதவும் படித்துக்கொண்டார். மற்றவர் ஆங்கிலம் பேசினால் புரிந்து கொள்ளவும் கற்றுக் கொண்டார். எம்.ஜி.ஆர் ஆங்கிலம் நன்றாகப் பேசுவார் என்று கமலஹாசன் ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது அவருக்கு தெரியும்; தான் தமிழில் சொல்வதை மொழிபெயர்ப்போர் ஆங்கிலத்தில் சரியாக சொல்கிறாரா என்பதையும் அவரால் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் சரியாகச் சொல்லவில்லை என்றால் அவரிடம் நான் அப்படி சொல்லவில்லை நான் சொன்னதை போல் சொல்லுங்கள் என்று திரும்பவும் எடுத்துரைத்தார்.

ஓரளவுக்கு மட்டுமே கல்வியறிவு பெற்ற எம்.ஜி.ஆருக்கு தான் அண்ணாவை போல நெடுஞ்செழியனை போல திமுக கட்சியில் இருந்த மற்ற பெரிய தலைவர்களைப் போல கல்லூரி படிப்பு பட்டப் படிப்பு முதுகலை படிப்பு படிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் இருந்தது. இதனால் படித்தவர்களிடம் பேசும் பொழுது **என்னால் உங்களைப்போல் வர இயலாது;** ஆனால் நீங்கள் என்னை போல் ஒரு நடிகராக முடியும். எனவே உங்களுடைய கல்வியை மதித்து நடக்க வேண்டும். உங்களுடைய படிப்புக்கு நீங்கள் மரியாதை கொடுக்கவேண்டும் என்று சொல்லுவார்.

கற்பகவிநாயகம் என்ற வக்கீல் சினிமாவில் நடிக்க வேண்டும் என்று வந்தபோது எம்.ஜி.ஆர் அவருக்கு அறிவுரை சொல்லி வக்கீல் ஆகவே இருக்கும்படி அவரை

திருப்பி அனுப்பிவிட்டார் பின்பு கற்பக விநாயகம் அவர்கள் நீதிபதியான போது ***“இன்றைக்கு நான் நீதிபதியாய் இருப்பது எம்.ஜி.ஆரால் தான்”*** *என்று நன்றி உணர்வோடு எடுத்துக் கூறினார். இல்லையென்றால் அவர் ஒரு நடிகராகி பின்னர் காணாமல் போயிருக்கலாம்.*

திரையுலகினர் சொற்ப வருமானத்தில் பிள்ளைகளை படிக்க வைக்க முடியாமல் அவதிப்பட்டனர். இவர்களும் தம் பெற்றோரை போல இத் தொழிலில் இறங்கிவிட கூடாது. இக்குழந்தைகளுக்கு பள்ளிப்படிப்பு கிடைக்காமல் போய் விடக்கூடாது என்பதற்காக அவர் கோடம்பாக்கத்தில் சொந்தமாக ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். இந்த பள்ளிக்கூடத்தை சினிமா நடிகர்கள் மற்றும் சினிமா தொழிலாளிகளின் பிள்ளைகளுக்காக ஆரம்பித்தார். தன்னைப்போல படிக்க வாய்ப்பில்லாமல் திரைப்பட துறையில் எலக்ட்ரீசியனாக அசிஸ்டன்ட் இயக்குனராக, தச்சுவேலை, பெயிண்டர் வேலை, உதவி கேமராமேன், தயாரிப்பு நிர்வாகி, துணை நடிகர் ஏஜென்ட், துணை நடிகர் மற்றும் நடிகைகள் வாய்ப்புக்காக காத்திருக்கும் கூட்டத்தில் வரும் நடிகர் நடிகைகள் ஆகியோரின் பிள்ளைகளின் எதிர்காலம் பயங்கரமாக அவருக்கு மனக்கண்ணில் தோன்றியதால், இந்த பிள்ளைகளும் நாளைக்கு இதுபோல் வாய்ப்புக்காக ஏங்கி நிற்கக்கூடாது. இவர்கள் நன்றாகப் படித்து நல்ல வேலை வாய்ப்புகளை பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அவர்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் தொடங்கினார்.

எம்.ஜி.ஆர் பள்ளிக்கூடத்தில் அவர் குழந்தைகளுக்கு ஒழுக்கமே பிரதானமாக கற்பிக்கப்பட்டது என்று தலைமை ஆசிரியர் பால்ராஜ் தெரிவித்தார். படிப்புக்கு இரண்டாம் இடம் தான் அளிக்கப்பட்டது. இருப்பினும் பலர் மாவட்ட முதலிடம், மாநில முதலிடம் பெற்றனர். அவர்களுக்கு

மதிய உணவு, சீருடை, புத்தகங்கள் ஆகிய அனைத்தையும் எம்.ஜி.ஆர் இலவசமாக வழங்கினார்,

கல்விக்கான தெய்வம் சரஸ்வதி கூட கல்வியை மட்டும்தான் வழங்கும்; ஆனால் எம்.ஜி.ஆர் கல்வியோடு சேர்த்து வயிற்றுக்கு உணவும் வழங்கினார். இதே முறையைத்தான் அவர் முதலமைச்சரான பிறகு தமிழ்நாடு முழுக்க பல திட்டங்களை உருவாக்கி விரிவுபடுத்தினார். சத்துணவு திட்டத்தை இலவச சீருடை மற்றும் இலவச காலணி போன்ற திட்டங்களை ஆட்சிக்கு வந்த பின்பு வாக்கு வங்கியை தக்க வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அறிவிக்கவில்லை. அவர் தன்னுடைய வாழ்க்கையில் பின்பற்றி வந்த ஒவ்வோரு நடைமுறையை ஆட்சியும் அதிகாரமும் கிடைத்ததும் விரிவுபடுத்தினார். இது வாக்குவங்கியை காப்பாற்றுவதற்காக அவர் சத்துணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார் என்ற எதிரணி தாக்குதலை உறுதியற்றதாக்கி விடுகிறது.

திரையுலகில், ஸ்டுடியோவில் வேலை பார்த்த ஊழியர்களின் குழந்தைகள் எம்.ஜி.ஆரின் இலவச பள்ளியில் படித்துவிட்டு பல துறைகளில் குறிப்பாக மருத்துவத் துறையில் ஸ்டான்லி மருத்துவ கல்லூரி மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜ் போன்ற மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்து படித்து முன்னேறி நல்ல நிலைமையில் இருக்கின்றனர். சிலர் அமெரிக்காவிலும் மற்றும் அப்போலோவிலும் மருத்துவராக இருக்கின்றனர். எம்.ஜி.ஆர் முதலில் ஆரம்பப்பள்ளி ஆரம்பித்தார். பிறகு நடுநிலைப் பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆக்கிவிட்டார். அவர் வளர்த்த பெண் குழந்தைகளும் பள்ளிக்கூடங்களை வைத்து நடத்தி வருகின்றனர். ஆக எம்.ஜி.ஆர் தமிழக குழந்தைகளுக்கு கல்வியையும் அதன் நல்ல பலன்களையும் வழங்கும் ஒரு சரஸ்வதியாக விளங்கினார் என்றால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய கூற்றாகும்.

செல்வம் தரும் லட்சுமி எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர் உழைத்து சம்பாதித்ததைப்போலவே மற்றவர்களுக்கும் நல்ல சம்பாத்தியம் கிடைக்க உதவினார். அவருடைய படத்தில் நடிப்பவர்களது சம்பளத்தை உடனே எம்.ஜி.ஆர் பெற்று தந்துவிடுவார். அனைவருக்கும் சம்பள பாக்கி இல்லாமல் சம்பளம் கொடுக்கப்பட்டது என்று தெரிந்தால் மட்டுமே தன்னுடைய படத்தை வெளியிட அவர் அனுமதி வழங்குவார். இது தேவையில்லாத வேலை என்று எம் ஆர் ராதா போன்றவர்கள் சுட்டிக்காட்டிய பிறகும் கூட எம்.ஜி.ஆர் இதில் மிகவும் உறுதியாக இருந்தார். **"உன்னுடைய வேலை நடிப்பது மட்டும்தான் ராமச்சந்திரா நீ மற்ற விசயங்களில் தலையிடாதே"** என்று ஒருமுறை எம் ஆர் ராதா எம்.ஜி.ஆரை எச்சரித்தார். ஆனால் எம்.ஜி.ஆர் சிரித்துக்கொண்டே அமைதியாக இருந்துவிட்டார். காரணம் எம் ஆர் ராதா மீது அவருக்கு மிகுந்த மரியாதை உண்டு. அதனால் அவரை எதிர்த்துப் பேச வில்லையே தவிர அவருடைய கொள்கையில் உறுதியாக இருந்தார். எந்த திரையரங்கில் படம் வெளியிடுவது எந்த தேதியில் வெளியிடுவது என்பது வரை எல்லாமே அவரே தீர்மானித்தார்.

எம்.ஜி.ஆருடைய படம் வெளியிடுவதற்கு முன்பு படத்தில் நடித்த அனைவருக்கும் சம்பளம் கொடுக்க வேண்டும். ஒரு முறை டான்ஸ் மாஸ்டர் சுந்தரம் முகம் வாடி இருப்பதை பார்த்து அவரை அழைத்து 'உனக்கு என்ன பிரச்சனை' என்று கேட்டார். "இன்னும் காசு தரலண்ணே அது தான் கஷ்டமா இருக்கு" என்று சொன்னார். உடனே அந்த தயாரிப்பாளரை அழைத்து மைசூரில் சுந்தரம் ஐந்து நாட்கள் டான்ஸ் மாஸ்டர் வேலை பார்த்ததற்கான சம்பளத்தை அவர் கையில் கொடுத்து அனுப்பும்படி கேட்டுக்கொண்டார்.

‘நேற்று இன்று நாளை’ படத்தில் நடித்தபோது அசோகன் நிறைய கடன் வாங்கி குடித்து செலவழித்து விட்டு கடைசியில் தன்னிடம் கேட்கிறவர்களிடம் **‘எம்.ஜி.ஆர் படம் நடித்து தராமல் இழுத்தடிக்கிறார்’** என்று எம்.ஜி.ஆர் மீது பழி சுமத்தி வந்தார். ஆனால் எம்.ஜி.ஆர் படத்தை நடித்து முடித்ததும் எல்லோருக்கும் சம்பள பாக்கி கொடுத்துவிட்டு வா என்று சொல்லிவிட்டார். அசோகனிடம் பணம் இல்லை; சம்பள பாக்கி கொடுக்காவிட்டால் எம்.ஜி.ஆர் படத்தை ரிலீஸ் பண்ண விட மாட்டார். எம்.ஜி.ஆர் கால் ஷீட் தராமல் இழுத்தடித்ததால் கடன் அதிகமாகி விட்டதாக எல்லோரிடமும் சொல்லிக் கொண்டே வந்தார். எம்.ஜி.ஆர் விடவில்லை தன்னுடைய சொந்தப் பணத்தை அசோகனுக்கு கொடுத்தனுப்பி எல்லோருக்கும் வீடு வீடாகப் போய் ராத்திரி தட்டி எழுப்பி அவர்களுக்கு சம்பள பாக்கியை கொடுத்து விட்டு வரும்படி கூறினார். அசோகனையும் அழைத்துக் கொண்டு அவருடைய உதவியாளர்கள் போய் அனைவருக்கும் அசோகன் சார்பில் சம்பள பாக்கியை கொடுத்து முடித்தார்கள்.

அசோகன் பேசியது தனக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்தினாலும் கூட தன்னுடைய கோபத்தை அசோகனிடம் தான் காட்ட வேண்டுமே தவிர தொழிலாளர்களிடம் காட்டக் கூடாது என்பதனால் அசோகன் தவறாக பேசினாலும் அவர் மற்றவர்களுக்குத் தர வேண்டிய சம்பள பாக்கியை எம்.ஜி.ஆர் கொடுத்து முடித்தார். இதனால்தான் அவருடைய மகன் வின்சென்ட் எம்.ஜி.ஆரை பற்றி மிகவும் உயர்வாகப் எம்.ஜி.ஆர் விழாக்களில் பேசி வருகின்றனர்.

எம்.ஜி.ஆரின் திரைப்படத் துறையில் மட்டுமல்ல அரசியலிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். அவர் முதலமைச்சரானதும் கல்வித்துறையில் சுகாதாரத்துறையில்

தமிழகத்திலேயே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதற்கு காரணம் அவருக்கு இருந்த பரிபூரணமான இறையருள் என்றே சொல்லலாம். முதலமைச்சரான போது உலகில் பொருளாதாரக் கொள்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. எல்பிஜி என்று சொல்லப்படும் *liberalization privatisation globalization* என்ற பொருளாதார கொள்கை மாற்றம் ஏற்பட்டது. தனிநபர்கள் ஊடுருவல் அல்லது தனி நபர் ஆதிக்கம் பள்ளி கல்லூரி தொழில்துறைகளில் விரைவாக ஏற்பட்டது. இதனால் பல தொழில் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. தொழில் பயிற்சி நிறுவனங்கள் தனிநபர்கள் தொடங்கினர். இவர்களுக்கு எம்.ஜி.ஆர் பரிபூரண ஒத்துழைப்பு கொடுத்து அரசு சார்பில் நிலங்களை இலவசமாக வழங்கினார். அதிமுகவினரை அழைத்து தன் கட்சி எம்எல்ஏ, எம்பி களிடம் உடனே பள்ளி கல்லூரி தொழிற்சாலை தொடங்குங்கள் என்று அவர்களை ஊக்குவித்தார்.

எம்.ஜி.ஆரின் சொல் கேட்டு பணக்காரர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் தொழிற்பயிற்சி கூடங்களையும் தொழிற்சாலைகளையும் தொடங்கினர். இதனால் எம்.ஜி.ஆர் காலத்தில் தனிநபர் ஆதிக்கம் தொடங்கி பள்ளி கல்லூரிகள் பல தொடங்கியதால் அதிகமானோர் தொழிற்பயிற்சி பெற்று தொழில் கல்வி பெற்று ஒரே வீட்டில் இரண்டு மூன்று பேர் சம்பாதிக்க தொடங்கினர். ஒரு வீட்டிற்கு இரண்டு மூன்று இருசக்கர வாகனங்கள் வரத்தொடங்கின. தனியார் நிறுவனத்தில் வேலை பார்ப்போருக்கு வீட்டு கடன் வசதி கிடைத்து. அதனால் அதிகமானோர் தனி வீடுகள் கட்டி தனி வாகனங்கள் வாங்கி வசதியாக வாழ்ந்து வருகின்றனர்.

வீடு வாகன வசதிகளை தொடர்ந்து மின்சார மின்னணு சாதனங்கள் விற்பனையும் அதிகரித்தன. திரையரங்குகளை விலை கொடுத்து வாங்கிய தனது

கட்சிக்காரர்களைத் தடுத்து திரைப்படங்களுக்கான வாய்ப்புகள் குறையும். தொலைக்காட்சியின் ஆதிக்கம் அதிகமாகும் என்று அறிவுரை கூறி உங்களுடைய சொத்துக்களை சம்பாத்தியத்தை கல்வித் துறையில் முதலீடு செய்யுங்கள் என்று அறிவுறுத்தினார். இவ்வாறு தனது தமிழகத்து பிள்ளைகளுக்கு தொழிற்கல்வி பெறும் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்து அவர்கள் பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் எம்.ஜி.ஆர். மக்களின் வாழ்க்கை தரம் எம்.ஜி.ஆர் காலத்திலேயே உயர்ந்துவிட்டது. மக்களுக்கு தன ஆட்சிக்காலத்திலேயே சுபிட்சமான வாழக்கையை எம்.ஜி.ஆர் கொடுத்தார்.

உலகின் சர்வதேச புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றான விஐடி வேந்தர் விஸ்வநாதன் இந்த பல்கலைக்கழகம் எம்.ஜி.ஆர் எனக்கு போட்ட பிச்சை என்று பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். **‘எங்கள் பகுதியில் ஒரு அரசு கல்லூரி வேண்டும்**’ என்று கேட்டேன். அரசிடம் இப்போது கல்லூரி தொடங்க பணம் இல்லை. வேண்டுமானால் நீ தொடங்கு. நான் அரசு நிலம் தருகிறேன் என்று எம்.ஜி.ஆர் என்னை கல்லூரி தொடங்கும்படி ஊக்கமளித்தார். நான் கல்லூரியை தொடங்கினேன். இப்பொழுது பல்கலைக்கழகமாக வளர்ந்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற இருக்கின்றது. இது எம்.ஜி.ஆர் போட்ட பிச்சை என்று குறிப்பிட்டார். அந்த பல்கலைக்கழகத்தின் வாசலில் எம்.ஜி.ஆர் சிலையும் எழுப்பியுள்ளார்

இன்றைக்கு தனியார் கல்லூரிகளும் பள்ளிகளும் மக்களிடம் அதிக கட்டணம் வசூலித்து பெருமுதலாளிகள் ஆகிவிட்டன. அதற்குக் காரணம் எம்.ஜி.ஆருக்குப் பின் வந்த அரசுகள் அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் இஷ்டம் போல் பணம் சம்பாதிக்கவும் கட்டணம் விதிக்கவும் விட்டுவிட்டனர். எம்.ஜி.ஆர் காலத்தில்

இலவசமாக 25% மாணவர்களுக்குத் தனியார் கல்வி நிறுவனங்களில் இடமளிக்க உத்தரவு பிறப்பித்திருந்தார். ஒரு தனியார் கல்லூரியில் ஒரு வகுப்பில் 100 மாணவர்கள் சேர்கிறார் என்றால் 75 பேருக்கு மட்டும்தான் அந்த கல்லூரி கட்டணம் வசூலிக்கவேண்டும். மீதி 25 பேருக்கு இலவசக் கல்வி கொடுக்க வேண்டும். இந்த திட்டம் மிக அருமையான திட்டம். எம்.ஜி.ஆர் கல்லூரிக்கு எந்தச் செலவும் செலவழிக்காமல் ஏழைப் பிள்ளைகள் படிக்க உதவியாக இருந்தார். ஒவ்வொரு கல்லூரியிலும் 25% ஒவ்வொரு பள்ளியிலும் 25% என ஏழை மாணவர்கள் இலவச கல்வி பெற்றனர். இந்த திட்டங்களை அவருக்குப் பின் வந்த அரசுகள் சிறப்பாக செயல்பட விடாமல் செய்து விட்டன.

தமிழர்களின் இன்றைய செல்வ நிலைக்கு எம்.ஜி.ஆர் காலத்தில் அறிமுகமான பொருளாதாரக் கொள்கையும் அதனை முறையாக நல்ல வழியில் பயன்படுத்திக்கொண்டு கல்லூரிகள் தொழிற்பயிற்சிகளை ஆரம்பிக்க செய்த எம்.ஜி.ஆரின் அறிவுரையும் முக்கிய காரணங்களும் ஆகும். நல்லவர் கையில் ஒரு கருவி கிடைக்கும் பொழுது அது நல்ல பலன்களைத் தரும். எம்.ஜி.ஆர் உள்ளூர் மரம் பழுத்தது போன்று பலன்களை அளித்தார். தன் செலவில் பள்ளிக்கூடம் கட்டி தன் சினிமா துறையினரின் குழந்தைகளுக்கு இலவச உடை புத்தகம் சீருடை கொடுத்து படிக்க வைத்தார். **அவர்களில் பலர் படித்து உயர்ந்து இன்றைக்கு பல உயர்ந்த பதவிகளில் இருக்கின்றனர்.** அதனை தொடர்ந்து முதலமைச்சரானதும் தமிழ்நாட்டுக்கே பல நல்ல திட்டங்களை தீட்டி நடைமுறை படுத்தினார். இன்றைக்கு தமிழர்கள் வாழ்வில் செல்வம் கொழிக்க முக்கிய காரணமாக இருந்த எம்.ஜி.ஆர் என்பதில் ஐயமில்லை எனவே அவர் செல்வத்தை வழங்குவதில் மகாலட்சுமியாக திகழ்கிறார்

வீரத்தை அருளும் பார்வதியும் அவரே

எம்.ஜி.ஆர் ஆரம்ப நாட்களில் இருந்தே வீரதீர சாகசச் செயல்களில் ஆர்வம் உடையவராக இருந்தார். அவர் நாடகக் கம்பெனியில் சிறுவனாக நடிக்கும் போது அங்கு பி யு சின்னப்பா மேடையில் சண்டையிடுவதை பார்த்து ரசித்து அவரைப் போல் தானும் கத்தி சண்டை பயிற்சி பெற்று வந்தார். பின்னர் சினிமாவில் வந்தபோது மருதநாட்டு இளவரசி போன்ற படங்களில் தனி ஸ்டண்ட் மாஸ்டர் இல்லாத போது அவரே கேமராக்கோணத்தை எப்படி வைக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு பத்து ஆட்களுடன் அவர் ஒருவராக சுற்றி சுழன்று சண்டை போடுவார். அவருடைய சண்டையின் வேகத்தைக் கண்ட சினிமா ரசிகர்கள் அவரைப் பிரபல நடிகராக உயர்த்தினர்.

ஆபத்து காலங்களில் தன்னை காத்துக் கொள்ளவும் பிறருக்கு ஆபத்து வரும்போது அவர்களைக் காப்பாற்றவும் ஒரு மனிதனுக்கு உடல் வலிமை தேவை என்பது எம்.ஜி.ஆரின் மாறாத கொள்கையாகும்.. இதனைப் படங்களில் அவர் நடித்து காட்டினார். சொந்த வாழ்க்கையில் வாழ்ந்தும் காட்டினார். சினிமாவில் அவர் பத்து பேரை எதிர்ப்பது சர்வசாதாரணமாக பல படங்களில் காணக்கூடிய காட்சி ஆகும். இது நடக்கக் கூடியதுதான் என்று அவர் அபிமன்யுவை ஆதாரமாக காட்டி ஒரு பேட்டியில் சொல்லி இருந்தார்.

நிஜத்திலும் எம்ஜி ஆர் உடல் உறுதி மிக்கவராகவும் அஞ்சா நெஞ்சமும் இருந்தார். ஒருமுறை மதுரை அண்ணா சிலைக்கு அவர் மாலை போட வேண்டி வந்தபோது அப்போது சிலைகளுக்கு படிக்கட்டு கிடையாது. கீழே இருந்து ஒருவர் மாலையை ஒரு மூங்கில் கழியில் மாற்றி தூக்கி கொடுக்க மேலே நின்று கொண்டு ஒருவர் போட வேண்டும். மேலே நிற்பதற்கு இடம் இல்லை என்பதனால் எம்.ஜி.ஆர் ஒரு ஏணியை வைத்து அதில் ஏறி அண்ணாவின்

பீடத்தில் முன்னும் பின்னுமாக காலை வைத்துக்கொண்டு தன்னுடைய இடது கையால் சிலையின் இடுப்பை சுற்றிப் பிடித்துக் கொண்டார். ஒரு அரை அடி பீடத்தில் முன்னும் பின்னுமாக தன்னுடைய வலது இடது காலைப் பதித்து நின்று கொண்டிருக்கிறார். கீழே இருக்கும் மக்கள் அதிசயமாகப் பார்க்கிறார்கள். எங்கே விழுந்து விடுவாரோ என்று அச்சமாக இருக்கிறது. ஒருவர் ஒரு மூங்கில் கழியில் மாலையை மாட்டி அந்த கையை மேலே உயர்த்தினார். எம்.ஜி.ஆர் ஒரு கையால் அந்த மாலையை எடுத்து சிலையின் கழுத்தை சுற்றி போட்டு ஒற்றைக்கையால் சரி செய்து விட்டார். பிறகு மெதுவாக அண்ணாவின் இடுப்பில் இருந்து கையை எடுத்து இரண்டு கால்களையும் ஒன்று மாற்றி ஒன்றாக வைத்து ஏணியில் கால் வைத்து இறங்கி விட்டார்.

எம்.ஜி.ஆர் தன வேலைத் தளத்திலும் போக்கிலும் வரத்திலும் நிஜ வாழ்க்கையில் பல எதிரிகளை நேரில் சந்தித்து இருக்கிறார். சமாளித்திருக்கிறார். தேங்காய் அல்லது கல்லை சுற்றிலும் மல்லிகை பூவை சுற்றி மல்லிகை பந்து போல எம்ஜி ஆர் மீது எதிரிகள் ஏறிவதுண்டு ஒருமுறை அவர் வெளியூர் செல்ல ரயிலில் புறப்பட்ட போது ***“உங்கள் உயிருக்கு ஆபத்து உங்களை ரயிலில் வைத்துக்கொல்ல எதிரிகள் திட்டமிட்டிருக்கின்றனர். நீங்கள் உங்கள் பயணத்தை ஒத்தி போடுங்கள்”*** *என்று உயர் காவல் அதிகாரி வேண்டிக் கேட்டுக் கொண்டபோது எம்.ஜி.ஆர் ‘எனக்கு என் தாயின் அருள் பரிபூரணமாக இருக்கிறது. என் அம்மா என் உயிரை காப்பாற்றுவார். நான் அந்த வண்டியில் போனால் எனக்கு ஒன்றும் ஆகாது. வண்டியில் பயணிக்கும் அனைவரும் காப்பாற்றப்படுவார்கள். நான் அந்த வண்டியில் போக வில்லை என்றால் தான் அந்த வண்டிக்கு ஏதாவது ஆபத்து ஏற்படும். வண்டியில் பயணிக்கும் பயணிகள்*

பாதிக்கப்படுவர்’ என்று சொல்லிவிட்டு ரயிலில் ஏறி விட்டார். பத்திரமாகப் போய்ச் சேர்ந்தார்.

அவர் ரயிலில் பயணிக்கும் பொழுது தலைமாடு கால்மாடு மாற்றி படுத்திருந்தார். அப்போது ஜன்னல் வழியாக வந்த எதிரி கத்தியை விட்டு உள்ளே எறிந்தான். அந்த கத்தி எம்.ஜி.ஆர் கால் பகுதியில் பட்டு கீழே விழுந்து விட்டது. அவன் குறி வைத்தது தலைக்கு தான். ஆனால் எம்.ஜி.ஆரின் கால் பகுதிதான் அந்த பக்கம் இருந்தது. அவர் ஜன்னல் பக்கமாக தலையை வைக்காமல் உள் பக்கமாக தலையை வைத்து ஜன்னல் பக்கமாக கால் நீட்டி இருந்தார். இப்படித்தான் நடக்கும் என்பதை முன்கூட்டியே யோசித்து அவர் இதுபோல் தன்னுடைய படுக்கையை இடம் மாற்றி படுத்துக்கொண்டார். சினிமாவில் தலையணையை வைத்து போர்வையை போட்டு மூடிவிட்டு அவர் வேறொரு இடத்தில் ஒளிந்து கொண்டிருப்பார் அல்லவா. அது போலத்தான் இந்த முறையும் அவர் தப்பித்துவிட்டார்.

இன்னொரு முறை எம்.ஜி.ஆர் காரில் போய்க் கொண்டிருந்த போது அவருடன் நடிகர் தங்கவேலுவின் வந்தார். இருவரும் மதுரைக்கு வருகின்றனர். வழியில் நாலைந்து. பேர் கம்புகளோடு வந்து காரை மறித்து **“கையில் இருக்கும் பணத்தை எடுத்துக் கொடுங்கள்” என்று மிரட்டினர். ‘’எம்.ஜி.ஆர் எங்களிடம் கொடுக்க எதுவுமில்லை’’ என்றார். “கொடுக்காவிட்டால் காரை விட மாட்டோம்’’ என்றனர். “எங்கே தடுத்து நிறுத்துங்கள் பார்ப்போம்”** என்று சொல்லி விட்டு காரில் இருந்த கம்பை எடுத்துக்கொடு என்றார். பின் சீட்டில் இருந்தவர்கள் கம்பை எடுத்துக் கொடுத்தனர். அவர்கள் இருக்கையின் கீழே இரண்டு மூன்று கம்புகள் கிடந்தன. உருவிக்கொண்டு கார் கதவை திறந்து இறங்கியதும் காருக்குள் இருந்த தங்கவேலுக்கு பயம் பிடித்துக் கொண்டது. ‘‘ஐயோ இன்றைக்கு பெரிய சண்டையாக போகிறது அவர்கள்

பத்துப் பேர். இவரோ ஒருவர். இன்று என்ன செய்யப் போகிறார்'' என்று அஞ்சினார்

எம்.ஜி.ஆர் துணிச்சலை பார்த்த அந்த பத்துப் பேரும் சற்று அதிர்ந்துவிட்டனர். ஒருவன் மட்டும் ஒரு தீக்குச்சியை கிழித்து ''யார் இவர்'' என்று முகத்துக்கு நேரே காட்டி பார்த்தான். பார்த்தவுடன் அவனுக்குப் புரிந்து விட்டது. 'வந்திருப்பவர் எம்.ஜி.ஆர்' என்றதும் அனைவரும் எம்.ஜி.ஆரிடம் மன்னிப்பு கேட்டு ''நாங்கள் தெரியாமல் உங்கள் காரை நிறுத்தி விட்டோம், நீங்கள் என்று தெரிந்திருந்தால் நிறுத்தி இருக்க மாட்டோம்'' என்றனர்.

எம்.ஜி.ஆர் அந்த திருடர்களிடம் அமைதியாக பேசி 'இப்படி செய்யாதீர்கள் திருட்டுத்தனம் செய்வது அசிங்கம் இல்லையா' என்று சொல்லி ஆளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்ளுங்கள் என்று அனுப்பி வைத்தார். தனியாகப் போகும்போது கூட எம்.ஜி.ஆர் பயந்தது கிடையாது உண்மையிலேயே அவருக்கு பலரை சமாளிக்கக் கூடிய வீரமும் உடல் வலிமையும் துணிவும் இருந்தது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை .

மழை வழங்கும் வருண பகவான்

தேர்தல் பிரச்சாரத்துக்கு காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது ஒரு இடத்தில் மக்கள் கூட்டம் நிற்பதைப் பார்த்து எம்.ஜி.ஆர் அங்கு கைகூப்பி கும்பிட்டார். அவர்கள் காரை சுற்றி வந்து நின்றதும் காரை நிறுத்தினார். அப்போது அங்கிருந்த வயதான பெண்கள் பார்த்து ''நலமாக இருக்கிறீர்களா எப்படி இருக்கிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார் அப்போது அவர்களை 'நாங்க நல்லா இருக்கோம் ஐயா. எங்களுக்கு ஒன்னும் வேண்டாம். இந்த பக்கம் மழையே இல்ல. நீங்க கொஞ்சம் நடந்து வந்து எங்க வயல்ல உங்க கால வச்சு

நடந்தால் போதும். நீங்கள் வந்தாலே மழை வரும் செல்வமும் வரும் எல்லாம் வரும் என்று சொன்னார்கள்' எம்.ஜி.ஆருக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஏழை பெண்களின் விருப்பத்துக்கு இணங்க எம்.ஜி.ஆர் வயலில் இறங்கி மெல்ல நடந்து சென்று அந்த காய்ந்து உலர்ந்து போய் வெடித்து போயிருந்த வயல் பகுதியில் கொஞ்ச தூரம் நடந்ததும், அவர்கள் ''போதும் ஐயா நீங்கள் திரும்பி உங்கள் காருக்கு போங்கள் இதற்கு மேல் நடக்க முடியாது; கல்லும் முள்ளும் ஆக இருக்கிறது; நீங்கள் போய் வாருங்கள்' என்று சொல்லி அவரை அனுப்பி வைத்துவிட்டனர். அனுப்பி விட்டு அவர்கள் அந்த இடத்தில் அவர் நடந்து போன பாதையில் இருந்த காலடி மண்ணை எடுத்து எல்லோரும் ஆளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் சேலையில் முடிந்து கொண்டனர். எதற்காக எப்படி எடுக்கிறார்கள் என்று எம்.ஜி.ஆருடன் வந்தவர்கள் அவர்களிடம் கேட்டார்கள். அப்போது இந்த மண்ணை கொண்டு போய் எங்கள் வயலில் தூவுவோம் அப்போது எம்.ஜி.ஆர் காலடிபட்ட எங்கள் வயல் நன்றாக விளையும்' என்று கூறினார்கள்.

பொதுவாக ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு புலம்பெயர்ந்து வரும் போது மக்கள் தங்களுடைய குல சாமி கோயில் இருந்த இடத்தில் இருந்து பிடிமண் எடுத்து கொண்டு வருவார்கள். அந்த பிடி மண்ணை கீழே எங்கேயும் வைக்காமல் தாங்கள் தங்கும் இடத்திற்கு வந்ததும் அங்கே ஒரு நல்ல இடத்தை பார்த்து அந்த பிடி மண்ணை அங்கு வைத்து இடத்தில் கோயில் கட்டி வழிபடுவார்கள். அது அவருடைய குலசாமி கோவிலாக இருக்கும். காலடி மண் எடுப்பது என்பது இவ்வாறு பிடிமண் எடுப்பதோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும். எம்.ஜி.ஆரை குலசாமியாக நினைத்த கிராம மக்கள் அவருடைய காலடி மண்ணை எடுத்து தங்களது கிராமம் தங்களது வயல்களில் தூவினர்.

எம்.ஜி.ஆர் பிரச்சாரத்துக்காக பாண்டிச்சேரிக்கு போய்க் கொண்டிருந்தார். பாண்டிச்சேரி போய் திரும்பி அந்த வழியாக வரும் பொழுது அங்கு நல்ல மழை பெய்திருந்தது. மீண்டும் அதே இடத்தில் அதே கிராமத்து மக்கள் நின்று அவருக்கு நன்றி தெரிவித்து அவரை வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்கள்.

எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருக்கும் பொழுது மதுரை பகுதிக்கு வந்தால் ஒரு வார காலம் கூட அங்கு தங்கி இருப்பது வழக்கம். அப்போது அங்கு வாழும் மக்கள் ‘எம்.ஜி.ஆர் வந்திருக்கிறார் மழை பெய்யும்’ என்று சொல்லுவார்கள். அது போல எம்.ஜி.ஆர் அங்கு வந்திருந்த போது பலமுறை மழை பெய்தது. பூ தூவலாக மழை தூவும். அவருடைய பொதுக்கூட்டங்கள் நடப்பதற்கு முன்பு இருந்த வெக்கை குறைந்து குளிர்ந்த காற்று வீசுவதற்கான அளவுக்கு மழை தூவி இருப்பதைப் பார்க்கலாம். அதை மக்கள் சொல்லி மகிழ்வர்.

எம்.ஜி.ஆர் வந்தால் மழை பெய்யும் என்பது ஒரு நம்பிக்கை மட்டும் அல்ல. அது ஒரு நிகழ்வு உண்மை நிகழ்வு. எனவே எம்.ஜி.ஆரை வருணன் என்று அழைப்பதில் தவறே கிடையாது.

எதிரிகளை அழிப்பதில் எம்.ஜி.ஆர் ஒரு அக்கினி தேவன்

கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு திருடன் வந்த வீட்டில் ஏதாவது மிஞ்சி இருக்கும் ஆனால் தீப்பிடித்த வீட்டில் எதுவும் மிஞ்சாது. எல்லாம் எரிந்து பொசுங்கி போகும். எதிரியை அழிப்பதில் அக்கினியை போல நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுவார்கள் பகைவனை மொத்தமாக அழித்து விட வேண்டுமே தவிர அவனிடம் ஒரு சிறு பகுதியைக் கூட இரக்கம் பார்த்து விட்டு வைக்கக்கூடாது என்பது சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் சொல்லும் கருத்தாகும்.

முற்காலத்தில் செங்கிஸ்கான் போன்றவர்கள் இந்தியாவுக்குள் படையெடுத்து வந்தபோது ஆண் குழந்தைகளில் அன்று பிறந்த குழந்தையை கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் ஒரு குழந்தை உயிரோடு இருந்தால் கூட அது வளர்ந்து வரும் போது நம் இனத்தை அழித்தவன் தானே என்று நூறு குழந்தைகளின் வெறியோடு வளர்ந்து வந்து தன்னை அழிக்க நினைக்கும் என்று அஞ்சியதால் எதிரிகளை அழிக்கும் போது சுவடில்லாமல் அழித்துவிடுவது அன்றைய மன்னர்களின் இயல்பு.

சங்க இலக்கியத்தில் போர் முடிந்து வரும் பகுதிகளில் எல்லாம் வீடுகளுக்கு தீ வைப்பார்கள்; நிலங்களில் வெள்ளை எள்ளை விதைத்து விடுவார்கள். வெள்ளை எள்ளை தூவி விட்டால் அதன் பிறகு நெல் விளையாது. வீடுகளை கொள்ளை அடிப்பார்கள். அவர்களிடம் காசு பணம் இல்லாமல் செய்து விடுவார்கள். பெண்களை எல்லாம் வன்கொடுமைக்கு உள்ளாக்கி விடுவர். அவர்களின் தலைமயிரை அறுத்து யானைக்கு காலில் கயிறு திரித்து கட்டுவார்கள். இளம்பெண்களை உழைக்கக்கூடிய பெண்களை இழுத்துக்கொண்டு வந்து தங்கள் ஊரில் கொண்டி மகளிர் ஆக மாற்றி தொண்டூழியம் செய்ய விட்டுவிடுவர்.என்று தகவல்கள் கிடைக்கின்றன. தொண்டு மகளிருக்கு உணவைத் தவிர வேறு எதுவும் கிடைக்காது. இவ்வாறு செய்வதற்கு காரணம் தன்னுடைய பகைநாட்டில் அடுத்து குழந்தைகள் பிறக்கக் கூடாது. விளைநிலங்கள் விளையக்கூடாது. வீடு வாசல்கள் கட்டக்கூடாது .அது முழுமையாக பாழ்பட்டு அந்த தேசம் பட்டுபோய்விட வேண்டும் என்ற நோக்கமமே ஆகும்.

அக்காலத்தில் அரசர்கள் அக்கினியை போல எதிரிகளை சுட்டெரித்தனர். சங்க இலக்கியத்திலேயே இதற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளன தனக்கு

வேண்டியவர்களிடம் சந்திரனைப் போல குளிர்ச்சியாக இருக்கும் மன்னவன் தனக்கு வேண்டாதவர்களை சூரியனைப் போல சுட்டு அழிக்கின்றான், என பண்டைய இலக்கியங்கள் பகர்கின்றன. அக்கினியை போல கொளுத்தி சாம்பலாக்கினான் என்று சங்கப் பாடல்களும் மன்னனின் இயல்பை எடுத்துரைக்கின்றன. இதைப்போல எம்.ஜி.ஆர் தனக்கு அரசியலில் எதிரியாக இருந்த கருணாநிதியை தான் உயிரோடு இருக்கும் காலம் வரை தலையெடுக்க விடவே இல்லை தொடர்ந்து அடுத்தடுத்த தேர்தல்களில் அவரைத் தோற்கடித்து கொண்டே வந்தார்.

அமெரிக்காவில் எம்.ஜி.ஆர் சிகிச்சை பெற்று வந்த காலத்தில் கருணாநிதி தமிழக மக்களை பார்த்து தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் 'நீங்கள் என்னை இப்போது முதல்வர் ஆக்குங்கள்; நான் எம்.ஜி.ஆர் வந்ததும் முதல்வர் பதவியை அவருக்கு திரும்பக் கொடுக்கின்றேன்' என்று கூட கேட்டுப்பார்த்தார். ஆனால் மக்கள் அவரை நம்பத் தயாராக இல்லை. எம்.ஜி.ஆரும் அதற்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. வெற்றி வீரராகவே அமெரிக்காவிலிருந்து திரும்பினார்.

திமுக ஆட்சியில் சட்டசபையை விட்டு எம்.ஜி.ஆர் கடைசியாக வெளியேறும்போது 'சட்டசபை செத்துவிட்டது; இனி முதலமைச்சராக தான் உள்ளே வருவேன்' என்று சபதமிட்டு சென்றார். அதுபோல முதலமைச்சராகி சட்டசபைக்கு வந்த எம்.ஜி.ஆர் சைதாப்பேட்டையில் போட்டியிட்ட ஹன்டேயிடம் கருணாநிதி தோற்றுப் போனதாக தகவல் வந்த பிறகு அதை மாற்றியவர் எம்.ஜி.ஆர். "அவர் தோற்கக் கூடாது. அவர் அரசியலில் மூத்தவர் அவர் என் முன்னே வந்து உட்கார வேண்டும் எனவே அவர் வெற்றி பெற்றதாகவே அறிவிப்போம்'' என்று சொல்லி விட்டார்.

சைதாப்பேட்டையில் கருணாநிதி வெற்றி பெற்றதாக அறிவித்து விட்டு அங்கு போட்டியிட்ட ஹண்டேயை மேலவை உறுப்பினராக்கி அவரை சுகாதாரத்துறை அமைச்சர் ஆக்கினார். எதிரியை தனக்கு எதிரே வைத்து பார்த்த துணிச்சல்காரர் எம்.ஜி.ஆர். அவர் எதிரிகளை கண்டு அஞ்சி ஓடியது கிடையாது. அவர்களை பின்னிருந்து தாக்கியதும் கிடையாது.

''நேருக்கு நேராய் வரட்டும்

நெஞ்சில் துணிவிருந்தால்

என் கேள்விக்கு பதில் தரட்டும்

நேர்மை திறம் இருந்தால்

என்று மீனவ நண்பன் படத்தில் அவர் பாடிய பாடல் வரிகள் அவர் வாழ்க்கையில் உண்மையாகி கருணாநிதியை தன இருக்கைக்கு நேருக்கு நேராக உட்கார வைத்து பார்த்த்தவர் எம்.ஜி.ஆர். கருணாநிதியை ஒரு புறம் எதிர்க்கட்சித்தலைவராக உட்காரவைத்து தான் மறுபக்கம் முதலமைச்சராக இருந்து ஆட்சியை நடத்தினார்.



திண்டுக்கல்லில் ஜெயித்த மாயத்தேவர்
அதிமுக வின் முதல் வெற்றி

அக்கினியைப் போல எதிரிகளை சுட்டுப் பொசுக்கி தனது காலம் முழுக்க திமுகவை வளரவிடாமல் தலையெடுக்கவிடாமல் நசுக்கி வைத்திருந்தார். அரசியலில் எம்.ஜி.ஆரின் முதல் வெற்றியே அபாரமான வெற்றியாகும். திண்டுக்கல்லில் இடைத் தேர்தல் நடந்தபோது ஐந்து பெரிய கட்சிகள் மோதின. ஐந்து பெரிய கட்சிகளையும் ஒருவராய் எதிர்த்து நின்று ஜெயித்தார். திமுகவை தவிர மற்ற எதிர்க்கட்சிகள் அனைத்தும் டெபாசிட் இழந்தன. எனவே எதிரிகளை அழிப்பதில் அவர் ஒரு அக்கினி பகவான்.

அழகில் குமரன் எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகனான சத்யராஜ் தன்னுடைய படத்தில் திருவிளையாடல் சிவாஜி நாகேஷ் உரையாடலை மாற்றி நவீன உரையாடலாக நடித்திருப்பார். அதில் அழகுக்கு என்ற கேள்விக்கு எம்.ஜி.ஆர் என்ற பதில் சொல்லுவார். அழகுக்கு எம்.ஜி.ஆர் என்பது பலரும் ஏற்றுக்கொண்ட ஒரு கருத்தாகும். எம்.ஜி.ஆரின் அழகு என்பது அவருடைய நிறத்தால் வந்ததல்ல; அவருடைய குணத்தால் உணரப்படுவது. beauty is in the eye of the beholder என்பது போல அழகு என்பது வர்ணிக்கப்படும் பொருளில் கிடையாது; அதை பார்ப்பவர் அல்லது ரசிப்பவரின் கண்களில் இருக்கின்றது.

எம்.ஜி.ஆர் படத்தில் அவருடைய அழகை ரசித்து பாடும் பாடல்கள் பல உண்டு

கட்டான கட்டழகு கண்ணா உன்னை
காணாத கண்ணும் ஒரு கண்ணா

என்ற பாடல் வரிகள்

மானல்லவோ கண்கள் தந்தது என்று தொடங்கும் பாடலில்

தேக்கு மரம் உடலைத் தந்தது
சின்ன யானை நடையைத் தந்தது

பூக்களெல்லாம் சிரிப்பைத் தந்தது
பொன்னல்லவோ நிறத்தைத் தந்தது
என்று எம்.ஜி.ஆரின் அழகை பாடுகின்ற வரிகள்

தங்கத்தில் முகமெடுத்து
சந்தனத்தில் உடலெடுத்து
மன்னன் என்று வந்திருக்கும் அழகோ
நீ மாலைநேர பொன் வண்ண நிலவோ

என்று எம்.ஜி.ஆரின் அழகை ரசித்து பாடும் பாடல்கள் போன்றவை அவருக்கு சிறப்பு சேர்த்தன. அவருடைய கட்டுடல் பொன்வண்ணம் ஆகியவை பாராட்டப்பட்டாலும் அவற்றைக் கடந்து அவருடைய இளமை தோற்றமும் வசீகர முகமும் மலரும் புன்னகையும் அழகு என உணர்வதற்கு காரணமாகின்றன.

குமரன் என்ற சொல்லுக்கு இளைஞன் அழகன் என்ற விளக்கமே கொடுக்கப்படுகின்றது. தேவர் தனது தனிப்பிறவி படத்தில் முருகனாக தோன்ற வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டதற்காக ஒரு பாடல் காட்சியில் எம்.ஜி.ஆர் முருகனாக தோற்றமளிப்பார். எம்.ஜி.ஆருக்கும் தேவருக்கும் இடையிலான தெய்வீக



அனுபவம் அவர்கள் நட்பின் ஆழம் ஆகியனவே எம்.ஜி.ஆர் இப்படி முருகனாக தோன்ற இசைந்ததற்கு காரணம் ஆகும்.

திருமுருக கிருபானந்த வாரியார் நன்கொடை கேட்டு எம்.ஜி.ஆரிடம் வந்தபோது நன்கொடையாக ஒரு தொகையை அளிக்காமல் அவர் செய்ய திட்டமிட்டிருந்த காரியத்திற்கான முழு செலவையும் ஏற்றுக் கொண்டார். காரணம் வாரியாரின் மீதிருந்த அன்பும் அவருடைய திருப்பணிகளின் மீதிருந்த மதிப்பும் ஆகும். எம்.ஜி.ஆர் அவருடைய சொற்பொழிவை ரசித்து கேட்பதும் ஆகும். தேவர் மருதமலைக்கு படிக்கட்டுகளுக்கு மின்விளக்கு வசதி செய்து தந்த போது அந்த விளக்குகளை சுவிட்ச் ஆன் செய்யும்படி எம்.ஜி.ஆரிடம் கேட்டுக் கொண்டார்.

எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்த தெய்வங்கள் என்றால் முருகன் இயேசு கிறிஸ்து பின்பு அவருடைய தாயார் வழிபட்ட காளிதேவி என்பர். அவர் படுக்கையறையில் முருகன் படம் இருந்ததாகக்வும் கூறுவர். அவர் பைபிள் வாசிப்பதில் விருப்பம் உள்ளவர் என்பர்,. இதனால் பல கிறிஸ்தவர்களும் அவரை ஒரு 'சீக்ரட் கிறிஸ்டியன்' என்று குறிப்பிடுவர்.

அழகிலும் பொன்னின் நிறம், பிள்ளை மனம், வள்ளல் குணம் கொண்டவராக தமிழக ரசிகர்களுக்கு



தோன்றினார். எம்.ஜி.ஆர் அழகில் குமரனையும் வெல்லக் கூடியவராக இருந்தார். அவருடைய சிரிப்பு அனைவரையும் கவர்ந்தது. ஆணுக்கு ஆண் ஆசை கொள்ளும் பேரழகன் என அருகில் இருந்தவர்கள் பாராட்டினர். ஆயிரத்தில் ஒருவன் படத்துக்கு வசனம் எழுதிய ஆர் கே சண்முகம் ஒரு முறை எம்.ஜி.ஆரிடம் பேசும்போது நான் மட்டும் பெண்ணாக பிறந்திருந்தால் உங்களையே காதலித்து கல்யாணம் செய்துகொண்டிருப்பேன் என்றாராம். இதை போலவே டான்ஸ் மாஸ்டர் சலிமும் அவரிடம் ஒரு நாள் தெரிவித்திருக்கிறார். இக்கருத்தை அவர்கள் இருவரும் தம் பேட்டிகளில் குறிப்பிட்டுள்ளனர்.

எம்.ஜி.ஆரின் சிரிப்பு மலரின் மலர்ச்சியையும் குளுமையையும் கொண்டிருக்கும். அதனால்தான் தமிழ்வாணன் 10 பேர் படங்களை காட்டி அதில் ஒரு படத்தை எடு என்று ஒரு குழந்தையிடம் சொன்னால் அது கண்டிப்பாக அந்த பத்து படங்களில் எம்.ஜி.ஆர் படத்தை மட்டும் தான் எடுக்கும் என்றார். ஏனென்றால் எம்.ஜி.ஆர் முகம் குழந்தையையும் கவரக்கூடிய அன்புமுகம், ஆசை முகம், அழகு முகம் அவர் அழகில் குமரனுக்கு நிகரானவர்.




5

நம்பிக்கை நட்சத்திரம் எம்.ஜி.ஆர்

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்ற கழகம் ஆகியவை ஏழை மக்களிடையே நம்பிக்கையைத் தோற்றுவித்தது இல்லை மாறாக அவை உங்கள் துன்பத்திற்கு காரணம் நீங்கள் சார்ந்திருக்கும் மதமும் உங்களை பொருளாதார ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் சுரண்டும் ஆதிக்க சாதியினர்தான் குறிப்பாக பிராமணர்கள் என்று அவர்களின் துன்பத்திற்கான காரணத்தை மாற்றி எடுத்துக் கூறினர் அதுவரை ஏழை மக்கள் தங்கள் தலைவிதி காரணமாக தாங்கள் துன்பப்பட்டு வருவதாக எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால் தலைவிதி என்று காரணம் காட்டுகின்ற பிராமணர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மதம் தான் உங்களுடைய அனைத்து கஷ்டங்களுக்கும் காரணமாக இருக்கிறது என்று மதத்தின் பேரில் குற்றம் சுமத்தி வந்தனர். ஏழைகளைப் பொறுத்தவரையில் துன்பத்திற்கான தீர்வு தான் முக்கியமே தவிர அதற்கு காரணமாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு கவலை இல்லை. ஏனென்றால் காரணத்தை அறிந்து அவர்கள் செய்யக் கூடியது எதுவுமில்லை. இதனால்தான் பௌத்த மதம் ஒரு காலத்தில் செல்வாக்கிழந்து போயிற்று. ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று கூறிய கௌதம புத்தரின் கருத்துகள் ஒருகட்டத்தில் செல்வாக்கிழந்து போயின. ஆசை இல்லாத மனிதன் யார் இருக்க முடியும்? இதனை அடிப்படையாக கொண்டுதான் இருபதாம் நூற்றாண்டில் வந்த ஓஷோ, ஜக்கி வாசுதேவ் போன்றவர்கள் எல்லாவற்றுக்கும் ஆசைப்படு

என்று மாற்றி யோசித்தனர். மாற்றி பிரச்சாரம் செய்தனர். ஒரு மனிதனின் துன்பத்திற்கு காரணம் ஆசையாக இருந்தாலும் ஆதிக்க சாதியாக இருந்தாலும் அவன் சார்ந்திருக்கும் மதமாக இருந்தாலும் அவனால் அவற்றை எதிர்த்து செய்யக்கூடியது எதுவும் இல்லை. காரணம் அவன் ஒரு ஏழை. பணக்காரர்களாக இருந்த ஆதிக்க சாதியினர் பிராமணர்களை எதிர்த்து தனியாக ஒரு இயக்கம் தொடங்கினர். அது தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரில் தொடங்கப்பட்டு பின்பு ஜஸ்டிஸ் கட்சியாகி பின்பு திராவிடர் கழகம் என சமூக விடுதலை சார்ந்த இயக்கங்களாக வளர்ந்தன. இதன்பிறகு அரசியல் இயக்கமாக உருவாகவேண்டும். அரசியலில் ஆட்சி அதிகாரம் ஆகியவற்றை கையகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் திராவிட முன்னேற்ற கழகம் சென்னை நடேசன் பார்க்கில் தொடங்கப்பட்டது. திமுக தொடங்கப்பட்டபோது அக்கட்சியில் கருணாநிதி கிடையாது. அவர் இக்கட்சிக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை உறுதியாக தெரிந்து கொண்டபின் அக்கட்சியில் இணைந்து கொண்டார் .





திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்த அண்ணாவும் கலைஞரும் மேடைகளில் சீர்திருத்தக் கருத்துக்களை அடுக்கு மொழியில் சிறப்பாக முழங்கினர். பிரம்மனின் தலையில் தோன்றிய பிராமணனுக்கும் ஜாதியே இல்லாத பஞ்சமர் போன்றோருக்கு இடையிலான வேறுபாடுகளை ஏற்றத்தாழ்வுகளை வைத்து அடுக்கு மொழியில் அலங்காரமாக பேசி வந்தனர். மேடையில் முழங்கிய எவரும் துன்பத்திற்கான மாற்று வழியை எடுத்துரைக்காமல் துன்பத்திற்கான காரணங்களையே மீண்டும் மீண்டும் முழங்கிக் கொண்டிருந்தனர். பிராமணரல்லாத உயர் சாதியினர், அல்லது ஆதிக்க சாதியினர் எனப்படும் நாயக்கர், செட்டியார், முதலியார் பிள்ளைமார் கவுண்டர் ஆகியோர் அதிக அளவில் காங்கிரஸ் கட்சியில் இருந்தனர் . காங்கிரஸ் கட்சியில் இல்லாத சிலர் கிராமப் பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் தங்களுடைய முக்கியத்துவத்தை நிலைநாட்டிக்கொள்ள வேறு பல கட்சிகளை நாடியபோது திமுக அவர்களுக்கு கைகொடுத்தது. அரசியல் பின்னணி இருந்தால் மட்டுமே சுதந்திர இந்தியாவில் மக்கள் செல்வாக்குடன் இருக்க முடியும் என்பதை புரிந்து

கொண்ட இந்த ஆதிக்கசாதியினர் வெள்ளைக்காரனிடம் ராவ்பகதூர் பட்டம் வாங்கியது போலவே காங்கிரஸ் கட்சியில் அல்லது திமுகவில் சேர்ந்து கொண்டனர். இவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளவே முயன்ற னரே தவிர ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டும், ஏழை மக்களின் நிலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் இவர்கள் அரசியல் கட்சிகளில் இடம் பெறவில்லை .

திமுகவினரின் கலைப்படைப்புகள்: பிராமணர்களையோ அல்லது பணக்காரர்களையோ இந்து மதம் சார்ந்த மடங்களை நடத்தி வந்த மடத்தடியார் போன்றவர்களையோ குற்றம் சுமத்தி புராணங்களில் வரும் கதைகளுக்கு காரணங்கள் கேட்டு இந்து மத சம்பிரதாயங்களை மூடநம்பிக்கைகள் என்று சொல்லி மக்களை குழப்பி கொண்டிருந்தன. பெரியவர்கள் என்ற பெயரில் யார் என்ன சொன்னாலும் அவற்றை கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்; பழையனவற்றை பின்பற்றுவதில் பத்தாம்பசலிகள் ஆக இருக்காதீர்கள்; ஏன் எதற்கு என்று கேளுங்கள் என இளைஞர்களை திமுகவினர் தூண்டிவிட்டனர். ஏன் என்ற கேள்விக்கு பதில் கிடைத்தால் மட்டுமே அதை தெளிவாக எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்தவர் சொல்வதை அப்படியே நம்பக்கூடாது எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்று வள்ளுவர் வாக்கை எடுத்துரைத்து இளைஞர்களிடையே பகுத்தறிவு பிரச்சாரத்தை செய்து வந்தனர். ஓரளவுக்கு இது சமுதாயத்தில் பெரிய புரட்சியை ஏற்படுத்தியது என்பது உண்மைதான். இளைஞர்களை

கேள்வி கேட்கத் தூண்டியது. கண்மூடித்தனமான முதலாளித்துவத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வர காரணமாக இருந்தது தீண்டாமை பிரச்சனை தீர்வுகாண துடித்தது. அப்பிரச்சினையை அலசியது பெண்ணடிமைத்தனத்தின் காரனநகல் ஆராயப்பட்டன. இவற்றின் காரணமாகவே இன்று இந்திய மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் இருக்கின்றது. குழந்தைப் பேறுக்கு காரணம் இறைவன் தான் என்று சொல்லி அதை மறுத்து குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை முதன்முதலில் சிறந்த முறையில் அதிக அளவில் நடைமுறைப்படுத்தியதில் தமிழகம் முதலிடத்தை பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களில் குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் பல சிக்கல்களை மத்திய அரசு மேற்கொண்ட போது தமிழக மக்கள் சரியான முறையில் புரிந்து கொண்டு அதனை ஏற்றுக்கொண்டனர். இதற்கு முக்கிய காரணம் திராவிட கட்சிகள் பரப்பிவந்த பகுத்தறிவு பிரச்சாரம் என்பதில் ஐயமில்லை. அண்ணாவின் வேலைக்காரி ஓர் இரவு ஆகிய நாடகங்கள் திரைப்படங்களாக வெளிவந்தபோது அந்த படங்களின் கதாநாயகியே பலவித துன்பங்களுக்கும் உள்ளாகி அவளைப் பாதுகாக்க யாரும் இல்லாமல் பல சிரமங்களை அனுபவித்தாள்.

கலைஞரின் சாரதா, மறக்க முடியுமா, பராசக்தி போன்ற படங்கள் படங்களும் பெண்களை அதிக துன்பப்பட்டவர்கள் ஆகவே காட்டின. பெண்ணின் துன்பத்துக்கெல்லாம் ஆண்களே காரணம் என்று ஆண்களின் பக்கம் விரலை நீட்டின. இந்த ஆண்களும் உயர்சாதிக்காரர்கள் அல்லது ஆதிக்க சாதியினராக அல்லது பிராமணராகவோ இருந்ததும் பணக்காரர்களாக இருந்தது உற்று நோக்கத்தக்கது. இவர்களின் கலைப் படைப்புகள் அனைத்தும் துன்பம் துன்பம் துன்பம் என்று தான் சொல்லிக் கொண்டிருந்தனவே தவிர இன்பத்துக்கான வழி என்ன என்பதை எடுத்துரைக்கவில்லை.

எம்.ஜி.ஆர் திமுகவில் இணைந்த போது செல்வாக்குப் பெற்ற திரைக்கலைஞர்கள் திமுகவில் இருந்தனர். ஓர் இரவு படத்தில் கதாநாயகனாக நடித்த நடிப்பிசைப் புலவர் கே ஆர் ராமசாமி அக்கட்சியில் இருந்தார். தமிழை சரியான உச்சரிப்புடன் பேசும் இலட்சிய நடிகர் எஸ்எஸ் ராஜேந்திரன் இருந்தார். திராவிட இயக்கத்தின் கவிஞர் பாரதிதாசன் இருந்தார் எனினும் எம்.ஜி.ஆர் கட்சி என்றுதான் திமுக அழைக்கப்பட்டது. அண்ணா ஒருமுறை கார் நின்று விட்டது என்று ஒரு இடத்தில் உட்கார்ந்து இருந்தபோது அந்த பக்கமாக தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்த பெண்கள் அதில் கட்டியிருந்த கொடியை பார்த்துவிட்டு **"நீங்க எம்.ஜி.ஆர் கட்சியா"** என்று கேட்டார்கள். அவரும் ஆமாம் என்று சொல்லிவிட்டு சிரித்துக்கொண்டார். கார் நிற்கிறதே என்று கேட்டபோது 'ரேடியேட்டர் சூடாகிவிட்டது கொஞ்சம் தண்ணீர் ஊற்ற வேண்டும்' என்றார். உடனே அவர்கள் வெகுதூரம் போய் கொண்டு வந்த தண்ணீரை அந்த ரேடியேட்டருக்கு ஊற்றினர். பிறகு வண்டி கிளம்பியது. கார் ஓட்டுநர் அண்ணாவை பார்த்து 'ஏன் அண்ணா இப்படி ஆமாம்' என்றீர்கள். 'இது என்னுடைய கட்சி; எம்.ஜி.ஆர் இதில் உறுப்பினராக இருக்கிறார்' என்று சொல்ல வேண்டியதுதானே என்றார். அதற்கு அண்ணா 'நான் பேசினால் ஆயிரம் பேர் கேட்பார்கள்; ஆனால் எம்.ஜி.ஆர் அதே கருத்தை ஒரு படத்தில் சொன்னால் இலட்சம் பேர் கேட்பார்கள்; பார்ப்பார்கள்'. **அதனால் அவர்களை பொறுத்தவரை இது எம்.ஜி.ஆர் கட்சிதான் எம்.ஜி.ஆர் கட்சி என்று சொல்வது எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது எனக்கு வருத்தமோ கோபமோ கிடையாது' என்று சிரித்துக்கொண்டே சொன்னார். ஆக திமுக அண்ணா இருக்கும்போதே எம்.ஜி.ஆர் கட்சி என்றுதான் அழைக்கப்பட்டது.** இதற்கு யாரும் அப்போது எதிர்ப்பு தெரிவித்தோ மறுப்பு தெரிவித்தோ அறிக்கை விடவில்லை.

மேடையிலும் பேசவில்லை. நம்முடைய கட்சியின் கொள்கை பரப்பு செயலாளராக பிரச்சார பீரங்கியாக எம்.ஜி.ஆரின் படங்கள் இருக்கின்றன என்பதில் அண்ணா பெரும் மகிழ்ச்சி கொண்டார்.

1962 ஆம் ஆண்டு தேர்தல் வந்தபோது எம்.ஜி.ஆர் அண்ணாவைப் பார்த்து தேர்தல் நிதி கொடுக்க வந்தார். அப்போது அண்ணா 'நீங்கள் கொடுக்கும் ஆயிரங்களை விட நீங்கள் வந்து உங்கள் முகத்தை மக்கள் முன் காட்டினால் எனக்கு மூன்று லட்சம் ஓட்டு விழும். அதனால் நீங்கள் தயவுசெய்து பிரச்சாரத்திற்கு வரவேண்டும்' என்று முதன்முறையாக எம்.ஜி.ஆரிடம் பிரச்சாரத்திற்கு வாருங்கள் என்று கேட்டு வேண்டி கேட்டுக் கொண்டவர் அண்ணா. எம்.ஜி.ஆர் தானாக அரசியலுக்கு வரவில்லை அவர் அண்ணாவால் வரவழைக்கப் பட்டார். ஒரு அரசியல் ஆதரவு கட்சியின் ஆதரவு இருப்பது நல்லது என்ற கருத்தில்தான் அவர் திமுகவில் சேர்ந்து உறுப்பினராகி திமுகவின் கூட்டங்களுக்கு போவது, அதனுடைய தேர்தலுக்கு நிதி தருவது பணம் செலவழிப்பது என்று இருந்து வந்தார் .ஆனால் மக்களிடையே ரசிகர்களிடையே இருந்த வரவேற்பை பார்த்து நம்முடைய கட்சி ஜெயிக்க வேண்டுமென்றால் எம்.ஜி.ஆர் வரவேண்டும் என்பதை உணர்ந்து எம்.ஜி.ஆரை பிரச்சாரத்துக்கு மக்கள் முன்னிலையில் திமுகவின் சார்பில் நின்று எங்களுக்காக ஓட்டு கேளுங்கள் என்று அழைத்தவர் அண்ணா. அவர் எம்.ஜி.ஆரை மிகச் சரியாக எடை போட்டிருந்தார். அதனால் அவர் திமுகவின் அழியாப் புகழ்பெற்ற தலைவரானார். ஆனால் எம்.ஜி.ஆரின் செல்வாக்கை தவறாக எடை போட்ட கலைஞர் எம்.ஜி.ஆர் கட்சி ஆரம்பித்து அவர் காலம் முடியும் வரை அவரை எதிர்க்க முடியாமல் வெற்றி பெற முடியாமல் தோற்றுப் போய் சுருண்டு கிடந்தார் .ஒரு தலைவருக்கு கணிக்கும் திறன் இருக்க வேண்டும் அவரால் நன்மை ஏற்படும் தீமை ஏற்படும் என்பதை புரிந்து

கொள்ளும் சக்தி அண்ணாவுக்கு இருந்தது. அது கருணாநிதிக்கு இல்லை. அண்ணா நெடுஞ்செழியன் போன்றோர் பட்டம் பெற்றவர்கள் வரலாறு பொருளாதாரம் ஆகிய இரண்டிலும் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் அந்தக் காலத்தில் ஒரு இளங்கலைப் பட்டம் பெறுவதே மிகக் கடினம் ஆனால் இவர்கள் முதுகலைப் பட்டம் பெற்றதோடு இரண்டு துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தனர். திமுகவில் படித்தவர்கள் நிறைய பேர் இருந்தனர். இவர்களின் பேச்சில் மயங்கி இவர்களின் பேச்சின் நியாயத்தை உணர்ந்து ஓட்டு போடாதவர்கள் எம்.ஜி.ஆரின் சினிமா கவர்ச்சிக்கு ஓட்டுப் போடப் போகிறார்கள் என்று சிலர் அண்ணாவைப் பார்த்து கேட்டதுண்டு. **ஆனால் அண்ணா** சொன்னது நாம் மேடைகளில் முழங்கினார் 2000 3000 பேர் தான் கேட்பார்கள்; **ஆனால்** எம்.ஜி.ஆர் முகத்தைப் பார்த்தால் இரண்டு மூன்று லட்சம் பேர் வந்து அவருடைய அவரை நம்பி வாக்களிப்பார்கள். என்றார்.அதுதான் நடந்தது. எம்.ஜி.ஆர் தேர்தல் பிரச்சாரத்திற்கு வரவும் அவரைப் பார்க்க வந்த கூட்டம் அவர் வார்த்தையை நம்பியது அண்ணா கலைஞர் நெடுஞ்செழியன் அன்பழகன் போன்றோரின் வார்த்தைகளில் இல்லாத நம்பிக்கை எம்.ஜி.ஆரின் வார்த்தைக்கு மட்டும் எப்படி வந்தது?

திமுகவில் நம்பிக்கை வறட்சி

திமுக தலைவர்கள் மக்கள் படும் வேதனைகளை பேசி வந்தனர். மக்களை எதிர்க்க தூண்டினார் போராட்டங்கள் நடத்த வேண்டும் என்றனர். ஆனால் நலிந்து போன ஏழை எளிய மக்கள் மக்களால் போராட்டங்கள் நடத்தும் அளவுக்கு அவர்களுக்கு பொருளாதாரச் செல்வாக்கு இல்லை. இளைஞர்கள் இளம் ரத்தத்தில் பிடிப்பினால் திமுகவுக்கு ஆதரவளித்தாலும் கூட பெரியவர்களும் பெண்களும் திமுகவை கண்டால் இவர்கள் கலகக்காரர்கள்

என்றே ஒதுங்கினர். கருப்புச் சட்டைக்காரர் என்றாலே கலகக்காரர் என்ற கருத்தில் சற்று ஒதுங்கி இருந்தனர். மேலும் இக்கால கட்டத்தில் கம்யூனிஸ்டுகளும் பேராதரவுடன் இருந்து வந்தனர் காங்கிரஸ் எதிர்க்கட்சியாக கம்யூனிஸ்ட் இருந்து வந்தது கம்யூனிஸ்ட் தொழிலாளர்களின் கட்சியாக இருந்தது. அவர்களை ஏழைகளைப் பணக்காரர்களுக்கு எதிரிகள் ஆக்கினர் . ஆதிக்க சாதியினரை ஏழைகளுக்கு எதிராளியாக்கிய காரணத்தினால் அவர்களுடைய பேச்சு புரட்சி செங்கொடி சிவப்பு சட்டை என்ற அளவில் இன்னும் கொஞ்சம் ஆக்ரோஷமாக உற்சாகமாக இருந்து வந்தது.

எம்.ஜி.ஆர் என்னும் அதிசயம்

திமுகவும் கம்யூனிஸ்டும் செய்யாத ஒரு செயலை ஒரு அற்புதத்தை அதிசயத்தை எம்.ஜி.ஆர் செய்தார். அதனால்தான் மக்கள் எம்.ஜி.ஆர் வார்த்தையை கேட்டு ஓட்டு போட்டனர் . அண்ணாவும் கலைஞரும் நெடுஞ்செழியனும் இன்னும் மற்ற அன்பழகன் மதியழகன் போன்றோரெல்லாம் படித்தவர்களாக இருந்தாலும் சிறந்த பேச்சாளர்களாக கலைஞர்களாக நாவலாசிரியராக பத்திரிகையாளர்களாக எழுத்துத்துறை நாடகம் மேடை என பல்துறை வித்தகராக இருந்தாலும் அவர்கள் நிதி வசூல் செய்து தான் நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இறந்துபோன தொண்டர்களுக்கு உதவினர். எவரிடமும் சொந்த பணம் கிடையாது. சொந்தப் பணம் வைத்திருந்தவர்களும் அதை அதிகமாக பிறருக்குக் கொடுப்பதும் இல்லை. தேர்தல் பணியில் ஈடுபட்ட திமுகவினர் சொந்த காசில்தான் டீ வாங்கி குடித்துக் கொண்டு வேலை பார்த்தனர். அந்த காலகட்டத்தில் திமுகவின் நிலை எளிமையாகத் தான் இருந்தது. கட்சிக்கு பெரிய சொத்து அறிவாலயம் போன்ற கட்டிடங்கள் எதுவும் கிடையாது இவர்களிடம் பேச்சு மட்டும்தான் இருந்தது அரசியல் செல்வாக்கும் அல்லது

வினைத்திட்பம் செயலாற்றல் என்று எதுவும் கிடையாது. இவர்கள் மேடையேறி பேசினார்கள். எங்கள் பேச்சுக்களை கேட்டால் உங்கள் வாழ்க்கை மேம்படும் என்று கூறினார்கள். எம்.ஜி.ஆர் மட்டுமே பணம் படைத்தவராக பலருக்கும் அள்ளிக் கொடுக்கும் வள்ளலாக படங்களில் அதிகாரம் படைத்த நினைத்ததை நடத்திக் காட்டும் நெஞ்சுரம் படைத்தவராக ஏழைகளையும் பெண்களையும் ஆதரிப்பவராக இருந்து வந்தார். இதுதான் ஒரே வித்தியாசம்.

மேடையில் நடித்த பேசிய திமுக தலைவர்கள் எவரிடமும் பணமும் இல்லை செயல்திறமும் இல்லை ஆனால் தீவிரமாக பிரச்சாரம் செய்யக்கூடிய உத்வேகமும் உற்சாகமும் இருந்தன எம்.ஜி.ஆர் தன் படங்களில் வீரனாக நடித்தார். ஏழைகளுக்கு உதவினார். நினைத்ததை நடத்திக் காட்டினார் .பெண்களை காப்பாற்றினார். உழைப்பவரே உயர்ந்தவர் என்பதை நிலைநாட்டினர். அவர் செய்து காட்டியவை அனைத்தும் ஆக்கபூர்வமானவையாக இருந்தன. அவர் ஒரு பாசிட்டிவ் எனர்ஜியாக விளங்கினார் . அவருடைய படத்தை பார்த்தால் மக்களுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. உள்ளத்தில் தெம்பு கிடைத்தது. உடலுக்கு உரம் சேர்ந்தது. நாமும் பிழைத்து எழுந்து விடலாம் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. எம்.ஜி.ஆரின் மீது நல்லெண்ணம் உண்டாயிற்று. இவற்றை இவற்றில் எதனையும் எந்த ஒன்றையும் திமுகவினரின் படைப்புகள் செய்யவில்லை. இதுதான் வித்தியாசம்.

திமுகவினர் துன்பத்திற்கான காரணத்தை மாற்றி கூறினர். அது உங்கள் தலைவிதி அல்ல; அதை நீங்கள் நம்பியிருக்கும் மதம், அந்த மதத்தை உருவாக்கிய பிராமணர்கள் உருவாக்கினர் என்று காரணத்தை மாற்றி உரைத்தனர். காரணம் எதுவாக இருந்தாலும் ஏழை எளியோர் மற்றும் பெண்கள் மாற்றத்தை தானே விரும்புவார்கள். அந்த காரியத்தை செய்து காட்டியவர்

எம்.ஜி.ஆர். அவர் படங்களில் தான் நடித்தார். ஆனால் **அந்தப் படங்கள் மக்களுக்கு உற்சாகத்தை ஊட்டின. பிழைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை காட்டின. அவர் படங்களில் கதாநாயகிகள் சாகவில்லை; கதாநாயகன் சாகவில்லை; ஏழைப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு தற்கொலை செய்து கொள்ளவில்லை; குடியானவர்கள் தங்கள் குடிசைகளையும் இழந்து குழந்தைகளை பறிகொடுத்து பரிதவித்து நிற்கவில்லை;** இப்படியான காட்சிகள் ஓரிரண்டு அவர் படங்களில் இடம் பெற்றாலும் அவர்களின் துன்பத்தை போக்கி கண்ணீரைத் துடைத்தார்; ஆக **நமக்கு வரும் இந்த துன்பத்தை தீர்க்கக் கூடியவர் எம்.ஜி.ஆர் என்ற எண்ணம்** மக்கள் மனதில் ஒரு கனவு போல கற்பனையாக இருந்து கொண்டிருந்தது அவரை நேரில் வந்து நீங்கள் திமுகவுக்கு வாக்களியுங்கள் என் பேச்சை நம்புங்கள் அவர்கள் உங்களுக்கு நல்லாட்சி தருவார்கள் என்று எடுத்துக் கூறியபோது தனக்கு மகிழ்ச்சி அளித்த ஒருவருக்கு தானும் திரும்ப ஏதாவது அளிக்க வேண்டும் என்ற நன்றி **உணர்வுடன் மக்கள் அவர் பேச்சைக் கேட்டு ஓட்டு போட்டனர்; அவர்கள் திமுகவை நம்பி ஓட்டு போடவில்லை; செய்நன்றி கடனாக நினைத்து வாக்களித்தனர். இதுதான் எம்.ஜி.ஆருக்கும் மக்களுக்கும் இருக்கக்கூடிய பிணைப்புக்கான அடிப்படைக் காரணம்.** எம்.ஜி.ஆர் மக்களை மகிழ்ச்சிப் படுத்தினார். பதிலுக்கு மக்கள் எம்.ஜி.ஆர் கேட்ட மகிழ்ச்சியை அவர் சொன்னதை செய்தனர். நன்மை செய்தால் நன்மையே நடக்கும் என்ற கோட்பாட்டின்படி எம்.ஜி.ஆர் மக்களுக்கு மகிழ்ச்சி என்ற நன்மையை செய்தார்; மக்களும் அவருக்கு கீழ்ப்படிதல் என்ற பண்போடு வாக்கு அளித்தல் என்ற நன்மையை செய்தனர். அவர்களிடம் இருந்தது வாக்கு மட்டும்தான். எம்.ஜி.ஆருக்கு தருவதற்கு பணமும் வேறு வசதிகளும் அவருக்கு இல்லை .எம்.ஜி.ஆர் ரசிகர்கள் திமுகவுக்கு தங்கள் உடல் பொருள் ஆவியை கொடுத்து உழைத்தனர்.

அதற்கு காரணம் எம்.ஜி.ஆருக்கு அவர்கள் செலுத்த வேண்டிய நன்றிக் கடன் என்று அவர்கள் நினைத்தனர் நம்பியிருந்தனர்.

1951 இல் மர்மயோகி படத்தில் நடித்தபோது அவர் பேசிய கரிகாலன் குறி வைத்தால் தவறமாட்டான் தவறும் என்றால் குறி வைக்க மாட்டான் பஎன்ற வசனம் அவரை ஒரு முழு செயல்வீரராக காட்டியது. அவர் மனது வைத்தால் எதுவும் நடக்கும்; அவர் நினைத்ததை முடிப்பவன்; அவர் தோல்வியே காணாதவர். தோல்வி அவரிடம் தோல்வியடையும் என்று நம்ப வைத்தது அந்த சினிமா .

1954 இல் அவர் மலைக்கள்ளன் படத்தில் நடித்தபோது பல வேடங்களில் வந்து கிராமத்து மக்களுக்கு நன்மை தரும் செயல்களில் ஈடுபடுவர் அப்படத்தில் எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே என்று அவர் காங்கிரஸ் ஆட்சியை விமர்சித்து பாடியபோது மக்கள் அனைவரும் அவரோடு சேர்ந்து பாடினர் அவர்கள் மனதில் என்ன நினைத்து



இருக்கிறார்களோ அதை அவர் பாடினார் அவர்கள் பாடினார்கள்' எம்.ஜி.ஆர் ரசிகர்கள் கூடுவிட்டு கூடு பாய்ந்தனர்; ரசிகர்களின் மனதுக்குள் எம்.ஜி.ஆர் கூடு விட்டுக் கூடு பாய்ந்தார்; ரசிகர்களின் மனதில் நிரந்தரமாக எம்.ஜி.ஆரிடம் பெற்றார்;ஒவ்வொரு படம் பார்க்கும் போதும் ஒவ்வொரு ரசிகனும், தானே எம்.ஜி.ஆர் மாறி வீரதீரச் செயல்களைச் செய்து முடித்து படம் முடிந்து திரையரங்கை விட்டு வெளியேறும்போது படம் பார்த்த அத்தனை ரசிகர்களும் எம்.ஜி.ஆர் போலவேதான் வந்தனர்' அவர்களுக்குள் எம்.ஜி.ஆரின் ஆவி குடி கொண்டது போல எம்.ஜி.ஆரை போலவே கைகளை அசைத்து ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் வீரவசனம் பேசி கொண்டு வந்தனர்.

அண்மையில் வந்த ஒரு புது படத்தில் வடிவேலு படத்துக்கு போகும்போதே வேட்டியை உள்ளாடைக்கு மேலே ஏற்றி கட்டி இருப்பதை பார்த்த ஒரு போலீஸ்காரர் வடிவேலு அழைத்து எங்கே போகிறாய் என்று கேட்பார் நான் படகோட்டி படம் பார்க்க எம்.ஜி.ஆர் படம் பார்க்கப் போகிறேன் என்று வடிவேலு பதிலளிப்பார்.அப்போது நீ படம் பார்க்கப் போகும் போதே இப்படி போனால் வரும்போது எப்படி வருவாய் என்று ஒரு கேள்வி கேட்பார்.



இந்த கேள்வி மிக முக்கியமான ஒரு வரலாற்றுப் பதிவு. படம் பார்க்கப் போகும்போது எம்.ஜி.ஆர் ரசிகர்கள் தங்களுக்குள் எம்.ஜி.ஆரை உருவேற்றி கொண்டு தான் போவார்கள் படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது அத்தனை பேரும் எம்.ஜி.ஆர் களாகத்தான் வெளியே வருவார்கள் அவ்வளவு உற்சாகமும் மகிழ்ச்சியும் பெற்றுக் கொண்டு வெற்றி வீரர்களாக வெளியே வருவர்.

காங்கிரஸ் கட்சியின் மீது இருந்த வெறுப்பு எத்ததனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே என்ற பாட்டில் எதிரொலித்தது. இந்தப் பாட்டை மற்றவர்களும் மக்களும் பாடி அந்த வெறுப்பை தீத்துக்கொண்டனர். இந்த பாட்டில் வரும்

ஊரெங்கும் பள்ளிகள் கட்டுவோம் கல்வியில்லாத பேரை இல்லாமல் செய்வோம்

கணக்காக பல தொழில் பயிலுவோம்

கஞ்சிக்கில்லை எனும் கொள்கையை மாற்றுவோம்





எனவரும் பல்லவி திமுக ஆட்சிக்கு வந்தால் நாங்கள் இதையெல்லாம் செய்வோம் என்று தேர்தல் வாக்குறுதி அளிப்பது போல இருந்தது. இந்தப் பாட்டு தான் முதன்முதலாக திமுகவின் பிரச்சார பாடலாக எம்.ஜி.ஆர் படத்தில் அமைந்தது. இந்தப் பாட்டை கேட்ட மக்கள் எம்.ஜி.ஆர் தான் திமுக; திமுக தான் எம்.ஜி.ஆர் என்பதை மிகச் சரியாக புரிந்து கொண்டனர் . திமுக கட்சி ஆட்சிக்கு வந்தால் நமக்கு நன்மைகள் நடக்கும் என்று உறுதியாக நம்பினர்.

1958 எம்.ஜி.ஆர் தன் சொந்தப் படமான நாடோடி மன்னன் படத்தை வெளியிட்டதும் அவர் மன்னனாக வந்து நாட்டுக்கான சட்டதிட்டங்களை இயற்றிய போதும் படம் பார்த்தவர்கள் திமுக ஆட்சிக்கு வந்தால் எம்.ஜி.ஆர் சொன்னபடி எல்லாம் நடக்கும் என்று நம்பினர். அதனால படத்தைத் திரும்பத் திரும்பச் சென்று பார்த்து 250 நாட்கள் ஓட வைத்து மாபெரும் வெற்றிப்படமாக்கினர். மதுரை மாநகரில் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய திரையரங்கமான தங்கம் திரையரங்கில் இப்படம் 250 நாட்கள் ஓடியது. எம்.ஜி.ஆர் திரை உலகின் வசூல் சக்கரவர்த்தியாக அசைக்கமுடியாத ஆளுமை படைத்தவராக உயர்ந்தார் .

ஒருமுறை அறிஞர் அண்ணாவிடம் நிருபர்கள் 1967ல் திமுக வெற்றி பெற்ற பிறகு அண்ணாவிடம் நிருபர்கள் 'உங்கள் ஆட்சியின் கொள்கை என்ன?' என்று கேட்டார் அப்போது அறிஞர் அண்ணா "நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆர் சொல்லியிருக்கிறாரே. அதுதான் நாங்கள் செய்யப்போவது" என்றார் பத்தாண்டுகளுக்கு முன்பாக 1958ல் வந்த படம் நாடோடி மன்னனின் வசனங்களை 1967இல் அண்ணா நினைவு படுத்துகிறார். எம்.ஜி.ஆர் சொன்னவை தான் எங்கள் ஆட்சியின் சட்டதிட்டங்கள் என்கிறார் . இந்த 10 ஆண்டுகளும் மக்களும் இந்த நாடோடி மன்னன் வசனங்களை மறக்கவில்லை; அதைப்போல அண்ணாவும் மறக்கவில்லை, அண்ணா நினைவில் அந்த வசனங்கள் இருந்ததால்தான் அவர் அந்த வசனங்களை எங்கள் ஆட்சியின் சட்டதிட்டங்கள் என்றார் அன்றைக்கே .

1977இல் எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு வந்த போதும் நாடோடி மன்னன் படத்தில் பேசிய வசனங்களை போல சில வாக்குறுதிகள எடுத்துரைத்தார். அண்ணா சிலையின் முன்பு மேடையில் ஏறி நின்ற படி இந்த வாக்குறுதிகளை கூறி மக்கள் முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார் . இதுதான் உண்மையான பதவியேற்பு என்று அப்போது தெரிய வந்தது. அதற்கு முன்னர் ஆளுநர் மாளிகையில் பதவிப் சம்பிரதாய பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டாலும் கூட மக்கள் முன்னிலையில் அவர் நாடோடி மன்னன் படத்தில் வரும் வசனங்களை பிரதிபலிக்கும் வகையில் பேசியதும் மக்களுக்கு உற்சாகம் பிறந்தது. மக்கள் தாம் நினைத்ததை நடத்திக்காட்டி விட்டதாக மகிழ்ந்தனர். எம்.ஜி.ஆர் என்ற நம்பிக்கை நட்சத்திரம் அவர்கள் வாழ்வில் இன்ப ஒளி வீசியது.



முனுசாமி — மாணிக்கம்

மாணிக்கம்:— அண்ணே, எனக்கு ஒரு பெண் பார்க்கணும் அண்ணே.

முனுசாமி:— எதுக்கடா அந்த வம்பு?

மாணி:— இல்லே அண்ணே, கலப்பு கல்யாணம் பண்ணிக்கிட்டா, எல்லாச் செலவையும் சர்க்காரே ஏத்துக்கிருங்களாம்.

முனு:— அப்படின்னு எனக்கும் ஒண்ணு பாரு தம்பி. ஆமா, இந்தச் சட்டம் நம்ம ஊர்லே எப்ப வந்துது?

மாணி:— நாடோடி மன்னன் ராஜாங்கத்திலே, நல்ல சட்டமெல்லாம் செய்யறுங்க அண்ணே!

முனு:— அடடே! படம் பார்த்துட்டியா? எப்படி?

மாணி:— முதுகு வலிக்குது; முழுங் காலக் கடுக்குது.

முனு:— ஏண்டா, படம் போரா?

மாணி:— போரா? போட்டேன்னுத் தெரியுமா? டிக்கெட்டு கிடைக்கிறதுக்குத் தான் அந்தப் பாடு. கடைசியிலே 2-62 டிக்கட்டே வாங்கிட்டேன்.

முனு:— உன் பெருமை போதும்டா! படம் எப்படி?

மாணி:— பாதி கறுப்பு, பாதி சிகப்பு!

முனு:—படத்தைப் பத்திக் கேட்டா, கொடியைப் பத்திச் சொல்றியே?

மாணி:— படத்தைப் பத்திதான் சொல்றேன். பாதி படத்தைக் கறுப்பிலே எடுத்திருக்காங்க, மீதிப் படத்தைக் கலர்லே எடுத்திருக்காங்க.

முனு: — வர்ணப் பட சீசன் வந்துடுச்சு தம்பி, இனிமே எல்லாம் அப்படித் தான் இருக்கும். ஆமாம், ரொம்பப் பெரிய படமாமே?

மாணி:— நீளத்திலே மட்டுமில்லே அண்ணே, தரத்திலேயும் அப்படித் தான். நாலு வருசமா எடுத்திருக்காங்க. இரண்டு எம்.ஜி.ஆர். வராங்க! அதுக்குத் தகுந்த நீளம் வேண்டாமா? கை தட்டித் தட்டி வலி கண்டு போச்சு அண்ணே!

முனு:— ஆமாம், ஜோடி யார்?

மாணி:— எம்.ஜி.ஆர். – பானுமதி; எம். ஜி. ஆர். - எம். என். ராஜம்; எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி; அப்புறம் எம். ஜி. ஆர். — எம். ஜி. ஆர்!

முனு:— சபாஷ், அப்பொ ரொம்ப நல்லாருக்குமே!

மாணி:— சும்மா கேலி பண்ணுறீங்க அண்ணே! நீங்க இதுவரைக்கும் பார்க்காமலா இருப்பீங்க?

முனு:— சத்தியமா பார்க்கல்லே தம்பி!

மாணி:— என்ன த்ரில்லு! என்ன ஸ்டண்டு! ஒரு சீன்லே எம். ஜி. ஆர். ஒரு பாலத்தையே ஒரு கையாலே இழுத்துப் பிடிச்சு விழாம நிறுத்தறுரு! இன்னொரு சீன்லே, கோட்டைக்குள்ளாற தண்ணி வந்துடுது. அங்கே ஒரு எம். ஜி. ஆரை இன்னொரு எம். ஜி. ஆரு தூக்கிக்கிட்டு நூல் ஏணி வழியா ஏறி வெளியே வராரு! அப்புறம் அண்ணே, சொன்னுக் கூட நீங்க நம்பமாட்டீங்க, எம். ஜி. ஆரும் எம். ஜி. ஆரும் கை குலுக்குறுங்க. அந்த இடத்திலே போட்டோக்ராபி என்னையே குலுக்கிடுச்சு.

முனு:— எம். ஜி. ஆருக்கு அவரே கை கொடுத்து உதவுருர்னு சொல்லு. எப்படி தம்பி அதைப் படம் எடுத்தாங்க?





வெற்றி திருமகன்
எம்ஜி.ஆர்
முனைவர் செ. இராஜேஸ்வரி
வெற்றித் திருமகன்
நூல் வரிசை - 2
என்றுமே
MG.R
நிழல்
நிஜம்
நிரந்தரம்
முனைவர் செ. இராஜேஸ்வரி
வெற்றித்திருமகன் நூல் வரிசை - 3
சிக்குமங்கு சிக்குமங்கு
சச்ச பாப்பா...
முனைவர்
வெற்றி திருமகன் நூல் வரிசை 4
வீரமகன் போராட
வெற்றிமகள் பூச்சூட
முனைவர் செ.இராஜேஸ்வரி
மகளிர் போற்றும்
மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்
முனைவர் செ. இராஜேஸ்வரி
எம்.ஏ.,எம்.பில், பிஹெச்.டி
நூல்வரிசை - 6
எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி
முனைவர் செ. இராஜேஸ்வரி
எம்.ஏ.,எம்.:பில்., பிஹெச்.டி
பதிப்பகம்
சந்திரோதயம் பதிப்பகம்
3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018
தொலைபேசி எண் : 7010997639